ஏப்ரல் 2021

@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Vol.3, Issue 11 | Annual Subscription ₹420

Rotary



பரவசம்

படம்: Dr *சிவநாராயணன் ஜோஷி*

உள்ளே

12 **100 இளம் பெண்களுக்கு அழகுக்கலை பயிற்சி அளிக்கும் RID 3232**
“சுந்தரி திட்ட”த்தை அறிமுகப்படுத்தி, இந்த ஆண்டு 100 இளம் எண்களுக்குப் பயிற்சியளிக்கிறது இந்த மாவட்டத்தின், பெண்களுக்கு ஆற்றலளிக்கும் குழு.

20 **கங்கை ஆற்றைப்பற்றிக் கற்றுக்கொள்ள ஒரு மகிழ்ச்சியான வழி**
அலகாபாதைச் சேர்ந்த 100 சேரிக் குழந்தைகளைக் கங்கைக் காட்சியகத்துக்கு அழைத்துச்சென்று இந்தியப் பண்பாட்டை விளக்குகிறது RC அலகாபாத் மிட்-டவுன்.

24 **மாவட்டத் தலைவர்களைத் தலைமையேற்கத் தயார் செய்தல்**
இலக்கு அமைக்கும் கருத்தரங்கம் லக்ஷ்யா: மூத்த ரோட்டரி தலைவர்கள் வழிகாட்டுதலுடன் தங்கள் ஆண்டைத் திட்டமிடும் 4, 5, 6 மற்றும் 7வது பகுதிகளுக்கான DGEக்கள், DGNகள்.

34 **அமைதி, சமாதானம் நம்மிலிருந்து தொடங்கட்டும்!**
மெய்நிகர் TRF கருத்தரங்கில் அறக்கட்டளை, அதன் நிதியளித்தல் திட்டங்களைப்பற்றிக் கற்கும் பங்கேற்பாளர்கள்.

40 **உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியில் புதிய சாதனை படைக்கும் இந்திய ரோட்டரி**
பால் ஹாரிஸ் ஒரு மாதச் சவாலுக்காக நாற்பது RI மாவட்டங்கள் 6,087 புதிய ரோட்டரியன்கள், 79 புதிய சங்கங்களைச் சேர்த்தன.

44 **அலங்கார மீன் பண்ணை வழியாகப் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்**
கிராமப்புறப் பெண்களுக்கு அரிய வகை மீன்களை வளர்த்துப் பிழைக்கக் கற்றுத்தருகிறது RC புபனேஸ்வர் ஏகாம்ரா க்ஷேத்ரா.

62 **நல்ல செய்தி கொண்டுவரும் பூம் பூம்மாடு!**
தமிழ் நாட்டில் வருங்காலத்தைச் சொல்லிப் பிழைக்கிற, கிட்டத்தட்ட மறக்கப்பட்டுவிட்ட இனமாகிய பூம் பூம் மாட்டுக்காரர்களைப்பற்றிப் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

64 **சங்கீத சாகரம் பீம்சென் ஜோஷி!**
இந்த மாதம், நம்முடைய இசை மெட்டு பத்தியில் புகழ் பெற்ற இந்துஸ்தானி இசைக்கலைஞர் ஒருவரைப்பற்றிப் படிக்கலாம்.

அட்டைப்படத்தில்: RID 3232ன் சுந்தரி திட்டத்தின் கீழ் ஆதரிக்கப்படும் மாணவர்கள் சென்னையில் அழகுக்கலைப் பயிற்சி பெறுகிறார்கள்.

புகைப்படம்: ஜெய்ஸ்ரீ

ஒரு மிகச் சிறந்த இதழ்



மார்ச் இதழின் அட்டையில் ருக்சர் கட்டூன் என்ற அழகான சிறு பெண் முகம் முழுக்க அப்பாவித்தனத்துடன் மிதிவண்டியில் அமர்ந்திருக்கும் காட்சி பார்வைக்கு இனிதாக இருக்கிறது. இந்தப் புகைப்படத்தைத் தேர்ந்தெடுத்தவருக்குப் பாராட்டுகள்.

ரோட்டரியன்களுக்கும் ரோட்டராக்டர்களுக்கும் இடையிலான உறவைச் சுட்டிக் காண்பித்துள்ளார் RI தலைவர் ஹோல்கர் நாக். 1979–80 இலிருந்து சென்ற ஆண்டுவரை இடைவெளியின்றி எங்கள் சங்கத்தின் RYLA உடன் நான் பணியாற்றியிருக்கிறேன் என்றமுறையில், அவருடைய கருத்தை நான் உறுதிப்படுத்துவேன். 80 வயதைக் கடந்த நான், RYLA நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில், அந்த மூன்று நாட்களும் இளமைக்குத் திரும்பினேன், எனக்குள் ஆற்றல் பொங்கியது.

உங்களுடைய ஆசிரியர் பக்கம் உலக மகளிர் தினத்தைப்பற்றிப் பேசுகிறது, புதுமையான தலைவரான ஏஞ்செலா மெர்க்கெலைப்பற்றிக் குறிப்பிடுகிறது, இது மிகப் பொருத்தமானது. 2022–23ல் ஜெனிஃபர் ஜோன்ஸ் தலைமையில் ரோட்டரியில் பல புதிய விஷயங்களைக் காண இயலும் என்று நாம் நம்புகிறோம். எங்கள் சங்கத்தில், இதுவரை குர்ஷித் மஜீத் என்ற ஒரு பெண் தலைவர்தான் பணியாற்றியுள்ளார், ராஜீ தனசேகரன் தலைவராக வரவுள்ளார்.

பாகிஸ்தான் PM இம்ரான்கானுடைய படத்தைப் பார்க்கும்போது, RC லாகூர் காரிசன், பாகிஸ்தானுடன் நாங்கள் இணைந்து நடத்திய நல்ல கூட்டத்தைப்பற்றி உங்களிடம் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இளம்பிள்ளைவாதத் தடுப்பு நிதி எப்படி செலவு செய்யப்படுகிறது என்ற உங்களுடைய பெட்டிச் செய்தியைப் படிக்கும் போது, நாம் கடவுளின் பணியைச் செய்கிறோம் என்ற மன நிறைவு எனக்குக் கிடைத்தது. ஜாம்பியா மலேரியா, கோவா நூலகத்துக்குப் புத்தகங்கள் நன்கொடை, கரூர் போர் நினைவகம், கோயம்பத்தூர் பற்சக்கர (கியர்) மனிதர், இந்திய மருந்து நிறுவனங்களுக்கான வாய்ப்புகள், நீடித்த பன்னாட்டு அமைதி உள்ளிட்ட மற்ற கட்டுரைகளும், ரோட்டரி செய்திகள் குழுவின் பங்களிப்புகளும் இந்த இதழைச் சிறப்பாக்கின.

நன் நாராயணன், RC *மதுரை வெஸ்ட்* — D 3000

11 வயது ருக்சருக்கு RC ஹௌரா மிதிவண்டி வழங்கியதை அறிந்து மகிழ்ந்தோம். இளம்பிள்ளை வாதத்தை உலகிலிருந்து அகற்றுவதில் ரோட்டரி பாராட்டக்கூடிய முன்னேற்றம் கண்டுள்ளது, இந்தப் பிரச்சனையைக் கிட்டத்தட்ட நீக்கி விட்டது. இதற்குக் கேட்ஸ் அறக்கட்டளை வழங்கியுள்ள உதவியும் பாராட்டவேண்டியது.

ஜெர்மனியின் ஏஞ்செலா மெர்க்கெல், நியூசிலாந்தின் ஜசிந்தா அர்டெர்ன் ஆகியோருடைய வெவ்வேறு பாணித் தலைமைப்பண்புகளை ஆசிரியர் பக்கம் விளக்குகிறது.

இயக்குநர் செய்தியில் RI இயக்குநர்கள் இருவரும் நீர், முறையான தூய்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்கள். கோயம்பத்தூரின் பற்சக்கர மனிதரைப்பற்றிய ஜெய்ஸ்ரீயின் கட்டுரை ஆர்வத்தைத் தூண்டியது. ஆஃப்கானிஸ்தானைப் பற்றியும், அதை மறுகட்டமைப்பதில் இந்தியாவின் உதவியைப்பற்றியும் விளக்கிய கட்டுரை பாராட்டவேண்டியது. அன்றைய துணிவான, துள்ளலான மெல்லிசைப் பாடல்களின் அரசியாகிய ஆஷாபற்றிய கட்டுரை சுவையாக அமைந்தது.

ஃபிலிப் முலபொனெ M T,
RC *திரிவேன்ட்ரம் சப்அர்பன்* — D 3211

மார்ச் இதழின் அட்டையில் ருக்சர் கட்டூன் மிதிவண்டி ஓட்டும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தேன். அவளுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தைக் கடவுள் வழங்குவார். ருக்சருக்கு மிதிவண்டிப் பரிசு வழங்கிய RC *ஹௌராவுக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.*

ராமகிருஷ்ணா, RC *புத்தூர்* — D 3181

இந்தியா மதிக்கப்படுகிற ஆஃப்கானிஸ்தான் என்ற கட்டுரை ஆர்வத்தைத் தூண்டியது. ஆஃப்கான் பெண்கள் தங்கள் சொந்த வீட்டில்தான் மிகுதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள், அவர்களுடைய தந்தை, உடன் பிறந்தவர், கணவர் தான் அவர்களை மிகுதியாகத் துன்புறுத்துகிறார்கள் என்கிற செய்தி மிகவும் வருந்தத்தக்கது.

அபிஜீத் ஜோக், RC *புணே சவுத்* — D 3131

ஊக்கம் அளிக்கும் பேட்டி

கனவுகளை வாழ்தல் என்ற தலைப்பில் அமைந்த RIPE சேகர் மேத்தாவுடனான பேட்டி ஊக்கமளித்தது. RI தலைவராக வரும் ஒருவர் ஓராண்டு என்கிற குறுகிய காலகட்டத்துக்குள் இந்நிறுவனத்தில் மிகப் பெரிய மாற்றங்களைச் செய்வார் என்று எதிர்பார்க்க இயலாது என்று அவர் தெளிவாகக் கூறுகிறார், அதே நேரம், 1.2 மில்லியன் உறுப்பினர்களும் சமூகத்துக்கு இன்னும் நன்றாகச் சேவை செய்ய அவர்களைக் கண்டிப்பாக ஊக்குவிக்கலாம் என்கிறார். ஒரு ரோட்டரி ஆண்டில் ஒருவர் பெறக்கூடிய மிகச் சிறந்த பொறுப்பு, சங்கத் தலைவர் பொறுப்புதான் என்கிற அவருடைய எண்ணம் எனக்குப் பிடித்திருக்கிறது. உலக அளவில் உறுப்பினர் எண்ணிக்கையை 1.3 மில்லியனாக உயர்த்தவேண்டும் என்பதில் தொடங்கி அவருடைய கனவுகள் அனைத்தும் நனவாகும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

R ஸ்ரீனிவாசன், RC மதுரை
மிட்-டவுன் — D 3000

ஒரு மிகச் சிறந்த எழுத்தறிவுத் திட்டம்

RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸின் முன்னாள் தலைவர் ரவிசங்கர் டகோஜு, பனாஜியில் உள்ள மைய நூலகத்துக்கு நூல்களை நன்கொடையாக வழங்குவது பற்றிய கட்டுரை கண்டிப்பாகப் படிக்க வேண்டியது. உண்மையில் இது ஒரு மிகச் சிறந்த எழுத்தறிவுத் திட்டம்.

N ஜகதீசன், RC ஏலூரு — D 3020

பிப்ரவரி இதழில், ஒவ்வொரு துளியும் முக்கியம் என்கிற கட்டுரை இந்தியர்கள் எல்லாருக்குமானது. இந்தக் கட்டுரையை ரோட்டரி சங்கங்கள் அச்சிட்டு வழங்கவேண்டும், அதன்மூலம், நீர்ப் பாதுகாப்புபற்றிய விழிப்புணர்வை உண்டாக்கவேண்டும். மக்கள் சமூக ஊடகங்களில் தங்கள் உதவிக் குறிப்புகள், தீர்வுகளை வழங்கலாம், இதுவும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வெகுவாக உதவும்.

Dr அனில் P சோஹ்னி
RC டொண்டைச்சா சீனியர்ஸ் — D 3060

TCA ஸ்ரீனிவாச ராகவன் தன்னுடைய LBW பத்தியில் இதழியல் துறைக்கு வரும் இளம் இதழாளர்களுடைய எண்ணங்களைச் சரியாகச் சுட்டிக் காண்பித்துள்ளார். கட்டுரைகளும் சிறப்புப் படைப்புகளும் எப்போதும் திருத்துகிற ஒருவருடைய மனநிலையில் திருத்தப்படுகின்றன, அல்லது, பதிப்பாளருடைய எண்ணத்துக்குப் பொருந்தும்படி திருத்தப்படுகின்றன, இல்லாவிட்டால் விளம்பர வருவாய் இழப்பு நேரலாம்.

கோகா தயானந்த்
RC நெல்லூர் — D 3160

தன்னலமற்ற சேவை புரிந்த கோயம்பத்தூரின் ‘பற்சக்கர மனிதரை’ப் பற்றிய கட்டுரை ஆர்வத்தைத் தூண்டியது. உள்ளூர் ரோட்டரி சங்கம் ஒன்று இதில் பங்குபெற்று மக்களுக்கு மதிப்புள்ள சேவையையும் தேவையுள்ளவர்களுக்கு ஆதரவையும் வழங்கினால் நன்றாக இருக்கும். அது ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துவதுடன், புதிய உறுப்பினர்களையும் ஈர்க்கும்.

Dr M V ரவிக்குமார், RC பெங்களூர் கோரமங்களா — D 3190

மிகச் சிறந்த இதழ்

உங்களுடைய மிகச் சிறந்த மார்ச் 2021 இதழைப் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி. இதில் மிகச் சிறந்த கட்டுரைகள் உள்ளன, இவற்றை நான் என்னுடைய ரோட்டரி சங்க உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

PRIP *வில்ஃப் வில்கின்சன்*

டிஜிட்டல் உலகுக்குத் தயாராதல்

RI தலைவர் ஹோல்கர் நாக் பகுதிச் சந்திப்பில் வழங்கிய உரையில் (பிப்ரவரி இதழ்) நாம் “டிஜிட்டல் உலகை ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்று சரியாகக் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நோய்ப்பரவல், ரோட்டரி வளர்வதற்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கும் என்று அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் நமக்கு உறுதியளிக்கிறார். “ஒவ்வொரு துளியும் முக்கியம்” என்கிற கட்டுரை இன்றைய தேவையாகிய நீர்ப் பாதுகாப்புக்கான உதவிக் குறிப்புகளைச் சுட்டிக்காண்பிக்கிறது. சங்கங்கள் PAN அட்டைகளைக் கொண்டிருக்கவேண்டும், KYCக்கு இணங்கவேண்டும் என்கிற தேவையை விளக்கும் குறிப்பு இப்போது மிக அவசியமாகும்.

Dr பொன் முத்தையன்
RC ஆடுதுறை — D 2981

ரோட்டரி ப்ளஸ்: தொடர்ந்து முன்னேறுங்கள்

ஒவ்வொரு மாதமும் மிகச் சிறந்த ரோட்டரி ப்ளஸ் பதிப்பொன்றைக் கொண்டுவரும் உங்களை நான் பாராட்டுகிறேன். இந்தியா முழுவதுமுள்ள சங்கங்கள் செய்யும் வெவ்வேறு திட்டங்களைப்பற்றி இதன்மூலம் நாம் அறிகிறோம்.

V G தியோதர், RC நாசிக் — D 3030

ரோட்டரியன்களுக்குச் சிறந்த யோசனைகளையும், தங்கள் மாவட்டங்களில் சமூக மற்றும் மிகச் சிறந்த பணியைச் செய்யவேண்டும் என்கிற ஊக்கத்தையும் ரோட்டரி ப்ளஸ் அளிக்கிறது.

T D பாட்டியா, RC டெல்லி மயூர் விகார் — RID 3012

திருத்தம்

மார்ச்’21 *இதழில்* (*பக்கம்* 31) DGE *ராஜேஷ் சுபாஷ்* (RID 3204) *மற்றும் அவருடைய மனைவி தீஷ்மா ஆகியோருடைய குடும்பப் பெயர்கள் தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்தப் பிழைக்கு வருந்துகிறோம்.*

We welcome your feedback. Write to the Editor:
rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com**

Messages on your club/district projects, information and links on zoom meetings/ webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** in our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

பூமியை காக்க நம் சேவையை அதிகரிப்போம்

இந்த ஆண்டு, 22 ஏப்ரல் அன்று நாம் பூமி நாளைக் கொண்டாடுகிறோம், இதற்கு ஒரு புதிய நோக்க உணர்வு பிறந்துள்ளது. சுற்றுச்சூழல் என்பது இப்போது ரோட்டரியின் கவனப் பகுதிகளில் ஒன்றாகும்.

அனைத்து மிகச் சிறந்த பணிகளுக்கான தீர்வுகளும் எப்போதும் உங்களிடமிருந்தும் என்னிடமிருந்தும்தான் தொடங்குகின்றன, தனி நபர்கள் என்றமுறையில் நம் நடவடிக்கைகளை மாற்றுவதன்மூலமே நாம் பல விஷயங்களைச் செய்யலாம்: நம் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்கலாம், ஆற்றலைச் சிந்தித்துப் பயன் படுத்தலாம், இப்படி இன்னும் பல. ஆனால் இப்போது, நாம் ஒன்றாகச் சேர்ந்து இன்னும் கூடுதலாகச் செய்யும் ஒரு வாய்ப்பு வந்துள்ளது.

சுற்றுச்சூழலை ஆதரிப்பது ரோட்டரிக்குப் புதிய விஷயம் இல்லை; நம் சங்கங்கள் நெடுங் காலமாக உள்ளூர்த் தேவைகளின் அடிப் படையில் சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்காகப் பாடுபட்டுள்ளன. இப்போது, பணக்காரர்கள், ஏழைகள் என நம் அனைவரையும் பாதிக்கும் பிரச்சனையான காலநிலை மாற்றத்தால், முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு நாம் ஒன்றாகப் பணியாற்றவேண்டியுள்ளது. ப்ரசிலில் வசிக்கும் ஒரு வெனிசுலாப் பொறியாளர், ரோட்டரி அறக்கட்டளையின் தொழில்நுட்ப ஆலோசகர்கள் குழு உறுப்பினரான ஆல்பெர்டோ பலொம்பொ இதுபற்றித் தன்னுடைய பார்வையைப் பகிர்ந்து கொள்கிறார்.

30 ஆண்டுகளாக என்னுடைய பணி, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காகச் சமூகங்கள், கொள்கை அலுவலர்களுடன் இணைந்து பணியாற்றுவது. இன்று, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க உதவுவதற்கான, சமூகங்களைச் சுற்றுச்சூழல் அடிப்படையில் மேலும் நீடித்திருப்பவையாக ஆக்குவதற்கான ரோட்டரியின் வாய்ப்புகள் எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றன.

ஒரு ரோட்டரி, ரோட்டராக்ட் அல்லது இன்டராக்ட் சங்கம் அல்லது ரோட்டரி சமூகக் குழு இயங்கிவரும் ஒவ்வொரு சமூகத்திலும் சுற்றுச்சூழல் சவால்கள் உள்ளன. ரோட்டரி உறுப்பினர்கள் என்றமுறையில், நாம் சுற்றுச்சூழல் நீடித்திருத்தல் பணியாளர்களாக ஆகலாம்.

என்னுடைய சங்கம் உருவான நாளிலிருந்து நீர் மற்றும் சுற்றுச்சூழல் திட்டங்களில் பங்கேற்று வருகிறது. ரோட்டரியன்களுக்கு ஆற்றல் அளிப்பதற்கான வாய்ப்புகளை நாங்கள் தேடுகிறோம், எங்கள் பகுதியிலும் அதைத் தாண்டியும் கூட்டுப்பணிகளை அமைக்கிறோம், அமெரிக்க அளவிலான நீர் வளங்கள் வலைப் பின்னல் மற்றும் உலக நீர் அவை போன்ற குழுக்களுடன் பணியாற்றுகிறோம். உள்ளூர்க் குழுக்கள் நீர், தூய்மை மற்றும் சுகாதார ரோட்டரி செயல் குழுவுடன் (wasrag.org) இணைந்து செயல்பட்டு, பிரெசிலியாவில் நடைபெற்ற 2018 உலக நீர் மன்ற மேசையில் ரோட்டரிக்கு ஓர் இருக்கையைப் பெற்றுத்தந்தார்கள். 2015ல் பிரேசிலின் ரியோ டோசெயில் ஒரு சுரங்க அணை செயலிழந்தபோது ஏற்பட்ட சுற்றுச்சூழல் பேரிடர்களிலிருந்து சமூகங்கள் எப்படி மீளலாம் என்று நாம் அங்கு விவாதித்தோம்.

பூமியைக் கவனித்துக்கொள்ளும் முயற்சி எப்போதும் நிற்காது. இதில் ரோட்டரி ஏற்கெனவே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

ஆல்பர்டோ பலோம்போ
RC *ப்ரசிலியா இன்டர்நேஷனல் ப்ரசில்*

ரோட்டரி அறக்கட்டளையின் ஆதரவு, நம்முடைய சேவையின் இந்தப் புதிய அத்தியா யத்தை வரையறுக்கும். மாவட்ட மற்றும் பன்னாட்டு நல்கைத் திட்டங்களின் வழியாக, சுற்றுச் சூழலுக்கு உதவும் நம்முடைய முந்தைய திட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு நாம் முன்னேறுவோம்.

ரோட்டரி இந்த விஷயத்தில் ஒரு தெளிவான நிலையை எடுக்கவேண்டும், தொலைநோக்குடன் தலைமைப்பண்பை வழங்கவேண்டும் என்று ரோட்டராக்டர்கள், நம் இளைஞர் திட்டத்தில் பங்கேற்போர் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் பெறப்போகும் பிரச்சனைகளுக்கு அறிவார்ந்த தீர்வுகளை நாடி நாம் அவர்களுடன் பணியாற்றுவோம்.

ஹோல்கர் நாக்
RI தலைவர்

வித்தியாசமான இளைஞர்கள்!

2019ம் ஆண்டு டிசம்பர் மாதம், 34 வயதில் பின்லாந்தைச் சேர்ந்த சன்னா மரின், அந்த நாட்டின் பிரதமரானார். உலகின் மிக இளம் வயது பிரதமர் என்ற பெயரைப் பெற்றுள்ளார். இளம் தலைவர்கள், குறிப்பாக பெண்கள் பலர் சர்வதேச அளவில் தலைமைப் பதவிகளைப் பெறுவது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?. 37 வயதில் நியூஸிலாந்தின் பிரதமரான ஜெஸிந்தா ஆர்டெர்ன் (41) எனது முன்மாதிரி. சமூக சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடும் ஒரு முற்போக்கான தலைவர். கிறைஸ்ட்சர்ச் மசூதி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை அவர் கையாண்ட விதம், முஸ்லிம் சமூகத்தினரை மதித்து நடந்துகொண்டது, புதிய கடுமையான துப்பாக்கிச் சட்டங்களை அறிமுகப்படுத்தியது என தனித்துவமான ஆளுகைத் திறனால் உலக அளவில் புகழ்பெற்றார். கோவிட் தொற்றை அவர் கையாண்ட விதம் சர்வதேச அளவில் பலரது பாராட்டுகளைப் பெற்றுத்தந்தது. கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு வயது 49 தான். அவர் மனிதாபிமான குணங்களுடன் தனது தலைமைப்பண்பை நிரூபித்துள்ளார்.

இளம் அரசியல் தலைவர்கள் மட்டுமே நமது மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள் அல்ல. அவர்கள் சமூகத்தில் உயர்ந்த பதவியில் இருப்பதால் அவரைத் தெரிந்துகொள்கிறோம், அவர்களைப் பற்றி பேசுகிறோம். ஆனால், உலகில் அடுத்த 100 பிரபலங்களை பற்றிய பட்டியலை டைம் சஞ்சிகை தனது மார்ச் இதழில் வெளியிட்டுள்ளது. அதை பார்ப்போம். அதில் நார்வேயின் பிரதமர் எர்னா சோல்பர்க், சன்னா மரினைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். பின்லாந்தில் கொரோனா தொற்று பரவல் தொடர்பான செய்தி வெளியான உடனேயே, அந்த நாட்டின் பிரதமர் சன்னா மரின், பொது முடக்கத்தை அறிவித்ததுடன், நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் செல்வதற்கு தடை விதித்தார். இதன் விளைவாக கொரோனா தொற்று பாதிப்பு ஐரோப்பிய யூனியனின் சராசரியைவிட ஐந்தில் ஒரு பங்கு என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டது. ஒரு நல்ல தலைமை வயதை பொறுத்தது அல்ல என்பதை சன்னா நிரூபித்துள்ளார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பட்டியலில் கலைஞர்கள், பாப் ஸ்டார்கள், விளையாட்டு வீரர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நடிகர்கள் இடம் பெற்றுள்ளனர். 400 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் உலக சாம்பியனான 21 வயது சிட்னி மெக்லாலினும் இதில் இடம்பெற்றுள்ளார். எதிர்மறையான பிரச்னைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு அதில் வெற்றி பெறும் ஆற்றல் படைத்தவர். திறமைகளையும் வாய்ப்பையும் சரியான முறையில் பயன்படுத்தி அதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர் என்கிறார் கட்டுரையாளர்.

மெக்ஸிகோவின் மடமெரோஸில், அமெரிக்காவில் புகலிடம் தேடி, ஆயிரக்கணக்கான அகதிகள் கூடாரங்களில் தங்கியுள்ளனர். கோவிட் தொற்றுக்கு முன்பே நிரம்பி வழியும் அந்த கூடாரங்களில் அவர்களின் வாழ்க்கை நிலை மிக மோசமாக இருந்தது. போதுமான சுகாதாரம் இல்லாததால் அங்கு நோய்கள் பரவுகின்றன. அங்கு ஆபத்தை உணராமல் கள்ளத்தோணியில் வந்தவர்கள் தான் அதிகம். சிலர் டெக்ஸாஸுக்கு கடலில் நீந்திச் செல்ல முயன்று மூழ்கியதும் உண்டு. இந்தச் சூழலில் கியூபா மருத்துவர் டைரோன் எலிசாண்டோ ரோஜாஸ் என்ற 29 வயது இளைஞர் முகாமில் உள்ளவர்களுக்கு மருத்துவ உதவி அளித்துவருகிறார். அவரே கூட அமெரிக்காவில் தஞ்சம் அடைவதற்காக வந்த அகதிகளில் ஒருவர்தான். தினசரி 50 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். ஜனநாயகட்சி உறுப்பினரான ஜோக்குயின் காஸ்ட்ரோ, ரோஜாஸை பற்றி இப்படிக்கூறுகிறார். டைரோன் எலிசாண்டோ அமெரிக்காவில் மருத்துவராக செயல்பட விரும்புகிறார். முன்னர் அமெரிக்காவில் குடியேறியவர்களைப் போல நமது தேசத்துக்கு தனது திறமைகளை பங்களிக்க அவர் விரும்புகிறார். ஆனால், நாம் அனுமதித்தால் மட்டுமே அவர் உதவ முடியும் என்கிறார். 37 வயதான சல்மான் டூர் ஓர் ஓவியர். பாகிஸ்தானின் லாகூரில் பிறந்த இவர் இப்போது நியூயார்க்கில் வசிக்கிறார். தெற்காசிய வம்சாவளியைச் சேர்ந்த மனிதர்களை, தனது ஓவியங்களில் படம்பிடித்து காட்டியுள்ளார். அடுத்து ஆடை வடிவமைப்பில் புதுமை கண்டுபிடிப்புகளை புகுத்திவரும் டெல்ஃபார் கிளெமன்ஸ். 36 வயது இளைஞரான இவரது படைப்புகள் உலக அளவில் பிரபலமானவை. கோவிட் தொற்று காரணமாக நிதி நெருக்கடியில் சிக்கியவர்கள், வேலைகளை இழந்தவர்கள் மற்றும் பல்வேறு விதங்களில் துயரங்களை சந்தித்தவர்களுக்கு அப்ஸால்வ் என்ற தனது நிறுவனத்தின் மூலம் லாபநோக்கு இல்லாமல் குறைந்த கட்டணத்தில் ஆலோசனைகள வழங்குகிறார் ஆயிரக்கணக்கானவர்களின் ரோஹன் பவுலுரி (25). இதுபோன்ற இருண்ட காலங்களில், மேலே குறிப்பிட்ட இளைஞர்கள் நம் இதயங்களில் இருந்துகொண்டு நம்பிக்கை ஒளியேற்றுக்கிறார்கள்.

ரஷீதா பகத்

Governors Council

RI Dist 2981	DG R Balaji Babu
RI Dist 2982	DG K S Venkatesan
RI Dist 3000	DG A L Chokkalingam
RI Dist 3011	DG Sanjiv Rai Mehra
RI Dist 3012	DG Alok Gupta
RI Dist 3020	DG Muttavarapu Satish Babu
RI Dist 3030	DG Shabbir Shakir
RI Dist 3040	DG Gajendra Singh Narang
RI Dist 3053	DG Harish Kumar Gaur
RI Dist 3054	DG Rajesh Agarwal
RI Dist 3060	DG Prashant Harivallabh Jani
RI Dist 3070	DG CA Davinder Singh
RI Dist 3080	DG Ramesh Bajaj
RI Dist 3090	DG Vijay Arora
RI Dist 3100	DG Manish Sharda
RI Dist 3110	DG Dinesh Chandra Shukla
RI Dist 3120	DG Karunesh Kumar Srivastava
RI Dist 3131	DG Rashmi Vinay Kulkarni
RI Dist 3132	DG Harish Motwani
RI Dist 3141	DG Sunnil Mehra
RI Dist 3142	DG Dr Sandeep Kadam
RI Dist 3150	DG Nalla Venkata Hanmanth Reddy
RI Dist 3160	DG B Chinnapa Reddy
RI Dist 3170	DG Sangram Vishnu Patil
RI Dist 3181	DG M Ranganath Bhat
RI Dist 3182	DG B Rajarama Bhat
RI Dist 3190	DG B L Nagendra Prasad
RI Dist 3201	DG Jose Chacko Madhavassery
RI Dist 3202	DG Dr Hari Krishnan Nambiar
RI Dist 3211	DG Dr Thomas Vavanikunnel
RI Dist 3212	DG P N B Murugadoss
RI Dist 3231	DG K Pandian
RI Dist 3232	DG S Muthupalaniappan
RI Dist 3240	DG Subhasish Chatterjee
RI Dist 3250	DG Rajan Gandotra
RI Dist 3261	DG Fakir Charan Mohanty
RI Dist 3262	DG Saumya Rajan Mishra
RI Dist 3291	DG Sudip Mukherjee

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

RI இயக்குனர்

கோவிட் நோய்ப்பரவலின் இரண்டாவது அலைபற்றிய அச்சுறுத்தலின் போது, பால் ஹாரிஸின் இந்தச் சொற்களை நினைவுகூர்கிறேன்: ரோட்டரி தொடர்ந்து முன்னோடியாகச் செயல்பட வேண்டும், இல்லாவிட்டால், முன்னேற்றம் நம்மைப் பின்னுக்குத் தள்ளிவிடும்.'' இது இப்போதும் உண்மை.

உலகெங்குமுள்ள ரோட்டரியன்கள் சூழ்நிலைக்கேற்ப முன்னுக்கு வந்துள்ளார்கள், புதிய யோசனைகளை, ஒரு புதிய தொலைநோக்கை, ஒரு புதிய ரோட்டரியை ஏற்றுக்கொண்டுள்ளார்கள், மாறியுள்ளார்கள், மாற்றியுள்ளார்கள், செயல்படுத்தியுள்ளார்கள், "கடினமான நேரங்கள் ரோட்டரியன்களின் மிகச் சிறந்த பணியை வெளிக்கொண்டுவரும்' என்பதை நிரூபித்துள்ளார்கள்.

இந்த நோய்ப்பரவலால் எதிர்பாராத நன்மைகளும் உண்டு: மேம்பட்ட சுற்றுச்சூழல், அறிவியல் சார்ந்த உடனுழைப்பு, விரைவான கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய உயிரியல் தொழில்நுட்பங்கள், மேம்பட்ட டிஜிட்டல் இணைப்புகளால் மனித வாழ்க்கையில் மிகப் பெரிய மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம், தாய் மற்றும் சேய் நலன் (MCH) மாதம். தாய்மார்கள் நலன் என்பது, கர்ப்பமாக இருக்கும்போது, பிள்ளைப்பேற்றின்போது, குழந்தை பிறந்தபிறகு பெண்களின் நலனைக் குறிக்கிறது. இந்த ஒவ்வொரு நிலையும் நேர்வித அனுபவமாக இருக்கவேண்டும்.

சமீபத்திய பத்தாண்டுகளில் குழந்தைகள் நலன் மிக நன்றாக மேம்பட்டுள்ளது. இந்திய அளவில் 5 வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இறப்பு விகிதம் 1990ல் 1,000 உயிர்ப் பிறப்புகளில் 111 என இருந்தது, 2018ல் 39ஆகக் குறைந்துள்ளது. தாய் மற்றும் குழந்தை இறப்பு விகிதத்துடன் தொடர்புடைய, UNன் நீடித்திருக்கும் முன்னேற்ற இலக்குகளை நோக்கி இந்தியா தொடர்ந்து நிலையாக முன்னேறிவருகிறது.

ஆனாலும், இதில் பல சவால்கள் உள்ளன. பல குழந்தைகள், ஊட்டச் சத்துக் குறைபாடு, தூய்மையற்ற நீர், நோய் மற்றும் நோய்த்தொற்று போன்ற தடுக்கக்கூடிய நோய்கள்/நிலைகளால் இறக்கிறார்கள். ரோட்டரி, குழந்தைப் பருவ நோய்களிலிருந்து பாதுகாக்கிற தடுப்பு மருந்துகளை வழங்கலாம், ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்க்கலாம், தாய்மார்களுக்குத் தரமான நலப் பராமரிப்பை உறுதிசெய்யலாம். வளரும் நாடுகளில் தாய்மார்கள் நலனுக்கான VTTகளால், நாம் தாய்மார்கள் இறப்பு விகிதத்தைக் குறைத்துள்ளோம்.

MCHக்குக் கல்வி, ஊட்டச்சத்து, கட்டுப்படியாகும் நலப் பராமரிப்பு, பாதுகாப்பான நீர், முறையான தூய்மை, சுகாதாரம், சரியான நேரத்தில் சிகிச்சை உள்ளிட்ட பல வழி அணுகுமுறை தேவை. நம்முடைய MCH பணியை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை ரோட்டரி திறக்கிறது.

Dr பரத் பாண்டியா
RI இயக்குனர், 2019–21

களின் செய்திகள்

நலமான சமூகங்களுக்குத் தாய், சேய் பராமரிப்பு தேவை

அன்புள்ள ரோட்டரி தலைவர்களுக்கு,

மிகுந்த அழுத்தம், நிச்சயமின்மை நிரம்பிய நேரம் இது. நாம் செய்யும் வேலை மிக முக்கியமாக அமைகிற நேரமும் இதுதான். ரோட்டரியன்களாகிய நாம், கோவிட்-19 பன்னாட்டு நெருக்கடியில் ஒரு மிகச் சிறந்த பங்கை ஆற்றியுள்ளோம், நெருக்கடியின்போதும், அதற்குப்பிறகும். சங்கங்களும் ரோட்டரியன்களும் தங்களால் இயன்ற அனைத்து வழிகளிலும் உதவவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாய் மற்றும் சேய் நலன்

குழந்தைகளுக்கு நலப் பராமரிப்பு கிடைத்தல் என்பது, குழந்தையின் உடல் மற்றும் உணர்வு நலனில், வளர்ச்சியில், முன்னேற்றத்தில், வயதுவந்தோராகத் தங்களுடைய முழுச் சாத்தியத்தை எட்டும் அவர்களுடைய திறனில் தாக்கம் உண்டாக்கலாம்.

ஒவ்வோராண்டும், ஐந்து வயதுக்குட்பட்ட 5.9 மில்லியன் குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாடு, போதாத நலப் பராமரிப்பு மற்றும் மோசமான தூய்மையால் இறக்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்துகள், ஆன்ட்டிபயாட்டிக்ஸை வழங்குதல், தேவையான மருத்துவச் சேவைகளை வழங்குதல், தாய்மார்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்குப் பயிற்சி பெற்ற நலப் பராமரிப்பு வழங்குநர்களை அளித்து ஆதரித்தல் ஆகியவற்றால் இவை அனைத்தையும் தடுக்கலாம். ஆகவே, தயவுசெய்து, பாதிக்கப்படக்கூடிய தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு உயர் தரத்திலான நலப் பராமரிப்பைக் கிடைக்கச் செய்யுங்கள்.

RILMன் அன்னபூர்ணா திட்டம்

நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்கும் தேவையை RILM அங்கீகரித்தது, அன்னபூர்ணா திட்டத்தின்கீழ், இந்திய உணவு வங்கிச்சேவை வலைப்பின்னல் மற்றும் KFCயுடன் இணைந்து, கடந்த மூன்று ஆண்டுகளில் வங்காளத்தின் ஏழு பள்ளிகளில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு 10,35,700 உணவுகளை வழங்கியுள்ளது. ரூ.60 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டம் இந்த உணவுகளைத் தொடர்ந்து நாள்தோறும் வழங்கிவருகிறது.

குழந்தைகள்தான் நம் எதிர்காலம், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கான நலன் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களை எல்லாச் சங்கங்களும் ஏற்று நடத்தவேண்டும். உலகில் நன்மையைச் செய்யும் ரோட்டரியன்களுடைய திறன்கள்மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கையை வலுப்படுத்துகிறவை, இதுபோன்ற திட்டங்கள்தான்.

கமல் சங்வி
RI இயக்குனர், 2019–21

Board of Permanent Trustees & Executive Committee

PRIP Rajendra K Saboo	RI Dist 3080
PRIP Kalyan Banerjee	RI Dist 3060
RIPE Shekhar Mehta	RI Dist 3291
PRID Panduranga Setty	RI Dist 3190
PRID Sushil Gupta	RI Dist 3011
PRID Ashok Mahajan	RI Dist 3141
PRID P T Prabhakar	RI Dist 3232
PRID Dr Manoj D Desai	RI Dist 3060
PRID C Basker	RI Dist 3000
TRF Trustee Gulam A Vahanvaty	RI Dist 3141
RID Dr Bharat Pandya	RI Dist 3141
RID Kamal Sanghvi	RI Dist 3250
RIDE A S Venkatesh	RI Dist 3232
RIDE Dr Mahesh Kotbagi	RI Dist 3131

Executive Committee Members (2020–21)

DG Sanjiv Rai Mehra Chair – Governors Council	RI Dist 3011
DG Sudip Mukherjee Secretary – Governors Council	RI Dist 3291
DG Sangram Vishnu Patil Secretary – Executive Committee	RI Dist 3170
DG Prashant Harivallabh Jani Treasurer – Executive Committee	RI Dist 3060
DG S Muthupalaniappan Member – Advisory Committee	RI Dist 3232

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

இணைந்து பணிபுரிதலின் ஆற்றல்

சிறிய திட்டங்கள் எவற்றையும் சிந்திக்காதீர்கள் என்றார் அமெரிக்கக் கட்டுமானக் கலைஞர் டேனியல் பர்ன்ஹாம். நம் ரத்தத்தைக் கிளறும் மந்திரம் அவற்றில் இல்லை, அநேகமாக, அவை நனவாகாது.

பர்ன்ஹாமுடைய அறிவுரையை ரோட்டரி கேட்டால், செயல்படுத்தினால், நாம் ஒளிர்வோம். இளம்பிள்ளை வாதத்தை நீக்கவேண்டும் என்ற ஒரு பன்னாட்டு முன்னெடுப்பை நாம் முன்னின்று நடத்தியபோது, நாம் பெரிய திட்டங்களைச் சிந்தித்தோம்; சென்ற ஆண்டு, உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பகுதி இளம்பிள்ளை வாதம் இல்லாத பகுதியாகச் சான்றளிக்கப்பட்டது.

சுமார் ஓராண்டுக்குமுன் கரோனாவைரஸ் தாக்கியபோது, ரோட்டரி அறக்கட்டளை விரைவாகச் செயல்பட்டுக் கோவிட்-19 தொடர்பான 319 பேரிடர் எதிர்வினை நல்கைகளுக்கு $7.9 மில்லியன் அளித்தது. இதுவரை, நாம் மேலும் 317 கோவிட்-19 பன்னாட்டு நல்கைகளை அளித்துள்ளோம், இவற்றின் மதிப்பு சுமார் $24.1 மில்லியன். இத்துடன், முன்பு அங்கீகரிக்கப்பட்ட, நல்கை ஆதரவாளர்கள் கரோனா-வைரஸ் எதிர்வினையை ஆதரிப்பதற்காக மாற்றிப் பயன்படுத்திய பன்னாட்டு நல்கைகளைச் சேர்த்தால், நாம் அளித்துள்ள மொத்தத் தொகை $32.7 மில்லியனைத் தாண்டுகிறது.

இப்போது, நம்முடைய பெரிய அளவுத் திட்டங்கள் நல்கைகளின் வழியாக, நாம் மீண்டும் பெரிதாகச் சிந்திக்கிறோம். ஒவ்வோராண்டும், ரோட்டரியின் கவனப் பகுதிகளில் ஒன்று அல்லது பலவற்றுடன் பொருந்தும் ஒரு திட்டத்துக்கு நாம் $2 மில்லியன் நல்கை வழங்குவோம். இந்த நல்கை ஒரு பெரிய புவியியல் பகுதியில் பல மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்கவேண்டும், மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் ஓர் அளவிடக்கூடிய மற்றும் நீடித்த அணுகுமுறையின் வழியாக இந்தத் தீர்வைக் கொண்டு வரவேண்டும். அர்ப்பணிப்பு உணர்வுள்ள, வளங்கள் நிறைந்த, ஒரே மாதிரி சிந்திக்கிற கூட்டாளர்களும் இதற்குத் தேவை.

வாஷிங்டனில் உள்ள RC ஃபெடரல் வே சிறு திட்டங்களைச் சிந்திக்கவில்லை. முதல் பெரிய அளவுத் திட்டங்களின் ஆதரவாளர் என்ற முறையில் இந்தச் சங்கம் ஜாம்பிய ரோட்டரி சங்கங்கள் மற்றும் மலேரியாக் கூட்டாளர்கள் ஜாம்பியாவுடன் இணைந்து, அந்த நாட்டில் நன்கு பரவியுள்ள ஒரு நோயை முடித்துவைக்கும் முயற்சியை வழிநடத்துகிறது.

மலேரியா இல்லாத ஜாம்பியாவுக்கான கூட்டாளர்கள் என்ற இத்திட்டத்தின் வழியாக, 60 ஜாம்பிய மாவட்ட நல அலுவலர்கள், 382 நலவளாக ஊழியர்கள் மற்றும் 2,500 சமூக நலப்பணியாளர்களுக்கு உயிர் காக்கும் பயிற்சி வழங்க ரோட்டரி உதவும். அவர்களுடைய பணிக்குத் தேவையான பொருட்கள், கருவிகளையும் வழங்கும். இவர்களுடைய இலக்கு மிகப் பெரியது: ஜாம்பியாவின் இரண்டு மாகாணங்களில் 10 இலக்கு மாவட்டங்களில் மலேரியாவை 90 சதவிகிதம் குறைப்பது.

ரோட்டரி உறுப்பினர்கள் பல அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், இணைந்து பணிபுரிதலின் ஆற்றலையும் பயன்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஜாம்பியா நல அமைச்சகத்தின் தேசிய மலேரியா ஒழிப்பு மையம் (இந்தத் திட்டம் தேசிய வியூகத்துக்குப் பங்களிப்பதை இவர்கள் உறுதிப்படுத்துவார்கள்), பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் வேர்ல்ட் விஷன் (இந்த $6 மில்லியன் திட்டத்துக்கு இணைந்து நிதியளித்தல் மற்றும் இதைச் செயல்படுத்தலுக்காக இவர்கள் கணிசமான வளங்களை முதலீடும் செய்கிறார்கள்).

இந்த முதல் பெரிய அளவுத் திட்டங்கள் நல்கை பிறரைத் தூண்டும், வரும் ஆண்டுகளில் மிகப் பெரிய தாக்கத்தை உண்டாக்கும். ரோட்டரியின் கதையில் இதுதான் சமீபத்திய அத்தியாயம். இந்தச் சிலிர்க்க வைக்கும் கதையை எழுதுவதற்கு, ரோட்டரி அறக்கட்டளையை ஆதரிக்கும் ரோட்டரியின் அர்ப்பணிப்புள்ள உறுப்பினர்களாகிய நீங்கள் தான் உதவுகிறீர்கள்.

Ravi

KR ரவீந்திரன்

அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

ஆண்டு மற்றும் போலியோ நிதிகளை வலுவாக்க உதவுங்கள்

வெறும் $26.5 பங்களிப்புடன் ஓர் அறக்கட்டளையை அமைக்கலாம் என்கிற ஆர்ச் க்ளம்ஃபின் யோசனை உலகத்தில் இத்தனை நன்மைகளைச் செய்யும் என்று யார் நினைத்திருப்பார்கள்!

1947முதல், இந்தத் திட்டத்தால் வழங்கப்பட்டிருக்கும் மொத்த உதவிகள் $4.9 பில்லியன் (சுமார் ரூ.36,000 கோடி). ரோட்டரியன்கள் எப்போதெல்லாம் ஒரு தேவையை அடையாளம் காண்கிறார்களோ, அப்போதெல்லாம் TRF உதவத் தயாராக உள்ளது.

வருங்காலத் தொலை நோக்கினால் புதிய நல்கைகள் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, நாம் முதன்மையாக ஆறு கவனப் பகுதிகளில் கவனம் செலுத்துகிறோம், இதில் சுற்றுச் சூழலும் இடம்பெறுகிறது. ஆனால், சுற்றுச்சூழலை நீடித்திருக்கச் செய்தலுக்கான ரோட்டரி செயல்குழு உள்ளிட்ட பல குழுக்களின் வாதத்தால், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதை நம்முடைய ஏழாவது கவனப் பகுதியாக ஆக்கியது TRF.

இசை மற்றும் கலையைப் போல, புவியியல் அல்லது சமூகத் தடைகளைத் தாண்டி நிற்கிறது இயற்கை மீதான காதல். நம்மிடம் இரண்டாவது பூமி இல்லை, ஆகவே, சுற்றுச்சூழலை வருங்காலத் தலைமுறைகளுக்காகக் காப்பாற்றுவதற்காக நம்மால் இயன்ற அனைத்தையும் நாம் செய்யவேண்டும். ஆனால், இது நிறைவேற வேண்டுமென்றால், உலகெங்குமுள்ள ரோட்டரியன்கள் இந்த முன்னெடுப்புக்காக TRFக்குப் பங்களிக்கவேண்டும்.

உலகின் ஒவ்வொரு மூலையிலுள்ளவர்களும் வழங்கியதால் தான் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதல் என்ற வரலாற்று மாற்றம் நிகழ்ந்தது. ஆகவே, நம் ஆண்டு மற்றும் இளம்பிள்ளை வாதத் தடுப்பு நிதிகளுக்குத் தாராளமாக நிதி வழங்குங்கள்.

பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்குதலுக்கான ரோட்டரியின் உறுதியான வாதத்தை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். இது பாலினச் சமநிலையைத் தாண்டியதாக இருந்தாலும், ரோட்டரியில் தலைமைப் பொறுப்புகளை ஏற்கும் வாய்ப்பை இன்னும் கூடுதலான பெண்களுக்குத் தருவதன்மூலம் நாம் இதைத் தொடங்குவோம்.

ஜொனாத்தன் ஷில்லெர் கூறியதுபோல், பெண்களைப் பெருமைப்படுத்துங்கள்! நம் உலக வாழ்க்கையில் சொர்க்க ரோஜாக்களைப் பின்னி நெய்கிறவர்கள் அவர்கள்.”

குலாம் வாஹன்வதி
TRF அறங்காவலர்

எலுமிச்சையிலிருந்து பழரசம்

கடந்த ஆண்டு ஜூன் மாதம், ரோட்டரி தனது முதல் மெய்நிகர் மாநாட்டை நடத்தியது. இது பெரும் வெற்றியை பெற்றது. ஏழு நாள்களில் 60,000த்துக்கும் மேலானவர்கள் முக்கிய பிரமுகர்களின் பேச்சைக் கேட்டார்கள். குறைந்தது 75,000 பார்வையாளர்கள், யூ-டியூப்பில் 8 மொழிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டஒன்றுக்கும் மேற்பட்ட அமர்வுகளை கண்டு ரசித்தார்கள். பிரேக்அவுட் அமர்வுகள் வியத்தகு வகையில் விரிவாக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஜூலை வரை நடைபெற்றன. ஜூன் மாதத்தின் பிற்பகுதியில் மாநாடு நடைபெற்ற போது ரோட்டரி அறக்கட்டளைக்கு 1 மில்லியன் டாலர் நன்கொடையாக வழங்கப்பட்டது. இதன் மூலம் முன்னெப்போதையும்விட அதிகமான உறுப்பினர்களை ஈடுபடுத்தும் வழியை ரோட்டரி கண்டுபிடித்தது.

2021 ரோட்டரி சர்வதேச மாநாட்டை ஒரு மெய்நிகர் நிகழ்வுக்கு மாற்றுவதற்கான கடினமான, ஆனால், விவேகமான முடிவை ஜனவரியில், ரோட்டரி இயக்குநர்கள் குழு, எடுத்தது. தற்போதைய நெருக்கடியை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், ரோட்டரி இந்த மாற்றத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துவதில் உறுதியாக உள்ளது. 2021 மெய்நிகர் ரோட்டரி சர்வதேச மாநாட்டை ஜூன் மாதம் 12 முதல் 16ம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் நிகழ்ச்சி பங்கேற்பாளர்களுடன் தொடர்பு கொள்ளும் வகையில் இந்த மெய்நிகர் மாநாடு இருக்கும். நீங்கள் எங்கு இருந்தாலும் ஜூன் மாதத்தில் மெய்நிகர் ரோட்டரி சர்வதேச மாநாட்டில் பங்கேற்க முடியும்.

மெய்நிகர் சர்வதேச மாநாட்டை பற்றிய தகவல்களை மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால் *convention.rotary.org* என்ற வலைத்தள முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

100 இளம் பெண்களுக்கு அழகுக்கலை பயிற்சி அளிக்கும் RID 3232

ஜெய்ஸ்ரீ

RID 3232ன், பெண்களுக்கு ஆற்றலளிக்கும் குழுவான த்ரிதி-யின் முயற்சிகளால், வரும் ஜூன் மாத நிறைவில் நூறு இளம் பெண்கள் அழகுக்கலைஞர்களாக ஆவார்கள். இவர்களில் 20 பேர் (அனைவரும் கேட்டல், பேச்சுக் குறைபாடு கொண்டவர்கள்) சமீபத்தில் தங்கள் பயிற்சி நிறைவுச் சான்றிதழ்களைப் பெற்றார்கள், இந்தக் குழுவின் 'சுந்தரி திட்ட'த்தின்கீழ் பயிற்சி பெறும் ஐந்து தொகுப்புகளில் இது மூன்றாவதாகும்.

இந்தப் பெண்களுக்குப் பயிற்சி அளித்து இவர்களுடைய சம்பாதிக்கும் சாத்தியத்தை மேம்படுத்த நாங்கள் விரும்புகிறோம் என்கிறார் தலைவர் சாரதா சுந்தரம். மேலும் இவர்களுக்குச் சுய தொழில், வேலை வாய்ப்புகளுக்கும் வழிசெய்கிறோம், என்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் அழகு நிலையங்களை அமைத்துள்ள நேச்சுரல்ஸ் பயிற்சிக் கல்விக் கழகத்துடன் இணைந்து இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதன் நிறுவனரான வீணா குமரவேல், மானியத்தின் மூலம் வெகுவாகக் குறைக்கப்பட்ட கட்டணத்தில் (ஒருவருக்கு ரூ.50,000க்குப் பதில் ரூ.10,000) பயிற்சி வழங்குகிறார், இந்தப் பெண்களுக்கு நேச்சுரல்ஸ் அழகு நிலையங்களில் வேலை வழங்கவும் வாக்களித்துள்ளார் என்று தொடர்ந்து கூறுகிறார் சாரதா.

நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த இந்தப் பெண்களுடைய பயிற்சி கட்டணத்தை 40 சங்கங்களைச் சேர்ந்த மாவட்ட ரோட்டரியன்கள் வழங்குகிறார்கள். முதலில் பயிற்சி பெற்ற 20 பேருடைய கட்டணத்தை RC மெட்ராஸ் வெஸ்ட் வழங்கியது, PDG ரேகா ஷெட்டியின் தந்தை PDG போஜா ஷெட்டி நினைவாக

அவர்களுடைய அறக்கட்டளை சார்பாக இது வழங்கப்பட்டது. RC மெட்ராஸ் ஐந்து பெண்களுக்கும், RC அம்பத்தூர் எட்டுப் பெண் களுக்கும் ஆதரவு வழங்கின.

இந்த திட்டத்தை மற்ற மாவட்டங் களுக்கும் பரப்ப வேண்டும் என்பதே என் கனவு என்று PDG ரேகா கூறுகிறார். இவர் இந்த குழுவின் வழிகாட்டி. இவருடைய சங்கம், RC மெட்ராஸ் டெம்பிள் சிட்டி இந்த திட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு முன் சென்னை புழல் சிறைச்சாலையில் உள்ள பெண் கைதிகளுக்கு நடத்தியுள்ளது என நினைவு கூறுகிறார்.

நான் த்ரிதி தலைவரான போது, 20 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கத் தான் திட்டமிட்டேன். ஆனால், DG முத்துபழனியப்பன் மற்றும் PDG ரேகா என்னை ஊக்குவித்தனர், அதை 100ஆக மாற்றினர். இது மிகச் சிறந்த பயணம், இந்த ஆண்டு நிறைவுக்குள் 100 பெண்கள் வேலையில் சேர்வார்கள் என்று கூறுகிறார் சாரதா. குறிப்பாக, இப்போது பயிற்சி பெற்றுள்ள பெண்களை எண்ணி மிகவும் மகிழ்கிறார்.

மாற்றுத் திறனாளிப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கும் யோசனை சாரதா

வுக்குப் பல ஆண்டுகளுக்கு முன் வந்தது. அப்போது நான் சென்றிருந்த ஓர் அழகு நிலையத்தின் உரிமையாளர் யமுனா இரண்டு மாற்றுத்திறனாளிப் பெண்களை வேலைக்கு அமர்த்தியிருந்தார். பிரீத்தி, தங்கம் என்ற அந்தப் பெண்கள் ஃபேஷியல்ஸ், பெடிக்யூர், தலை மசாஜ் ஆகியவற்றை மிக அக்கறை யுடன் செய்தார்கள். அவர்களுக்கு திருமணம் செய்யவும் யமுனா உதவியிருந்தார். அப்போது யமுனா சொன்ன ஒரு விஷயம் என் மனத்தில் நெடுநாட்களாகத் தங்கிவிட்டது: இந்தப் பெண்கள் வேலையில் இருப்பதால், இவர்களுக்கு மாப்பிள்ளை தேடுவது ஒப்பீட்டளவில் எளிதாக இருந்தது. ஆண்கள் இவர்களை ஒரு சுமையாக நினைக்கவில்லை, இவர்களை மணக்க முன்வந்தார்கள். ஆகவே, இப்போது இளம் பெண்களுக்கும் ஆற்றல் அளிக்கும் ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது, நான் அதைப் பயன்படுத்திக் கொண்டேன் என்கிறார் சாரதா.

இங்கு பயிற்சி பெறும் மற்ற பெண்களில் சிலர் பட்டதாரிகள். இவர்களுடைய தகுதி, குடும்பத்தின் பொருளாதார நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இவர்கள் தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள். அழகுப் பொருள் பொதிகளில் அளிக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு அடிப்படை ஆங்கில அறிவு கண்டிப்பாகத் தேவை.

இந்தப் பயிற்சியில் தோல், கூந்தல் பராமரிப்பு, அழகுப் பராமரிப்பு, மணமகள் அலங்கரிப்பு அடிப் படைகள் இடம் பெறுகின்றன, 30 நாள் தீவிர வகுப்பறை நிகழ்வுகள், 15 நாள் நேரடிப் பயிற்சிகுப்பின் தேர்வு எழுதித் தேர்ச்சி பெறவேண்டும். இப்போதைய வகுப்பில் பயிற்சி பெற்றுள்ள லாவண்யா, B.Com பட்டப்படிப்பின் நிறைவு ஆண்டில் உள்ளார். விரைவில் ஓர் அழகு நிலையத்தில் பணிப் பயிற்சி பெறவிருக்கும் இவர், சைகை மொழியில் தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

கிட்டத்தட்ட எல்லாப் பெண்களும் பணிப்பயிற்சி பெற விண்ணப்பிக்கிறார்கள். சிலர், கல்லூரிப்படிப்பை நிறைவு செய்த பின் சேர்வார்கள் என்கிறார் பயிற்சியாளர் விமலா. கல்லூரி PT ஆசிரியரான விஜயலஷ்மி இந்த மாணவர்களுடன் பயிற்சிக்கு வருகிறார்,

PT ஆசிரியர் விஜயலஷ்மி வாய் பேச முடியாத, காது கேளாத மாணவிகளுடன் உரையாற்றுகிறார்.

கல்விக் கழகத்திலுள்ள பயிற்சியாளர்களுடன் ஒருங்கிணைப்பதற்கு இவர்களுக்கு உதவுகிறார்.

பணிப் பயிற்சி பெறுவோருக்கு அடிப்படை உதவித் தொகை ரூ.7,000. பணிப் பயிற்சி இரண்டு மாதங்கள் நடைபெறும். இதில் மூன்று நிலைகள், ஒவ்வொன்றாகத் தேர்ச்சி பெற்றுக் கூடுதல் உதவித் தொகை பெறலாம் என்கிறார் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ரஜனி. இன்னும் சில மாதங்களில், அவர்கள் நன்கு சம்பாதிப்பார்கள், இன்னும் மேம்பட்ட பயிற்சி பெறுவார்கள், தொடர்ந்து முன்னேறுவார்கள். அதன்பிறகு, வெளியில் சென்று சுதந்தரமாக வேலை செய்வார்கள், சொந்த அழகு நிலையத்தை அமைக்கிறவர்களும் உண்டு.

இங்கு கூடுதலாக விரும்பப்படும் சேவை, மணப்பெண் ஒப்பனைதான். இதன் மூலம் இந்தப் பெண்களுக்கு ஒரு நல்ல தொகை கிடைக்கிறது.

கோவிடால் ஏற்பட்ட முடக்கம் தளர்த்தப்பட்டிருப்பதால், முதல் வகுப்பில் பயிற்சி பெற்ற 20 பெண்கள் நல்ல பலன் பெற்றுள்ளார்கள். மக்கள் அழகு நிலையங்களுக்கு வரத் தயங்குவதால், இவர்கள் அனைவரும் இப்போது அவர்களுடைய வீட்டுக்கே சென்று அழகுச் சேவை வழங்குகிறார்கள். இங்கு பயிற்சி பெறும் மீரா, தான் மாதத்துக்கு ரூ.20,000 சம்பாதிப்பதாகவும், ஒவ்வொரு வீட்டுக்குச் செல்லும்போதும் சராசரியாக ரூ.3,000 பெறுவதாகவும் கூறுகிறார்.

அழகுக்கலை பயிற்சி மிக பெரிய அளவில் இப்பெண்களுக்கு வாழ்க்கையை மேம் படுத்தும், என்று DG முத்துபழனியப்பன் தெரிவித்தார். தொழில் முன்னேற்றத்துக்கு உதவும் வாட்ஸாப் குழு 300 பெண் ரோட்டரியன்கள், ஆன்கள், ரோட்டராக்டர்களைக் கொண்ட WE-Jiti

பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ரஜனி பாலா மற்றும் பயிற்சியாளர் S விமலாவுடன் மாணவிகள்.

(அதாவது, வெற்றி) என்ற தொழில் முன்னிறுத்தல், யோசனைப் பகிர்தல் வாட்ஸாப் குழுமத்தைச் சாரதா உருவாக்கியுள்ளார். செப்டம்பரில் உருவாக்கப்பட்ட இக்குழு மிக நல்ல வரவேற்பைப் பெற்றுவருகிறது என்கிறார் இவர். ஊறுகாய், நொறுக்குத் தீனிகளில் தொடங்கி, நகை, துணைப் பொருட்கள், ஆடைகள், பொட்டுகள் என அனைத்தும் இங்கு கிடைக்கும். ரோட்டரியன் ஒருவருடைய மனைவியான வித்யா, வீட்டிலேயே செய்த தன்னுடைய இயற்கை அழகுப் பொருட்களை இங்கு விற்கிறார், அவை மிக நன்றாக விற்கின்றன. மன நலன், POCSO சட்ட விழிப்புணர்வுக்கான ஆலோசனைச் சேவைகளும் வழங்கப்படுகின்றன.''

இந்தக் குழுவினர் சேர்ந்து இரண்டு பெண்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்கள். புதுமைச் சிந்தனை, ஆற்றல் மிக்க இந்த அணி இதுவரை 80 மாணவர்களுக்கு நிதி திரட்டியுள்ளது. கடைசி வகுப்பிலுள்ள 20 பெண்களுக்காக, நிசான், கார்போரண்டம் யுனிவர்சலுடைய CSR நிதியிலிருந்து உதவி பெறுவதற்கு முயன்று வருகிறோம். அது சரிப்படாவிட்டால், மாவட்ட நல்கைக்கு முயல்வோம் என்கிறார் சாரதா. ■

தாக்கமுள்ள திட்டங்களைச் செய்ய நாம் இன்னும் வளரவேண்டும்: RIPE சேகர் மேத்தா

V முத்துகுமரன்

உறுப்பினர் எண்ணிக்கையை மிகுதியாக்குங்கள், சில சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து தாக்கமுள்ள திட்டங்களை நிறைவேற்றுங்கள், அதன் மூலம் ரோட்டரியை இன்னும் பெரிதாக வளருங்கள் என்று RIPE சேகர் மேத்தா தெரிவித்தார். RC பங்குயியோ சம்மர் கேபிடல், RID 3790, ஃபிலிப்பைன்ஸும் சினர்ஜி ரோட்டரி நட்புக் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய மெய்நிகர் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு பேசினார்.

இந்தக் கூட்டத்தில், ஆசிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 400 ரோட்டரி தலைவர்கள் கலந்துகொண்டார்கள். அவர்களிடையில் பேசிய மேத்தா, கனவுகள் என்பவை விநோதமான எண்ணங்கள், யோசனைகளால் வருபவை என்றார், 17 ஆண்டுகளில் செய்ய இயலாத விஷயங்களை அடுத்த 17 மாதங்களில் நாம் செய்யலாம், அதாவது, உறுப்பினர் எண்ணிக்கையை 1.3 மில்லியனாக உயர்த்தலாம், அதற்கு நீங்கள் உங்கள் சங்கங்களிடம் "ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள்" என்று கூறவேண்டும், இது உண்மையில் எட்டக்கூடிய இலக்குதான்.

நோய்ப்பரவல் நேரத்தில், சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுடன் மெய்நிகர் கூட்டங்களின் வழியாக உரை யாட வேண்டும், உறுப்பினர்களுக்கு நேரடி, மெய்நிகர் கூட்டங்கள் ஆகிய இரண்டையும் நடத்தும் கலவைச் சங்கங்களும் இருக்கலாம் என்றார்.

தாக்கமுள்ள திட்டங்கள்

25 வயதில் ரோட்டரியில் சேர்ந்த எனக்கு, 2,500 குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளில் நேரடியாகப் பங்கேற்கும் வரம் கிடைத்தது. இந்தியா முழுவதும் ரோட்டரி சங்கங்கள் சுமார் 20,000 ஏழைக் குழந்தைகளுக்குச் அறுவைச் சிகிச்சைகளைச் செய்திருக்கும் என்றார்.

செயற்கைக் கை, கால்களை வழங்குவது, ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனிக் கழிப்பறைகளைக் கட்டுவது, எழுத்தறிவுத் திட்டங்கள், தொலைதூரக் கிராமங்களில் நீர், தூய்மை வசதிகள் ஆகியவற்றுக்கான பன்னாட்டு நல்கைகள் இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கான பயன் பெறுவோருடைய வாழ்வாதாரங்களை மேம்படுத்தியுள்ளன, அவர்களுக்குக் கண்ணியம், சுயமதிப்பைப் பெற்றுத் தந்துள்ளன என்றார் அவர்.

ரோட்டரி இந்தியா எழுத்தறிவுத் திட்டத்தின் வழியாக, 115 மில்லி யனுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இப்போது ரோட்டரியின் ஒலி-காட்சி திட்டத்தை நாள்தோறும் அணுகுகிறார்கள், இதேபோன்ற ஒரு மின் கற்றல் திட்டத்தை நேபாளத்தில் நடத்தவேண்டும் என்று அந்த நாட்டு அரசுடன் பேசிவருகிறோம் என்றார் மேத்தா. பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளிலும் இதுபோன்ற முன்னெடுப்புகளை நடத்தவேண்டும் என்று ரோட்டரியன் களைக் கேட்டுக்கொண்டார் அவர். விரைவில், ஓர் ஆப்பிரிக்க நாடு எங்களுடைய மின் கற்றல் திட்டத்தை ஒரு வெள்ளோட்டத் திட்டமாக நடத்தும், இதுபற்றி அவர்களுடைய கல்வி அமைச்சருடன் நான் பேசி வருகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

பெண் குழந்தைகளுக்கு ஆற்றல் அளித்தல்

இந்தியாவில் தொடக்கப் பள்ளிகளில் சேர்வோருடைய விகிதம் 96 சதவிகிதமாக இருந்தபோதும், 10ம் வகுப்பு வருகிற போது இதில் சுமார் 50 சதவிகிதப் பேர் விலகிவிடுகிறார்கள், இதில் பெரும்பாலானோர் பெண்களாக இருக்கிறார்கள்.

பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதற்கான வழிகளைப்பற்றி மேத்தா பல யோசனைகளை முன்வைத்தார், அவர்களுடைய கல்விக்கு உதவுவதற்காக மிதிவண்டிகள், சூரிய ஒளி விளக்குகளை நன்கொடையாக அளிக்கலாம், பள்ளிகளில் தற்காப்பு உத்திகளைக்கூடக் கற்றுத்தரலாம். சுற்றுச்சூழலைப் பாதிக்காத, மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி நாப்கின்களைப் பெண்களுக்கு வழங்கலாம், மீண்டும் பள்ளிக்கு வருவதற்கு உதவி தேவைப் படுவோருக்காக ஓர் ஆலோசனைத் தொலைபேசி எண் சேவையை வழங்கலாம்.

RI வாரியம் தீர்மானித்தபடி, கோவிட் தடுப்பு மருந்து வழங்கலுக்கு எந்த நிதியும் அளிக்கப்படாது. அதே நேரம், கோவிட் பரப்புரையை ரோட்டரி சங்கங்கள் ஏற்றுக்கொள்ளலாம், உள்ளூர் அரசாங்கங்களுடன் கைகோத்து ஆதரவுப்பணியில் ஈடுபடலாம்.

கொரியாவைச் சேர்ந்த TRF அறங்காவலர் சங் கூ யுன், RIDE A S வெங்கடேஷ், DG ஜீசஸ் சாமா, RID 3790, PDG ரோலண்டோ வில்லன்யுவா, ஃபிலிப்பைன்ஸ் மற்றும் ASEAN மாவட்டங்களைச் சேர்ந்த PDGக்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்கள். ■

11 மில்லியன் பெண் குழந்தைகள் பள்ளிகளுக்கு திரும்பமாட்டார்கள்

ரஷீதா பகத்

கொரோனா தொற்று உலகம் முழுவதும் பலவிதமான துயரங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இந்த சிறிய வைரஸ் நம்மீது ஏற்படுத்தியுள்ள மிகக் கொடூரமான தாக்குதல் என்னவென்றால் இந்த ஆண்டு உலகம் முழுவதும் 11 மில்லியன் பெண் குழந்தைகள் பள்ளி செல்ல முடியாத அளவுக்கு இடையூறை ஏற்படுத்தியுள்ளது என்றார் ரோட்டரி மண்டலக் கூட்டத்தில் உறையாற்றிய யுனிசெப் அமைப்பின் இந்தியத் தலைவர் யாஸ்மின் அலி ஹக். இந்த புள்ளி விவரங்களை யுனெஸ்கோ தயாரித்துள்ளது.

பெண் குழந்தைகள் கல்வி-ஒரே தீர்வு என்னும் தலைப்பில் அவர் பேசினார். பெண்களின் கல்வி என்பது சிறுமிகள் பள்ளிகளில் படிப்பதைத் தாண்டிச் செல்கிறது. பெண்கள் கல்வி கற்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவது, அவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உணரச் செய்வது பற்றியது அது. நல்ல சூழல் உருவானால் தான் பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறுவதுடன் அதை முழுமையாக பூர்த்தி செய்ய முடியும். அதே நேரத்தில் மாறிவரும் உலகில் அதற்கு ஏற்றவாறு தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள அவர்களின் சமூகப் பொருளாதாரம் மற்றும் செயல்திறனை வளர்த்துக் கொள்ளச் செய்ய வேண்டும். பெண்கள், குறிப்பாக இளம்பெண்கள் தங்கள் வாழ்க்கை தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கவும், சமூகத்திற்கு விரிவான தங்கள் பங்களிப்பை அளிக்கவும் இது உதவும்.

யாஸ்மீன் அலி ஹக், இந்தியாவின் UNICEF தலைவர்

ஒவ்வொரு ஆடவரும் மகளிரும் தரமான கல்வி பெறுவதை நாம் உறுதிசெய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட உலகில் இது அவசர அவசியமானது. கொரோனா தொற்றுக்கு முன்னரே இந்தியாவில் 30 மில்லியன் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. இவர்களில் 40 சதவீதத்தினர் இளம் பருவத்தினர்.

பள்ளியில் ஒரு ஆடவர் 7 ஆண்டுகள் செலவழிக்கிறார் என்றால், பெண்கள் 4.4 ஆண்டுகள் மட்டுமே செலவழிப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன. மேலும் உலகம முழுவதிலும் பெண்கள் இளம் வயதிலேயே கர்ப்பமடைவது, குழந்தைத் திருமணம், கட்டாயத் திருமணம், பெண்கள் மீதான வன்முறை போன்ற அபாயத்தையும் ஏற்படுத்துகிறது.

குழந்தைத் திருமணத்தில் இந்தியா பெரும் பங்கு வகிக்கிறது. மேலும் இந்த தொற்றுக்காலத்தில் இது மேலும் அதிகரிக்கக்கூடும். சைல்டு லைன் இந்தியா (அறக்கட்டளை) கடந்த ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சிறுவயதிலேயே திருமணம் தொடர்பான துயர அழைப்புகள் 17 சதவீதம் அதிகரித்துள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. அதாவது இது 2019 ஆம் ஆண்டைவிட அதிகமாகும். பல பெண்களுக்கு பள்ளி ஒரு சிறந்த எதிர்காலத்துக்கான திறவுகோலாக உள்ளது. அது உடைந்துவிட்டது என்றாலும் அது வாழ்க்கையின் உயிர்நாடியாகும்.

டிஜிட்டல் பாலின பிளவு

இந்தியாவில் செல்லிடப் பேசிகள் பயன்பாட்டில் 50 சதவீத பாலின இடைவெளி உள்ளது. ஆண்களில்

42 சதவீதம் பேர் செல்லிடப்பேசிகளை உபயோகிப்பவர்கள் என்றால் பெண்கள் விஷயத்தில் இது வெறும் 21 சதவீதமாகவே உள்ளது. ஆண்களுடன் ஒப்பிடும்போது இடைவெளி அதிகமாக உள்ளது.

தொழில்நுட்பத்துக்கான குறைந்த அணுகுமுறை மற்றும் டிஜிட்டல் கல்வி முறை பெண்களை கல்வி கற்பதிலிருந்து விலக்கி வைக்கிறது. இதனால் தொழில்நுட்ப அணுகுமுறையில் ஆண்களைவிட பெண்களிடம் அதிகம் பாகுபாடு காட்டப்படும். அவர்கள் வீட்டு வேலைகளுக்கும், சிறுவயது திருமணத்துக்கும் தள்ளப்படும் சூழ்நிலை உருவாகும். ஏழைப் பெண்கள் இன்னும் கூடுதலாக பாகுபாட்டை எதிர்கொள்ள வேண்டி வரும். பெண்கள் கல்வி பெறுவதன் மூலம் இளம் வயதில் திருமணம் செய்து கொள்வது தவிர்க்கப்படும். அவர்கள் பொருளாதாரத்துக்கும் சமூகத்துக்கும் தங்களால் ஆன பங்களிப்பைச் செய்ய முடியும். வாழ்வாதாரத்தை ஆண்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொற்றுப் பரவல் காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் பள்ளிகள் மூடப்பட்ட நிலையில், யுனிசெப் கற்றல் திறனை வலுப்படுத்தவும், பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கு திட்டமிடவும் தேசிய மற்றும் மாநில அளவில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. இதன் விளைவாக 17 மாநிலங்களில் 59 மில்லியன் குழந்தைகள், குறிப்பாக 49 சதவீத பெண் குழந்தைகள் தொழில்நுட்பம் இல்லாத, குறைந்த தொழில் நுட்பம், மற்றும் உயர் தொழில்நுட்பம் இல்லாத நிலையில் தொலைநிலை கற்றல் வாய்ப்புகளை அணுக முடிந்தது. ஆசிரியர்கள் கல்விக்கு ஆதரவாகவும் யுனிசெப் செயல்பட்டு வருகிறது. ஐந்து மாநிலங்களில் வாழ்க்கைத் திறன் அளவீட்டு கருவியைத் தவிர, பல மாநிலங்களில் அரசின் மூலம் தொழில் வழிகாட்டுதலுக்கான தரவு தளமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 17 மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்களும், சிறுமியர்களும் உயர்கல்வி, கல்வி உதவித்தொகை, திறன் வளர்ப்பு திட்டங்கள், பயிற்சி வாய்ப்புகள் குறித்து அறிந்துகொள்ள முடியும் என்றார்.

தமது உரையின் முடிவில், பள்ளிகள் மூடப்படும்போது தொழில்நுட்பத்தை அணுகுவதன் மூலம் பெண்கள் தொடர்ந்து கற்றலில் ஈடுபடுவதை உறுதி செய்ய தொடர்ச்சியான முயற்சி தேவை என்று யாஸ்மின் வலியுறுத்தினார். பெண்கள் அவர்களின் வசதிக்கு ஏற்ப கல்வி கற்பதற்கான வாய்ப்புகளையும் நாம் ஏற்படுத்தித்தர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.■

Rotary PEOPLE OF ACTION

தில்லி ஆட்டோக்களுக்குக் கோவிட் பாதுகாப்புப் பொதிகள்

ரோட்டரி செய்திக்குழு

தில்லியிலுள்ள மூன்று சக்கர வண்டிகளில் பயணம் செய்கிறவர்களைக் கொரோனாவைரஸிலிருந்து பாதுகாப்பதற்காக, ஆட்டோ ஓட்டுநர்களுக்குக் கோவிட் பாதுகாப்புப் பொதிகள் வழங்கப்பட்டன, RC டெல்லி ரெஸ்டோரிங் ஸ்மைல்ஸ், RID 3011ன் இந்த மிகப் பெரிய பரப்புரையைத் தில்லி நல அமைச்சர் சத்யேந்திர ஜெயின் தொடங்கிவைத்தார். தில்லி பகுதி SBI ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் CSR ஆதரவுடன் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய DG சஞ்சீவ் ராய் மெஹ்ரா, தில்லியிலுள்ள அனைத்து ஆட்டோக்களிலும் பரிந்துரைக்கப்படுகிற கோவிட் தூய்மைக் கருவிகளை இந்தத் திட்டம் நிறுவும், பயணிகளைப் பாதுகாக்கும் என்றார், மிதிக்கும் ஸ்டான்ட்கள், முகமூடிகள், தூய்மைப்படுத்திகள், கையுறைகள், மற்ற தேவையான பாதுகாப்புப் பொருட்களை நாங்கள் ஓட்டுநர்களுக்கு வழங்குகிறோம். இப்பொருட்களைப் பெறும் வண்டிகளில் ரோட்டரி சின்னம் இருக்கும் என்பதால், இந்தத் திட்டம் ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும், பயணிகளிடையே பாதுகாப்பு உணர்வை உண்டாக்கும்.■

தில்லி சுகாதாரதுறை அமைச்சர் சத்யேந்த்ர ஜெயின் மற்றும் SBI லைஃப் இன்சுரன்ஸ் தலைவர் ராஜீவ் ஸ்ரீவஸ்தவா ஆட்டோ ரிக்ஷா ஓட்டுனர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குகிறார். DG சஞ்சீவ் ராய் மெஹ்ராவும் உடன் உள்ளார்.



District Wise TRF Contributions as on February 2021

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus Fund	Endowment Fund	Other Funds	Total Contributions
		India			
2981	65,822	4,740	12,128	0	82,690
2982	28,217	16,283	20,770	46,513	111,783
3000	55,163	24,146	20	14,912	94,241
3011	57,555	10,571	40,653	187,479	296,258
3012	12,600	2,480	0	8,532	23,612
3020	156,098	57,171	32,000	2,726	247,994
3030	42,397	2,284	25,743	143,546	213,971
3040	4,087	240	0	35,137	39,463
3053	10,083	3,370	0	101,412	114,865
3054	73,826	3,476	0	367,580	444,882
3060	53,816	91	75,405	139,546	268,858
3070	32,884	897	0	43,938	77,719
3080	50,550	12,886	0	(20,261)	43,175
3090	32,899	500	0	(736)	32,663
3100	56,195	252	0	14,667	71,114
3110	27,685	200	0	0	27,885
3120	6,588	1,769	0	8,913	17,270
3131	116,667	41,214	109,000	585,354	852,235
3132	19,133	2,615	5,000	6,451	33,198
3141	384,611	43,158	95,568	1,037,496	1,560,832
3142	194,364	22,968	101	3,001	220,435
3150	101,346	9,820	147,720	34,357	293,243
3160	20,779	8,367	16	0	29,162
3170	33,479	23,421	1,240	168,514	226,654
3181	47,967	4,331	0	7,050	59,348
3182	65,325	4,312	0	16,207	85,844
3190	129,944	65,779	25,000	145,853	366,576
3201	95,196	29,862	0	237,336	362,394
3202	43,832	23,148	8,468	21,623	97,072
3211	13,171	3,441	0	135,841	152,453
3212	16,300	45,644	14	108,733	170,691
3231	443	437	0	20,685	21,565
3232	28,454	35,805	2,000	744,390	810,649
3240	96,810	24,375	0	49,328	170,513
3250	37,358	4,414	0	3,773	45,546
3261	85,109	1,108	0	7,360	93,577
3262	26,712	2,699	0	0	29,411
3291	42,121	7,561	14,258	57,536	121,476
India Total	**2,365,587**	**545,833**	**615,106**	**4,484,792**	**8,011,318**
3220 **Sri Lanka**	142,353	19,792	26,000	15,435	203,581
3271 **Pakistan**	8,626	97,291	0	208,347	314,264
3272 **Pakistan**	64,551	15,281	0	1,168	80,999
3281 **Bangladesh**	167,534	9,326	29,000	208,964	414,825
3282 **Bangladesh**	60,144	5,707	0	8,270	74,122
3292 **Nepal**	253,654	9,317	0	212,393	475,364
South Asia Total	**3,062,449**	**702,548**	**670,106**	**5,139,369**	**9,574,472**

Source: RI South Asia Office

பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு ஸ்மார்ட் வகுப்பறையை அமைக்கும் RC புணே மெட்ரோ

கிரண் ஜெஹரா

சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில், பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கான ஒரு பள்ளியில் ஒரு ஸ்மார்ட் வகுப்பறையை அமைக்கலாம் என்று ஒரு திட்டம் தொடங்கியது, பின்னர் அது RC புணே மெட்ரோ உறுப்பினர்களுக்கு ஒரு பேரார்வமாக மாறிவிட்டது. இன்னும் பல பள்ளிகளின் வகுப்பறைகளை இப்படி மாற்றியமைக்க நாங்கள் விரும்புகிறோம் என்கிறார் சங்கத் தலைவர் மகரந்த் ஃபாட்கெ, இதில் எங்களுக்கு உதவும் கருவியின் பெயர் ஆனீ, தொழில்நுட்ப அடிப்படையிலான இந்தக் கருவி, பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் பிரெய்லியில் படிக்கவும் தட்டச்சு செய்யவும் கற்றுக்கொள்ள உதவுகிறது.

சென்ற ஆண்டு, முடக்கம் தொடங்குவதற்குச் சற்று முன்பாக, புணேக்கு அருகிலுள்ள ஆலந்தி என்ற பகுதியில் ஜாக்ருதி பார்வைக் குறைபாடுள்ள பெண்கள் பள்ளியில் 135 மாணவர்களுக்கு பிரெய்லி கற்பிப்பதற்கான இந்தப் புதுமையான வளாகத்தை இச்சங்கம் அமைத்தது. இதேபோன்ற வளாகங்களைப் பிற பள்ளிகளில் அமைக்கும் வாய்ப்புகளைத் தேடலாம் என்று எங்கள் சங்கம் தீர்மானித்தது.

பிரெய்லி என்பது உயர்த்தப்பட்ட புள்ளிகளால் ஆன எழுத்துகளைக் கொண்ட, உலக அளவில் ஏற்கப் படும் எழுத்து வடிவம் ஆகும். பார்வைக் குறைபாடு கொண்டோர் தங்கள் விரல்களால் இவற்றைத் தொட்டுணர்ந்து படிக்கலாம் என்கிறார் இவர். ஆனீ என்ற இந்தக் கருவி, உலகின் முதல் டிஜிட்டல் பிரெயிலி கற்பிக்கும் கருவியாகும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷோபனா பரஞ்சிபே, திங்கர்பெல்லின் சாய்ஃப் ஷேக் மற்றும் DG பங்கஜ் ஷா, சங்கத்தலைவர் மகரந்த் ஃபாட்கே, பள்ளி அறக்கட்டளை தலைவர் ஷாந்திலால் லுன்கட் மற்றும் புஷ்பா லுன்கட்.

ஹெலன் கெல்லருடைய ஆசிரியர் ஆன்சுல்லிவன் பெயர் இதற்குச் சூட்டப்பட்டுள்ளது. பெங்களூரிலிருக்கும் திங்கெர்பெல் ஆய்வகத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கருவிகள், அரசு, தன்னார்வலர் அமைப்புகள் மற்றும் முற்போக்குப் பள்ளிகளுடன் இணைந்து, பார்வைக் குறைபாடு கொண்டோருக்கான கற்றல் மையங்கள், பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ளன.

புணேவுக்கு அருகிலுள்ள போசரி என்ற பகுதியில், படாஷிபாய் ரதன்சந்த் மனவ் கல்யாண் அறக்கட்டளை, பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்காக ஒரு பள்ளியை நடத்தி வருகிறது.

இந்தப் பள்ளியில் இந்தச் சங்கம் 10 கருவிகளுடன் ஒரு ஸ்மார்ட் வகுப்பறையை நிறுவியது. ஒவ்வொரு கருவியின் விலை ரூ.64,000. திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷோபனா பரஞ்சிபே, Rtn வர்ஷா டாவ்லெ மற்றும் ஆனீ ஸ்மார்ட் வகுப்பறைக் குழுவினர் ஆறு மாதங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றி இந்தத் திட்டத்தை நிறைவு செய்தார்கள்.

இந்தப் பள்ளி இரண்டு கருவிகளுக்கு நிதியளித்தது, RC சிவாஜிநகர் ஒரு கருவியை ஆதரித்தது. DGE பங்கஜ் ஷா, பள்ளி அறக்கட்டளையின் தலைவரும் RC பூனாவின் பதிவு உறுப்பினருமான ஷாந்திலால் லுன்கட் ஆகியோர் இந்த ஸ்மார்ட் வகுப்பறையைத் தொடங்கி வைத்தார்கள். ■

கங்கை ஆற்றைப்பற்றிக் கற்றுக்கொள்ள ஒரு மகிழ்ச்சியான வழி

ரஷீதா பகத்

அலஹாபாத் மிட்-டவுன் ரோட்டரி சங்கம், RID 3120ஐச் சேர்ந்த உறுப்பினர்கள், தங்களுடைய நகரில் சேரிப்பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு இந்தியப் பண்பாட்டைக் கற்றுத்தரத் தீர்மானித்தார்கள். அதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தைச் சிந்தித்தார்கள்: இவர்களில் சுமார் 100 குழந்தைகளை நாட்டின் முதல் நவீன கங்கைக் காட்சிக் கூடத்துக்கு அழைத்துச்செல்வது.

இந்தக் காட்சிக்கூடம் 2011ல், பிராயாக்ராஜிலுள்ள இந்தியத் தேசிய அறிவியல் கல்விக்கழகத்தில் (NASI) திறந்துவைக்கப்பட்டது. இந்தத் தனித்துவமான அருங்காட்சியகம், கங்கை ஆற்றின் அனைத்து அம்சங்களையும் பார்வையாளர்களுக்கு முழுமையாக விளக்கும் பல ஆர்வ மூட்டும் காட்சிப்பொருட்களைக் கொண்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் தலைவர் டாக்டர் திவ்யா பர்தரியா இது பற்றிப் பேசுகையில், இந்தக் குழந்தைகளுக்குத் தங்களுடைய மிகச் சிறந்த பண்பாட்டைப்பற்றிச் சொல்லித்தரவேண்டும், பல காரணங்களால், பல ஆண்டுகளாக அது அழிந்து கொண்டிருக்கிறது என்பதை விளக்கவேண்டும், அதற்கு முதன்மைக் காரணம், நம் தேசியச் சொத்துகளை எண்ணி நாம் இன்னும் பெருமை கொள்வதில்லை என்பது தான் என்பதைக் கற்றுத்தர வேண்டும் என்பதுதான் எங்களுடைய முதன்மை நோக்கம் என்றார்.

NASIயின் செயல்பாட்டுச் செயலாளரான டாக்டர் நீரஜ் சங்க உறுப்பினர்களுடன் பேசுகையில் புனித கங்கை தன்னுடைய சமூகப் பொருளாதார, பண்பாட்டு, அறிவியல் மற்றும் சூழியல் முக்கியத்துவத்தால் ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தாலும், இந்த ஆற்றின் இருப்பே அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது, காரணம், ஆண்டு தோறும் அங்கு கொட்டப்படும் பெரும் அளவிலான மாசுபடுத்திகள் தான் என்று விளக்கினார். இதனால், NASI அவையினர் கங்கையைப் பாதுகாத்து மீட்கவேண்டிய தேவையைப் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தத் தீர்மானித்தார்கள். அதற்காக, இந்த ஆற்றின் மத, பண்பாட்டு, சமூகப் பொருளாதார மற்றும் அறிவியல் அம்சங்களைச் சுட்டிக்காட்டும் கங்கைக் காட்சி கூடத்தை ஓர் அறிவியல் அணுகுமுறையில் அமைக்கத் தீர்மானித்தார்கள்.

இப்போது, ரோட்டரி சங்கம் இதில் என்ன செய்வது என்று பார்ப்போம். குழந்தைகளைத் தங்கள் வீடுகளில் இருந்து அழைத்து வந்து, கங்கைக் காட்சிக்கூடத்துக்கு

ஒரு சங்க உறுப்பினர் வீட்டில் குழந்தைகளுக்கு மதிய விருந்து.

அழைத்துச்சென்று, மீண்டும் அவர்களை வீடுகளிலேயே விடுவதற்கான போக்கு வரத்து அவர்களுக்குத் தேவைப்பட்டது. அப்போது, சங்க உறுப்பினர் அருண் பாகா வடிவில் ஒரு நல்ல சமாரியர் வந்தார். இந்தக் குழந்தைகளை அழைத்து வருவதற்காகத் தன்னுடைய மாருதி வண்டியை இலவசமாக வழங்கினார். அதன் பெயர் “ஆசி கள்”என்று பொருத்தமாக அமைந்திருந்தது வியப்புதான்!

இந்த முயற்சிக்காக என்னுடைய வண்டிச் சேவைகளை இலவசமாக வழங்கியது எனக்குப் பெருமை என்றார் அவர். இந்தத் திட்டத்தின் வெற்றி யையும், குழந்தைகளுடைய ஆர்வம், மகிழ்ச்சியையும் பார்த்தவுடன், திவ்யாவும் அவரும் மற்ற சங்க உறுப்பினர்களும் இந்தத்

அலகாபாதில் உள்ள கங்கா கேலரியில் குழந்தைகள்.

திட்டத்தைத் தொடரத் தீர்மானித்துள்ளார்கள், இதன்மூலம், இதன் வீச்சு இன்னும் கூடுதலான குழந்தைகளுக்கு நீட்டிக்கப்படும்.

குழந்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக இந்த அருங்காட்சியகத்துக்கு வந்தபோது, தங்கள் பண்பாட்டை அறிந்திருத்தல், கொண்டாடுதல், பேணுதல் ஆகியவற்றின் தேவை அவர்களுக்கு விளக்கப்பட்டது. கௌ காட் சேரிப் பகுதியில் வாழும் 12ம் வகுப்பு மாணவரான பிரீத்தி, தன்னுடைய மகிழ்ச்சியை இருவிதங்களில் விளக்கினார்: முதலில், நோய்ப்பரவல் நேரத்தில் இப்படி வெளியில் சென்று திரும்பியது, இரண்டாவதாக, தங்களுக்கு நன்கு தெரிந்த ஆறு என்று நினைத்துக் கொண்டிருந்த கங்கையைப்பற்றிய புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டது.

அருங்காட்சியகத்திலிருந்து திரும்பிய குழந்தைகள் ஒரு ரோட்டரியன் இல்லத்தில் சுவையான மதிய உணவை உண்டார்கள், அவர்களுக்கு ஒரு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் பங்கேற்றது உண்மையில் மகிழ்ச்சியளித்தது. குளிர்காலப் பயணத்தை நாங்கள் மகிழ்ந்து அனுபவித்தோம், ரோட்டரியன்களுடைய குடும்பங்களுடன் மிகச் சிறந்த ஓர் அனுபவத்தையும் பெற்றோம் என்று பிரீத்தி கூறினார். குழந்தைகள் விளையாட்டுகளை விளையாடினார்கள், இயற்கையை ஆராய்ந்தார்கள், நொறுக்குத் தீனிகளை உண்டார்கள், அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்கள், பொதுவாக நேரத்தை நன்கு செலவிட்டார்கள், அந்தக் கணத்தை நன்கு அனுபவித்தார்கள் என்றார் தலைவர் திவ்யா. இந்தச் செயல்முறையில், நாங்கள் அனைவரும் மதிப்புமிக்க ஒரு விஷயத்தையும் தெரிந்துகொண்டோம்.

NASI ஒருங்கிணைப்பாளர் மற்றும் வழிகாட்டியான மீரா சுக்லா இது பற்றிய தன் கருத்தை கூறுகையில், உண்மையில், இந்த அருங்காட்சியகத்தின் அறிவியல் அம்சங்கள் அனைத்தையும் குழந்தைகளால் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. அதே நேரம், அவர்களுடைய குறுகுறுப்பு உணர்வு தூண்டப்பட்டிருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது. அவர்கள் பல கேள்விகளைக் கேட்டார்கள், இந்த ஆற்றைப்பற்றி அவர்களுக்கு இதற்குமுன் தெரியாத பல அம்சங்களைப் புரிந்துகொள்ள முயன்றார்கள் என்றார்.

ஆனால், அனைத்து எதார்த்த அனுபவங்களைப்போலவே, கங்கை ஆற்றின் பண்பாட்டு, மத, பொருளாதார, சமூக அறிவியல் மற்றும் இவை தொடர்பான அம்சங்கள் இங்கு காட்சி வடிவில் விளக்கப்பட்டுள்ளதைக் கண்டு குழந்தைகள் வியந்தார்கள். இந்தக் காட்சிக்கூடத்தில் நிலப்பரப்புகள், சிலைகள், அசையும் மாதிரிகள், பல்லூடகக் காட்சிகள் மற்றும் வடிவமைப்புகள், இந்த ஆற்றின் தொடக்கத்துடன் இணைந்துள்ள கதைகள், நம்பிக்கைகள் மற்றும் இந்தப் புனித ஆற்றின் பயணம் ஆகியவை நிறைந்துள்ளதால், அவர்களுடைய ஆர்வம் தூண்டப்பட்டது.

சமூக இடைவெளி விதிமுறைகளைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பயணத்திலும் 8–18 வயதுள்ள 6–7 குழந்தைகள் மட்டும் தான் அழைத்துச் செல்லப்பட்டார்கள். நவம்பரில் தொடங்கிய இத்திட்டம் ஏற்கெனவே 100 குழந்தைகளுக்கு இந்த நல்ல அனுபவத்தை வழங்கியுள்ளது.■

ரோட்டரியின் செயல்பாட்டில் புதிய மாற்றங்கள்: பேரி ரஸ்ஸின்

V முத்துகுமரன்

சினெர்ஜி ரோட்டரி நட்புறவு கூட்டணி அதன் கூட்டாளர் சங்கங்களில் ஒன்றான ரோட்டரி மாவட்டம் 3292ஐச் சேர்ந்த துலிக்கெல் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து நடத்திய மெய்நிகர் சந்திப்பில் பேசிய பேரி ரஸ்ஸின், ரோட்டரியின் கொள்கை மற்றும் குறிக்கோள்களில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், நாங்கள் ஒரு புதிய கட்டமைப்பு உருவாக்குவோம். அதன் மூலம் இது வரை செயல்பட்டதைவிட மிகச் சிறப்பாகச் செயல்பட விரும்பு கிறேம். இனி வரும் காலங்களில் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் சேர்த்தல் ஆகியவை ரோட்டரியின் விரிவாக்கத்திற்கு வழிவகுக்கும். அதே நேரத்தில் 34 மண்டலங்களில் பிராந்தியமயமாக்கலுக்கான விருப்பம் அதிகரித்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். ஆர்வமுள்ள ரோட்டேரியன்களிடையே தலைமைத்துவ பண்பை வளர்க்கும் ஒரு செயல்திட்டத்தை தமது குழு தயாரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஒவ்வொரு மண்டலத்திலும் சராசரியாக 35,000 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். ரோட்டரியின் கொள்கைகள், குறிக்கோள்களுடன் எந்த சமரசமும் செய்துகொள்ளாமல் கலாசாரம், எல்லைவரையறை மற்றும் இதர தனித்துவமான அம்சங்களின் அடிப்படையில் அவற்றை வேறுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் விளக்கினார்.

புதிய கட்டமைப்பு

ரோட்டரி சங்கம் பிரமிட் அமைப்பின் அடிப்பகுதி போன்றது. அதற்கு நெகிழ் வான கட்டமைப்பு தேவை. அதன் மூலம் உறுப்பினர்களை அவர்களின் விருப்பதிற்கு ஏற்ப செயல்படவும், தக்கவைக்கும் வகையிலும் நிர்வகிக்கப்படும். சங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து புதிய ஆளுகை மாதிரி உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது RI ரோட்டரி சங்கங்களுக்கும் இடையே தொடர்பு இல்லாத நிலை உள்ளது. ஏனெனில் அவர்களில் பெரும்பாலோருக்கு எங்களின் உத்தி, இலக்கு, முன்னுரிமை பற்றி எதுவும் தெரியாது. மாவட்ட ஆளுநர்கள் செயல்பாடுகளில் நீண்ட கால மாற்றங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்றார் ரஸ்ஸின். அடுத்த 6 ஆண்டுகளில் சில மாதிரிகள் புகுத்தப்பட்டு அவை பிராந்திய அளவில் எப்படிச் செயல்படுகின்றன என்று பார்க்கப்படும். அதாவது ஆஸ்திரேலியா முதல் பிரிட்டன் வரை மற்றும் அமெரிக்காவில் இவை எப்படி செயல்படுகின்றன என்று பார்க்கப்படும். அதன் வெளிப்பாடுகள் என்ன என்பது அளவிடப்பட்டு எங்கள் தேவைகளுக்கு ஏற்ப அதில் மேலும் மாற்றங்கள் கொண்டுவருவோம்.

பிராந்திய வாரியங்களில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் போது தகுதியும் திறமையும் முக்கிய அளவுகோலாக இருக்கும். அடுத்த 10 ஆண்டுக் காலத்தில் RI வாரிய உறுப்பினர்கள் மற்றும் TRF அறங்காவலர்கள் பன்முகத்தன்மை, சமத்துவம் முதலானவற்றை பிரதிபலிப்பவர்களாக இருக்க வேண்டும் என்றார்.

ரோட்ராக்டர்களும் ரோட்டரி சங்கங்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அதே நேரத்தில் ரோட்ராக்டர்கள் தங்கள் அடையாளத்தை இழந்துவிடாமல் இருப்பது முக்கியமானது. கனடாவைச் சேர்ந்த, TRF அறக்கட்டளை டீன் ரோஹர்ஸ் பேசுகையில், நாங்கள் இப்போதுதான் ஆரம்ப திட்டத்துடன் காலடி எடுத்துவைக்கிறோம். இது தொடர்பாக ரோட்டேரியன்கள் அளிக்கும் யோசனைகள், பரிந்துரைகள் அடிப்படையில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும். உலகம் முழுவதும் இப்போது மெய்நிகர் தளங்கள் பிரபலமாகி விட்ட நிலையில், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப நாமும் அதை பின்பற்ற வேண்டும். அது மட்டுமல்லாது புதிய வாய்ப்புகள் மூலம் நெகிழ்வான ஆளுகை மாதிரியை உருவாக்குவதன் மூலம் வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும் என்றார்.

ரோட்டரி மாவட்டம் 3292ன் மாவட்ட ஆளுநர் ராஜீவ் பொக்காரல், அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் பயனுள்ள திட்டங்களைச் செயல் படுத்தினால் தான் ரோட்டரி சங்கங்கள் நன்மதிப்பை பெறமுடியும். முன்னாள் ரோட்ராக்டர்களை நாம் அதிக அளவில் உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். தமது மாவட்டம் 103 உலகளாவிய மானியத் திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது என்றும் அவற்றில் தற்போது 27 திட்டங்களுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மெய்நிகர் மாநாட்டில் பங்கேற்ற 250க்கும் மேலான ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளை துலிக்கல் ரோட்டரி சங்கத் தலைவர் சுஷில் பையாஞ்சு சிரேஷ்ட வரவேற்றார்.■

மாவட்டத் தலைவர்களைத் தலைமையேற்கத் தயார்செய்தல்

ஜெய்ஸ்ரீ

ஆண்டுதோறும் DGEக்கள், DGNகள் மற்றும் ரோட்டரி துறை சார்ந்த பிரிவுகளுக்கான உள்வரும் மாவட்டத் தலைவர்களுக்கு நடத்தப்படும் பயிற்சிப் பயிலகமான ‘லக்ஷ்யா’, சமீபத்தில் மூன்று நாட்கள் ஒரு மெய்நிகர் தளத்தில் நடைபெற்றது.

PRIPகள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பேனர்ஜி, PRIDகள் அசோக் மகாஜன், பாண்டுரங்க செட்டி, C பாஸ்கர், P T பிரபாகர், மனோஜ் தேசாய், RIDகள் பரத் பான்ட்யா, கமல் சங்வி, TRF அறங்காவலர் குலாம் வாகன்வதி, RIPE சேகர் மேத்தா மற்றும் RIDEகள் மகேஷ் கொட்பாகி, A S வெங்கடேஷ் போன்ற மூத்த ரோட்டரி தலைவர்கள் தங்களுடைய அறிவைப் பகிர்ந்துகொண்டதால், உள்வரும் மாவட்டத் தலைவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள்.

இது முதல் கட்டப் பயிற்சியாகும், இரண்டாவது கட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கை, TRF மற்றும் பொதுத் தோற்றத்தில் இலக்கு அமைக்கும் நிகழ்வுகள் நடைபெறும் என்றார் லக்ஷ்யாவின் ஒருங்கிணைப்பாளர் கொட்பாகி.

உங்களுடைய ஆண்டை ஒரு மிகச் சிறந்த வெற்றியாக ஆக்கி, இயன்ற எல்லா வழிகளிலும் மக்களுடைய வாழ்க்கைகளை மாற்றவேண்டும் என்பதில் முழு கவனம் செலுத்துங்கள் என்று PRIP சாபூ பங்கேற்பாளர்களைக் கேட்டுக்கொண்டார். க்ளெம் ரெனௌஃப் RIPEஆக இருந்த, ஜிம் போமர் RI தலைவராக அலுவல் பூர்வமாகப்

ராஜஸ்தானில் ஒரு ஆஷா கிரண் மையத்தில் குழந்தைகள்.

பரிந்துரைக்கப்பட்ட 1978 ரோட்டரி சந்திப்பை அவர் நினைவு கூர்ந்தார். நான் போமரை வாழ்த்திய போது அவர் சொன்னார், ராஜா, என்னுடைய முதல் பொறுப்பு, க்ளெம்மின் ஆண்டை வெற்றிகரமாக ஆக்குவதுதான். அதுதான் என்னுடைய ஆண்டுக்கான அடித்தளமாக இருக்கும். இதுபற்றி DGNகளிடம் பேசிய அவர், அதேபோல், நீங்களும் உங்கள் ஆண்டை ஒரு தயாரிப்பாக எடுத்துக் கொள்ளுங்கள், உங்களுக்குமுன் அந்தப் பொறுப்பில் உள்ளவர்களை ஆதரியுங்கள்.

என் நாட்டின் ரோட்டரி தலைமையுடன் பணியாற்றுவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. உங்களுடைய ஒரே லட்சியம், ரோட்டரியில் ஒரு மிகச்சிறந்த, புதுமைச் சிந்தனை கொண்ட சேவை ஆண்டை வழங்குவதுதான். இதை மறக்கமுடியாத ஆண்டாக ஆக்குங்கள் என்றார் பேனர்ஜி.

நீர் மற்றும் தூய்மைத் திட்டங்களுக்கு PRID சுசீல் குப்தாவின் மிகச்சிறந்த பங்களிப்புகளை நினைவுகூர்ந்தார். தலைவர்கள் சுற்றுச்சூழல் தீர்வுகளுக்குக் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார், ஒரு கால நிலைப் பேரிடரைத் தவிர்ப்பது எப்படி என்ற தலைப்பில் பில் கேட்ஸ் எழுதிய ஒரு புத்தகத்தைப் பரிந்துரைத்தார்.

பாஸ்கர் திஷா பொறுப்பில் இருந்த போது இந்தப் பயிற்சி கருத்தரங்கத்துக்கான விதை விதைக்கப்பட்டது என்று கொட்பாகி நினைவு கூர்ந்தார். இந்தப் பயிற்சி கருத்தரங்கங்களின் பாடத்திட்டத்தைப் பாஸ்கர் பாராட்டினார்.

பெரிய கனவு காணுங்கள்

நீங்கள் உங்களுடைய இலக்குகளை அமைக்கும்போது, அவை நீடிக்கப் படும் இலக்குகளாக இருக்கவேண்டும் என்பதை நினைவில் வையுங்கள் என்று வலியுறுத்தினார் மேத்தா. ரோட்டரி தலைவர்கள் பெரிய கனவுகளைக் காணவேண்டும், இன்னும் பெரிய இலக்குகளை

RIDE *மகேஷ் கொட்பாகி*

அமைக்கவேண்டும் என்று அவர் எப்போதும் வலியுறுத்திவருகிறார்.

நாட்டின் கட்டமைப்புக்குப் பங்களிக்கும் அளவுக்கு உங்களுடைய இலக்குகளைப் பெரிய அளவில் திட்டமிடுங்கள் என்று அவர் மாவட்டத் தலைவர்களை ஊக்குவித்தார்.

அரசால் செய்ய இயலும் திட்டங்களில் 10%ஆக அமையும் திட்டங்களை ரோட்டரி செய்ய வேண்டும் என்றார் அவர். அரசுடன், பிற கூட்டாளர்களையும் ரோட்டரியன்கள் நாடவேண்டும் என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார். வாழ்க்கைகளை மாற்றும் ஆற்றலும் மந்திரமும் நம்மிடம் உள்ளது. சக்கரம் சுழலத் தொடங்கும்போது, மந்திரம் நிகழும், நாம் ஒன்றாகச் சேர்ந்து சக்கரத்தைச் சுழற்றுவோம், மனிதகுலத்தைச் செழித்து வளரச்செய்வோம் என்றார் மேத்தா.

பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்

தன்னுடைய தலைமை வலியுறுத்தலான பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் என்பதைக் குறிப்பிட்டுப் பேசிய அவர், நம் பகுதியில் மிகப் பெரிய பாலின ஏற்றத்தாழ்வு, பாகுபாடு இருப்பதைச் சுட்டிக்காட்டினார், இதைச் சரி செய்வதற்கான விதைகளை விதைக்கவேண்டியது நம் பொறுப்பு என்றார்.

நாம் எல்லாக் குழந்தைகளுக்கும் சேவைத் திட்டங்களைச் செய்வோம், ஆனால், பெண் குழந்தைகள் மீது கவனம் செலுத்துவோம். இந்தப் பகுதியில் குறிப்பிட்ட இலக்கு அமைப்பு ஏதும் இல்லை, ஏனெனில், அதில் எல்லாக் கவனப் பகுதிகளும் உள்ளன. ஆனால், இந்தத் திட்டத்துக்காக ஒரு தனித் தலைவரை நியமிக்கவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் DGEகளிடம் கூறினார். RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ் பெண் குழந்தைகளுக்கு ஆற்றலளிக்கும் திட்டத்தைத் தன்னுடைய ஆண்டின் போதும் தொடர்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளதால், இது தொடர்பான திட்டங்களில் DGNகளும் பங்குபெறவேண்டும் என்று அவர் கூறினார்.

பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதற்கான ஒரு சிறப்புச் செயல் குழுவை அமைக்கவேண்டும் என்ற மேத்தாவின் பரிந்துரையை RI வாரியம் அங்கீகரித்துள்ளது, இதன் மூன்று உறுப்பினர்களில் RIDE வெங்கடேஷும் ஒருவர். மற்ற இருவரும் US மற்றும் ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்தவர்கள்.

பெண் குழந்தைகள் மற்றும் அனைத்துப் பெண்களுடைய முன்னேற்றத்துக்கான ஒரு பாதையை ரோட்டரியன்கள் உருவாக்குவது முக்கியம் என்றார் சாங்க்வி. நம் நாட்டின் மக்கள்தொகையில் 48% பெண்கள் என்றும், RID சங்வி சுட்டிக்காட்டினார்.

பாலினப் பாகுபாடு என்பது மூன்றாம் உலக நாடுகளில்மட்டும் நடக்கிற விஷயம் இல்லை; அது உலகெங்கும் பல வடிவங்களில் உள்ள ஒரு பிரச்சனை, மாதச்சுழற்சித் தூய்மை மேலாண்மைப் பிரச்சனைகள் போன்றவையும் இதன் கீழ் வரும் என்று வெங்கடேஷ் சுட்டிக்காட்டினார். மேம்பட்ட தூய்மை மேலாண்மை மற்றும் வீடுகளில் போதுமான அளவு நீர் கிடைத்தல் ஆகியவற்றின் வழியாகப் பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் வழிகளை நாடும்படி அவர் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார். இதன்மூலம், பெண்கள் தண்ணீர் கொண்டுவருவதில் நேரத்தை வீணடிக்காமல், மதிப்புமிக்க அந்த நேரத்தைப் பள்ளிகளில்

செலவிடலாம். அதேபோல், பெண்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சியின்மூலம் ஆற்றல் வழங்குதல், திறன் மேம்பாட்டை முன்னிறுத்துதல் ஆகியவற்றிலும் தலைவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றார் அவர்.

சமூகத்தின் தேவையைப் புரிந்துகொள்ளுங்கள், அதற்கேற்ப அவர்களுக்கு உதவுங்கள். ரோட்டரியின் எந்தக் கவனப் பகுதியை நீங்கள் செயல்படுத்தினாலும் சரி, பெண்களுக்கு ஆற்றல் வழங்கும் பரிமாணத்தை அதில் சேருங்கள் என்றார் மேத்தா.

சுற்றுச்சூழலை ஆதரித்தல்

ரோட்டரிக் கவனத்தின் மிகப் புதிய பகுதியான இதைச் செயல்படுத்துவது பற்றி மாவட்டத் தலைவர்களுக்கு அறிமுகம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை வழிநடத்திய வாகன்வதி, ரோட்டரி தொடக்கத்தில் கவனம் செலுத்தும் நான்கு பகுதிகளைச் சுட்டிக்காட்டினார்: திடக் கழிவு மேலாண்மை, மரம் நடுதல், விழிப்புணர்வுப் பரப்புரைகள், புதுப்பிக்கக்கூடிய (சூரிய ஒளி) ஆற்றல், சுருக்கமாக STAR. நாம் இப்போது உடனடியாகச் செயல்படவேண்டும்; இது அவசரமான வேலை. ஏனெனில், நம் குழந்தைகள், பேரப்பிள்ளைகளின் எதிர்காலம் இதைச் சார்ந்துள்ளது என்றார்.

TRF சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களுக்கான பன்னாட்டு நல்கைகளை ஜூலை 1 முதல் தொடங்கும் என்றார் வாகன்வதி.

இந்தக் கவனப் பகுதிக்கான தேசியத் தலைவர் PDG அஜய் குப்தா, STARன் வெவ்வேறு அம்சங்களுக்கான திட்ட யோசனைகளை மாவட்டத் தலைவர்களுடன் பகிர்ந்துகொண்டார். அது ஓர் உரையாடல் நிகழ்வாக அமைந்தது, நல்ல செயல்பாடுகள் தாராளமாகப் பகிர்ந்துகொள்ளப் பட்டன. கடற்கரைப் பகுதிகளில் சதுப்புநிலக்காடுகள் அமைத்தல், வட இந்தியாவில் காணப்படும் பயிர் எரிப்பைக் குறைப்பதற்கான தீர்வுகள், தொழில் நிறுவனங்களைச் சூரிய ஒளிப் பேனல்களை நிறுவும் படி ஊக்குவித்தல், சூரிய ஒளி மற்றும் உயிரி வாயுச் சுடுகாடுகள் ஆகியவை இந்த நிகழ்ச்சியில் பரிமாறிக்கொள்ளப்பட்ட யோசனைகளில் சிலவாகும். இந்தத் துறையில் வல்லமை கொண்ட ரோட்டரியன்கள் தேசியக் குழுவில் பங்கேற்க வேண்டும், யோசனைகளை வழங்கிப் பங்களிக்கவேண்டும் என்று மேத்தா அழைப்பு விடுத்தார்.

அனைத்து மாவட்டங்களுக்கும் இலக்குகள் அமைக்கப் பட்டன. மாவட்ட ஆளுநர்களுடைய இலக்குகள் காலாண்டுகள்தோறும் கண்காணிக்கப்படும், என்று கொட்பாகி கூறினார்.

RID 3131 PDG ரவீ தோத்ரெ லக்ஷ்யா தலைவராகச் செயல்பட்டார்.■

கோவிட் தடுப்பு மருந்து அளித்தல்: கை கொடுக்கும் ரோட்டரி

அசோக் மகாஜன்

ஜனவரி 2020ல் கொரோனா வைரஸைப்பற்றிய முதல் அறிக்கைகள் மெல்ல வரத் தொடங்கியபோது, இது ஒட்டுமொத்த உலகையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிடும் என்று நாம் அறிந்திருக்கவில்லை.

இப்போது, 1.35 பில்லியன் மக்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கும் மிகப் பெரிய பணியை இந்திய அரசு எதிர்கொள்கிறது.

1995ல் இந்தியாவில் இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து வழங்கல் திட்டம் தொடங்கியதிலிருந்து, இந்தத் துறையில் ரோட்டரி மிகுந்த அனுபவத்தைப் பெற்றுள்ளது. இதனால், கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் பணியில் அரசுடன் இணைந்து பணிபுரிவதற்கு இந்திய ரோட்டரி தலைவர்கள் கை நீட்டியதில் வியப்பில்லை.

இதைத் தொடர்ந்து, ரோட்டரி இந்தியாவின் கோவிட் செயல் குழுவுக்குத் தலைமைப் பொறுப்பேற்கும்படி எனக்கு அழைப்பு வந்தது. மத்திய நிதி அமைச்சகம், நிதி ஆயோகைச் சேர்ந்த அலுவலர்களுடன் இந்தச் செயல் குழு பல கூட்டங்களில் கலந்துகொண்டது, பின்னர், RIPE சேகர் மேத்தா வழிகாட்டுதலில் இந்தியாவின் ரோட்டரி மாவட்டங்கள் அனைத்துக்கும் 13 பகுதி ஒருங்கிணைப்பாளர்களை நியமித்துள்ளது.

நமக்கு முன்னால் மூன்று கட்டப் பணிகள் உள்ளன: 1) கோவிட் தடுப்பு மருந்துபற்றிய விழிப்புணர்வை உண்டாக்குதல்; 2) தவறான தகவல்களால் உண்டாகும் பொதுமக்கள் எதிர்ப்பை வெல்லுதல்; 3) தேவையான இடங்களில் தளவாட ஆதரவை வழங்குதல்.

வாசகர்கள் அரசை நம்பவேண்டும், நவீன அறிவியலில் நம்பிக்கை வைக்கவேண்டும், தங்கள் நேரம் வரும்போது தடுப்பு மருந்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கட்டுரையாளர் ரோட்டரி இன்டர்நேஷனலின் முன்னாள் இயக்குநர், மற்றும், ரோட்டரி இந்தியாவின் கோவிட் செயல் குழுத்தலைவர்.■

புதுப்பொலிவு பெற்ற கிராமப் பள்ளி

ரோட்டரி செய்திக்குழு

சங்கத்தலைவர் நந்தகுமார், செயலாளர் ராஜேஷ் கந்தமூர்த்தி மற்றும் திட்டத்தலைவர் D P ராகவன் பள்ளியில்.

2018ம் ஆண்டு முதல், ரோட்டரி மாவட்டம் 2981க்கு உட்பட்ட புதுச்சேரி போர்ட் ரோட்டரி சங்கம் மேற்கொண்ட முன்முயற்சியின் காரணமாக தமிழகம்-புதுச்சேரி எல்லைப்பகுதியில் பூத்துரை கிராமத்தில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளி தரம் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் அந்தப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள், நூலகம், கழிவறைகள், குடிநீர்வசதி செய்துதரப்பட்டன.

அண்மையில் அந்தப் பள்ளிக்கு ரோட்டரி சங்க உறுப்பினர்கள் ஒருகணினியை நன்கொடையாக வழங்கினர். அடுத்து பள்ளி மைதனத்தில் விளையாட்டுச் சாதனங்கள் நிறுவப்பட உள்ளன என்றார் சங்கத்தின் செயலாளர் ராஜேஷ் கந்தமூர்த்தி.

25 ஆண்டுகள் பழமையான சங்கத்துடன் அந்தப் பள்ளி கடந்து ஆறு ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டுள்ளது. அந்தப் பள்ளி ஒரு காலத்தில் பாழடைந்த நிலையில் இருந்தது. எங்கள் சங்கத்தின் உறுப்பினர் ஸ்ரீகாந்த் சிவராமன், சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக ஒவ்வொரு முறை அந்த பள்ளியைக் கடந்து செல்லும் போதும் அந்த பள்ளி இடிந்த நிலையில் இருப்பதைக் கண்டு மனவேதனை அடைந்திருக்கிறார். அந்த பள்ளியை புனரமைக்க நமது சங்கம் உதவவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார் என்றார் ராஜேஷ் கந்தமூர்த்தி. ஸ்ரீகாந்த் ஆதரவளிக்க முன்வந்ததை அடுத்து அப்பள்ளியை தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கை களை நாங்கள் மேற் கொண்டோம். கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.20 லட்சம் செலவிட்டு பள்ளிக்கு படிப்படியாக வசதிகளை செய்து கொடுத்தோம்.

ஒரு கணினி பள்ளிக்கு வழங்கப்படுகிறது.

அந்த கிராமத்தில் அது ஒரே பள்ளிதான். ஐந்தாம் வகுப்புவரை உள்ள பள்ளியில் 135 மாணவர்கள் படித்து வருகின்றனர். RILMன் ஆஷா கிரண் திட்டத்தைச் செயல்படுத்த சங்கம் ஆதரவளித்து வருகிறது. 66 குழந்தைகளின் கல்விக்காக ரூ.1.65 லட்சம் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் அனைவரும் கூட்டாக 33 குழந்தைகளுக்கு நிதியுதவி செய்திருந்தாலும், சங்கத்தின் தலைவர் நந்தகுமார், அதற்கு சமமாக மேலும் 33 குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறார் என்றார் சங்கத்தின் செயலாளர். ■

Lakshya
RISING TO CONQUER

ஆப்பிரிக்க நாடுகளுக்குச் செல்லும் RILM டிஜிட்டல் வகுப்பறை

V முத்துகுமரன்

இலக்கு அமைக்கும் மெய்நிகர் கருத்தரங்கமான லக்ஷ்யாவில் RIPE சேகர் மேத்தா, உள்வரும் மாவட்ட ஆளுநர்கள், PM ஈ-வித்யா TV, தீக்ஷா செயலியின் வழியாக 1–12 வகுப்பில் 10 கோடி மாணவர்களுக்கு ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் ஒளிபரப்பப்பட்டுவரும் RILMன் மின் கற்றல் பாடத்திட்டங்களை மாநில அரசாங்கங்களுக்குப் பரிந்துரைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார், இதன்மூலம், அவை உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு 25 கோடி இந்தியப் பள்ளிக் குழந்தைகளுக்குப் பயன்படும் என்றார்.

தீக்ஷா இணையத் தளத்தில் 10% ரோட்டரி உள்ளடக்கமாகும், இது மட்டும் கடந்த ஆறு மாதங்களில் 50 கோடி முறைகளுக்குமேல் பார்க்கப் பட்டுள்ளது என்றார் அவர். ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சிக்கிம், ஒடிஷா அரசாங்கங்கள் RILMஐ அணுகி, NCERT ஆதரவுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மின் பாடத் திட்டத்தைத் தங்கள் பள்ளிகளுக்கு நீட்டிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளன. GoI சானலுடன், டாடா ஸ்கை, ஏர்டெல், ஜியோ TV போன்ற ஆறு டிஜிட்டல் சேவை வழங்குநர்கள் இந்த ஒலி-காட்சி உள்ளடக்கத்தை ஒளிபரப்புகிறார்கள்.

விரைவில், ஆப்பிரிக்காவிலுள்ள டோகோவில் மின் கற்றல் வெள்ளோட்டம் பார்க்கப்படும், இதற்காக உலக வங்கி நிதி கோரப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து, இதை இன்னும் 10 ஆப்பிரிக்க நாடுகளுக்குக் கொண்டுசெல்லலாம் என்றார் மேத்தா.

RILM தலைவர் RID கமல் சங்வி, DGEக்களும் DLCCக்களும் 2025க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெறச் செய்வதற்கு வலிமை, பொறுமை, பேரார்வத்துடன் பெரிய கனவுகளைக் காணவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கோவிட் முடக்கத்தின்போதுகூட, RILM அநேகமாக உலகின் மிகப் பெரிய மின் கற்றல் திட்டங்களைத் தொகுத்துள்ளது. இணையப் பயிற்சி நிகழ்வுகளின் வழியாக, 100,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொண்டார்கள்.

RILM தலைமை வியூக அலுவலர் பிஸ்வஜித் கோஷ் வழங்கிய உரையில், 16,000க்கும் மேற்பட்ட பள்ளிகள், 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், 45,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ரோட்டரி சங்கங்களுடைய மின்கற்றல் கருவிகள், வன்பொருள் நன்கொடையால் பலன் பெற்றார்கள் என்றார்.

வயதுவந்தோர் கல்வி

2015–18இலிருந்து நடந்துவரும் ஒரு வெள்ளோட்டத் திட்டத்தின்கீழ், ரோட்டரி 87,870 எழுத்தறிவற்ற வயதுவந்தோரை எழுத்தறிவுள்ள மக்களாக ஆக்கியுள்ளது. இந்தத் தீக்ஷா திட்டத்தில் மாணவர் தன்னார்வலர் ஒருவர் வயதுவந்த ஒருவருக்குப் படிக்கவும் எழுதவும் எளிய கணக்கு களைப் போடவும் கற்பிப்பார்.

பிரம்மகுமாரிகள், பாரத் ஸ்கவுட்ஸ் (சாரணர்), தனியார் பள்ளிகள் போன்ற குழுக்களுடன் நாங்கள் சேர்ந்து பணிபுரிந்தோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து கோடிப் பலன்

ஒடிஷாவில் ஒரு ஆஷா கிரண் மையத்தில் குழந்தைகள்.

பெறுவோரைச் சென்று சேர்வதற்காக, வயதுவந்தோர் கல்வியில் வித்யா, சிக்ஷா, ஸ்வாபிமான் போன்ற புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம் என்றார் கோஷ்.

இந்தியாவில் 28.7 கோடி வயது வந்தோர் எழுத்தறிவற்றோர் உள்ளார்கள், உலகத் தொகையில் இது 37 சதவிகிதமாகும்.

RILM அடிப்படை எழுத்தறிவுப் பாடத்துக்கான ஒரு தொடக்கநிலைப் பாடத்திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது உள்ளூர் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது என்றார் RILM வயதுவந்தோர் எழுத்தறிவுத் தலைவர் ஆப்கா சிங்.

கண்ணியம் (Dignity) என்ற பெயரிலான திட்டம், ஐந்து பன்னாட்டு நல்கைகளின் வழியாக (வயதுவந்தோர் எழுத்தறிவின் கீழ்) 1,000க்கும் மேற்பட்ட கைம்பெண்கள், தனிப் பெண்களுக்குப் பணி சார்ந்த திறன்களைப் பயிற்சியாக அளித்து வருகிறது என்றார் RILM திட்ட இயக்குநர் ஜிலாம் ராய்சௌத்ரி. அப்போலோ மெட்ஸ்கில்ஸுடன் இணைந்து 10 நகரங்களில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டுவரும் சக்ஷம் பாரத் திட்டம், 140க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு மருத்துவச் சேவைகளில் பயிற்சி அளித்துவருகிறது.

ஆஷா கிரண்

முதல் கட்டத்தில், ரோட்டரி 12 மாநிலங்களைச் சேர்ந்த 33 NGOக்களுடன் இணைந்து பணியாற்றி, பள்ளியிலிருந்து விலகிய 37,436 குழந்தைகளை அடையாளம் கண்டது. அவர்களில் 35,078 பேரை நாங்கள் வழக்கமான அரசுப் பள்ளிகளுக்கு அழைத்துவந்தோம் என்கிறார் ஜிலாம். அடுத்த ஐந்து ஆண்டுகளில், மாநில அளவுக் கூட்டு முயற்சிகளின் வழியாக 100,000 குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அனுப்பவேண்டும் என்று ரோட்டரி இலக்கு நிர்ணயித்துள்ளது.

RILM துணை இயக்குநர் அன்ஷு பெரி பேசுகையில், 2,964 அரசுப் பள்ளிகள் மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. 3,000க்கும் மேற்பட்ட நூலகங்கள் உருவாக்கப் பட்டுள்ளன என்றார்.

RIDEக்கள் மகேஷ் கொட்பாகி, A S வெங்கடேஷ் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் பேசினார்கள்.■

TRF உதவியுடன் நற்பணி

திருப்பூரில் ரோட்டரி IMA ரத்த வங்கி

ரோட்டரி செய்திக்குழு

இடமிருந்து: PDG B A *முருகநாதன், ரோட்டரி* IMA *ரத்த வங்கி தலைவர்* Dr *செந்தில்குமரன்,* RC *திருப்பூர் ஸ்மார்ட் சிட்டி தலைவர் ப்ரேமாநந்த்,* PDG A *கார்த்திகேயன்,* RC *திருப்பூர் மெட்டல் டவுன் தலைவர் சிவச்சந்திரன், திட்டத் தலைவர்* K *கணேஷமூர்த்தி,* DGN B *இளங்குமரன் மற்றும்* DGE K *சண்முகசுந்தரம்.*

'சக்கரத்தில் ஆயுள்' என்ற பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் வழியாக ஒரு நடமாடும் ரோட்டரி IMA ரத்த வங்கியை RC திருப்பூர் ஸ்மார்ட், RID 3202 தொடங்கிவைத்தது. ரூ.41.59 லட்சம் செலவில் அனைத்து வசதிகளுடனும் வடிவமைக்கப் பட்டுள்ள இந்த வேனில் ஒரே நேரத்தில் மூன்று பேரிடமிருந்து ரத்த தானம் பெறலாம், 150 யூனிட் ரத்தம்வரை சேமிக்கலாம், ஒரு நாளைக்கு 100 யூனிட் ரத்தம்வரை திரட்டலாம்.

இந்த வண்டியில் ஒலிபெருக்கி வசதி உள்ளதால், மக்களிடையே ரத்ததானம் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கலாம், கிராமப்புற, தொலைதூரப்பகுதிகளில் ரத்த தான முகாம் நடத்தலாம், என்றார் திட்டத் தலைவர் K கணேஷமூர்த்தி.

இந்தத் திட்டத்தின் பன்னாட்டுக் கூட்டாளர், RC வ்யூஸ் சென்ட்ரல் அபுஜா, நைஜீரியா, RID 9125, சக கூட்டாளர்கள், RC திருப்பூர் சவுத் மற்றும் RC திருப்பூர் மெட்டல் டவுன்.■

Lakshya

நலமான வாழ்க்கையைப்பற்றி இளைஞர்களைப் பேசச்செய்யும் “நேர்வித நலன்” திட்டம்

கிரண் ஜெஹரா

நேர்வித நலன் திட்டம் (PPH) ஒரு மிகச் சிறந்த திட்டம் என்ற RIPE சேகர் மேத்தா, அதன் வெற்றிக்காக RID பரத் பான்ட்யாவைப் பாராட்டினார். பன்னாட்டு நல்கைகள் நலத் திட்டங்களுக்குதான் அதிக எண்ணிக்கையில் வழங்கப்படுகின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில், இந்தத் திட்டங்களை வளர்ப்பது, இரட்டிப் பாக்குவதில் கவனம் செலுத்துங்கள், அத்துடன், ரோட்டரி பிராண்ட்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குங்கள்.”

இலக்கை அமைக்கும் மெய்நிகர் நிகழ்ச்சியான லக்ஷ்யாவின் நலன் தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், நாம் மாற்றிய வாழ்க்கைகளைப் பற்றிப் பேசுவோம், ரோட்டரியின் பிராண்டை உலகுக்குக் காட்சிப்படுத்து வோம் என்றார், சங்கங்கள் நடத்திய நல முகாம்களிலிருந்து திரட்டிய தரவுகளைப் பயன்படுத்தி உள்ளூர் நல மையங்கள், அரசு அமைப்புகளுடன் கூட்டணிகளை அமைக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

RID பரத் பான்ட்யா பேசுகையில், தன்னுடைய வாடிக்கையாளர் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகத் தொடர்ந்து உழைக்கும் ஒரே தொழில், மருத்துவத் தொழில். மருத்துவருடைய தேவையே இருக்கக்கூடாது என்பது தான் இதன் உயர்ந்த நோக்கம் என்றார்.

அறுவைச் சிகிச்சை மருத்துவரான இவர், குணப்படுத்தும் நலப்பரா மரிப்பை எப்போதும் நம்பி வந்துள்ளார். ஆனால், நலப் பராமரிப் பின் எதிர்காலம் தடுக்கும் நலப் பராமரிப்பில்தான் உள்ளது என்பதை இத்திட்டம் தெளிவாக்கிவிட்டது என்றார் அவர்.

உப்பு, எண்ணெய், சர்க்கரை ஆகிய இந்த மூன்றும் உடல் பருமன், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவைக் கொண்டுவருகின்றன. இவை ஒன்றாகச் சேர்ந்து பெரிய வியாதிகளை உண்டாக்குகின்றன, இந்தியாவில் 60 சதவிகித மரணங்கள் இவற்றால் நிகழ்கின்றன. இதற்குக் காரணம், முறையற்ற வாழ்க்கைமுறை, அழுத்தம், உடற்பயிற்சி இல்லா மலிருப்பதுதான் என்றார் பான்ட்யா.

இளைஞர் குரல்

PPHன் மூலம் பள்ளிகளில் விழிப் புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவது தான் திட்டத்தின் முதல் பகுதி.

RIPE சேகர் மேத்தா மற்றும் PDG ரவி வட்லாமணி குண்டூரில் வெள்ளத்தால் வீடு இழந்தோருக்கு கொடுக்க ‘ஷெல்டர் கிட்’களை எடுத்துச் செல்கின்றனர்.

இந்த ஆண்டு சுமார் 4,000 பள்ளிகளையும், அடுத்த ஆண்டு 8,000 பள்ளிகளையும் இலக்காக நிர்ணயித்துள்ளோம், இதன் மூலம், நலமான வாழ்க்கைபற்றிப் பேசும் இளைஞர்களை நாம் உருவாக்குவோம்.''

நல முகாம்கள், ரோட்டரி குடும்பநலன் நாட்கள், கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய், ரூபெல்லா மற்றும் ஹெபாடிடிஸ் Bக்கான தடுப்பு மருந்து வழங்கல் நிகழ்ச்சிகள் ஆகியவையும் மிகப் பெரிய திட்டத்தின் பகுதிகளாக உள்ளன. 2030க்குள் காசநோயை நீக்குவதற்காக நாம் பணியாற்றுவோம். ஆனால், PM நரேந்திர மோதி 2025க்குள் இந்தியாவிலிருந்து காசநோயை நீக்க விரும்புகிறார். இந்த இலக்கை எட்டுவதில் PPH வழியாக நாம் ஒரு முக்கியப் பங்கை ஆற்றலாம் என்றார்.

போதை மருந்து அடிமையாதலைப் பற்றிப் பேசிய அவர், பஞ்சாப், வேறு சில மாநிலங்களில் உள்ள இளைஞர்களில் 50–60% பேர் போதை மருந்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள், இந்தியாவில் ஒவ்வொரு 10 விநாடிக்கும் ஒருவர் நிக்கோட்டின் அல்லது புகையிலையால் இறக்கிறார் என்றார். போதை மருந்து அடிமையாதலைக் குணப்படுத்தும் RAG உடன் இணைந்து பணியாற்றுவது இந்தப் பிரச்சனையைச் சரிசெய்ய மிகவும் உதவும் என்று அவர் பரிந்துரைத்தார்.

கோவிட் மற்றும் இந்தியா

கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் செயல் குழுத் தலைவர் PRID அசோக் மகாஜன் பேசுகையில், பெரிய நிறுவனங்களின் வளங்களைப் பெற்று, அவர்களுடைய உள் கட்டுமானத்தைப் பயன்படுத்தி இந்த நோக்கத்துக்கு நிதி திரட்டக்கூடிய தன்னார்வலர்கள் நமக்கு வேண்டும். கோரிக்கையின் பேரில் ஆதித்ய பிர்லா குழுமம் தடுப்பு மருந்துப் பணிக்காக ஏற்கெனவே ரூ.15 லட்சம் பங்களித்துள்ளது என்றார்.

தடுப்பு மருந்து வழங்கலுக்கு எதிர்ப்பு உள்ள இடங்களில், அதன் செயல்திறனைச் சுட்டிக் காட்டும்படி அவர் DGEகளைக் கேட்டுக்கொண்டார். இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் நம்முடைய திட்டத்தின்போது, இது போன்ற எதிர்ப்புகளை உடைக்கும் நம் வாதாடல் திறன் நிரூபிக்கப் பட்டது. இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கலைக் கையாளும் நம் வல்லமையும் வலைப்பின்னலும் அரசுக்கு மிக நன்றாகப் பயன்படும் என்றார் அவர்.

கோவிடால் நாம் இழந்த மக்களைத் திரும்பக் கொண்டுவர எந்த வழியும் இல்லை. ஆனால், நம்முடன் இருக்கிறவர்களுடைய பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்தலாம். அதற்கு நாம் தனி நபர் தூய்மை, சமூக விலகியிருத்தல், முகமூடி அணிதல், WHO வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல் ஆகியவற்றைச் செய்யலாம். கொரோனாவைரஸ் பரவலைத் தடுப்பது ஒவ்வொரு தனி நபருடைய பொறுப்பு என்றார் மகாஜன். PRID மனோஜ் தேசாய் இந்த நிகழ்ச்சியை வழிநடத்தினார்.

பேரிடர் மேலாண்மை

இயற்கைப் பேரழிவுகளின்போது சங்கங்கள் பின்பற்றக்கூடிய பேரிடர் மேலாண்மைக்கான RRR (Rescue (மீட்டல்), Relief (தீர்வு) மற்றும் Rehab (புனர்வாழ்வு)) திட்டங்களை PDG கிஷோர் குமார் செருகுமல்லி சுட்டிக் காண்பித்தார்.

RI *இயக்குனர் பரத் பாண்ட்யா*

பாதுகாப்பிடப் பொதித் (Shelter kits) திட்டத்தைப்பற்றி DGEக்களுக்கு விளக்கிய அவர், பேரிடர் உதவிக்கான இந்தக் கூட்டுப்பணியால் ரோட்டரியன்கள் தங்களுடைய சமூகங்களை உலகெங்கும் பேரிடரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் நேரடியாக இணைத்துச் செயல்படலாம் என்றார். இதைப்பற்றித் தொடர்ந்து பேசிய RIPE மேத்தா, பாதுகாப்பிடப் பொதிகளின் உதவியால், இயற்கைப் பேரிடர்களால் தங்கள் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு நாம் நெருக்கடி நேரப் பாதுகாப்பிடங்களை வழங்குகிறோம், அவர்கள் தங்கள் வாழ்க்கைகளை மீண்டும் கட்டமைக்க உதவுகிறோம் என்றார்.

சில DGEக்கள் பாதுகாப்பிடப் பொதிகளைத் தங்கள் தொழில் துறைக் கிடங்குகளில் சேமிக்க முன்வந்தார்கள், வேறு சிலர் இதே போன்ற ஒரு பேரிடர் உதவிப் பொதியை உருவாக்குவது பற்றிப் பேசினார்கள். ஆனால், தரத்தைப் பராமரிக்கவும் ரோட்டரி பிராண்டை உருவாக்கவும் மையமாக்கப்பட்ட அணுகுமுறை சிறந்தது என்று மேத்தா சுட்டிக்காட்டினார்.

DGE J ஸ்ரீதர், RID 3232, மீட்புப் பணிக்குத் தயாராக உள்ள ரோட்டரி என்ற தன்னுடைய மாவட்டத்தின் முன்னெடுப்பைப் பற்றிக் கூறினார். இந்தத் திட்டம், பேரிடரில் உயிர் பிழைத்தவர்களுக்கு உணவு, பாதுகாப்பிடம், மருந்து மற்றும் பிற தேவையான பொருட்களை வழங்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. எங்களிடம் 45 உறுப்பினர் குழு உள்ளது; ரோட்டரி பேரிடர் திட்டம், பேரிடர் மேலாண்மை நிதி, நெருக்கடி நேரங்களுக்காகத் தனியாக வைக்கப்பட்டுள்ளது. இவற்றின்மூலம், எங்களால் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த இயலும் என்றார் அவர்.■

WASH திட்டங்களில் கவனம் செலுத்துங்கள்: RIPE சேகர் மேத்தா

V முத்துகுமரன்

ரோட்டரி சுகாதாரத்திட்டத்தலைவர் ரமேஷ் அகர்வால் (நடுவில்) மற்றும் WinS உலக தலைவர் P T பிரபாகர் கோவாவில் ஒரு பயிற்சிக் கூடத்தில் (கோப்புப்படம்).

நான்கு பகுதிகளும் ரோட்டரி இந்தியா மனிதத்தன்மை அறக்கட்டளையிலும் (RIHF) ரோட்டரி இந்தியா எழுத் தறிவுப் பணியிலும் (RILM) ஒரு DGEஐ நியமிக்க வேண்டும், அதன் மூலம் செயல் குழுக்களை அமைத்து, எழுத்தறிவு, நீர் மற்றும் தூய்மைத் திட்டங்களைத் தொடரவின்றி நிறைவேற்ற வழி செய்ய வேண்டும், CSR கூட்டுப் பணிகளைப் பெறுவதிலும் உதவ வேண்டும் என்றார் RIPE சேகர் மேத்தா.

இலக்கை அமைக்கும் மெய்நிகர் கருத்தரங்கமாகிய லக்ஷ்யாவின் WASH நிகழ்வில் பேசிய அவர், உள்வரும் ஆளுநர்கள், பன்னாட்டு நல்கைத் திட்டங்களைச் செயல்திறனுடன் நிறை வேற்றுவதற்கான ரோட்டரி வல்லுனர் அமைப்புகளுக்கான புதிய தொழில்நுட்பக் குழுக் களையும் உறுப்பினர்களையும் கண்டறியவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஐந்தாண்டு WASH இலக்குகள், அரசு அலுவலர்களுடன் விவாதித்தபின் சென்ற ஆண்டு உருவான தேசிய எண்ணச் செயல் முறைக்கு இணங்க அமைக்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

நீர் திரட்டும் இடங்களின் உருவாக்கம், நீர்நிலைகளை மீட்டல், மழை நீர் திரட்டல், வீட்டுக் குழாய் இணைப்புகள், கழிப் பறைத் தொகுதிகள், பள்ளியில் WASH (WinS) மற்றும் நலப் பராமரிப்பு வளாகங்களில் WASH (WinHCF) ஆகியவற்றுடன் தொடர்புடைய அரசுத் திட்டங்களில் 10 சத விகிதத்தைச் செயல்படுத்த ரோட்டரி உழைக்கும். 2021–26க்குள் ஒரு லட்சம் தடுப்பணைகளை அமைக்கவேண்டும் என்ற அரசின் இலக்கில் 10,000ஐ இந்தக் காலகட்டத்தில் நிறைவு செய்ய ரோட்டரி உழைக்கும், இந்தத் தடுப்பணைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.3 லட்சம் செலவாகும். ஒவ்வொரு மாவட்டத் துக்கும் 25 தடுப்பணைகள் இலக்கு அமைக்கப் பட்டுள்ளது, மொத்த இலக்கு, 2021–22ல் 1,000 தடுப்பணைகள்.

அதேபோல், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 55,000ல் 7,500 WinS மற்றும் WinHCF திட்டங்களையும், 1,000 கிராமங்களில் 160 கிராமங்களுக்கு வீட்டுக் குழாய் இணைப்புகளையும், 1.2 லட்சம் வீட்டுக்கழிப் பறைகளில் 20,000ஐயும், 50,000 மழைநீர் சேமிப்பு திட்டங்களில் 5,000ஐயும், ஐந்தாண்டுக் காலகட்டத்தில் 10,000 நீர் நிலைகளை (ஏரிகள், குளங்கள், படிக்கிணறுகள்) மாற்றியமைக்கும் பணியில் 750ஐயும் நிறைவேற்ற ரோட்டரி இலக்கு நிர்ணயித்துள்ளது.

நீர்க் குழாய் இணைப்புகள்

இந்திய அரசிசுன் "ஜல் ஜீவன்" (JJM) பணியின் ஒவ்வொரு வீட்டிலும் குழாய் மூலம் நீர் (HGNSJ) முதன்மைத் திட்டத்தின் கீழ், 2024க்குள் இந்தியாவில் ஒவ்வொரு வீட்டிலும் குழாய்மூலம் நீர் கிடைக்கும். 2019ல், 17.87 கோடி வீடுகளில் 3.27 கோடி வீடுகளில் தான் குழாய் இணைப்புகள் இருந்தன, அதாவது 18.5%. இது கடந்த ஓராண்டில் 37%ஆக (7 கோடி) உயர்த்தப்பட்டுள்ளது என்று ரோட்டரி இந்தியா தூய்மைப் பணித் தலைவர் PDG ரமேஷ் அக்கர்வால் தெரிவித்தார்.

JJM முன்னெடுப்புகளின் கீழ்,

குழாய் நீர் வழங்கலை மேம் படுத்துதல், பழுப்பு நீர் மேலாண்மை (மறுசுழற்சி) மற்றும் திறனை வளர்த்தல் ஆகிய பணிகளையும் ரோட்டரி மேற்கொள்ளும்.

WinS திட்டங்கள் 14.7 லட்சம் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன, இவற்றில் 70% அரசுப்பள்ளிகளாகும். இதில் ஏழு பகுதிகள் உள்ளன: வெவ்வேறு பாலினத்தவருக்குத் தனித்தனிக் கழிப்பறைகள், குடிநீர், கை கழுவும் நிலையங்கள், MHM, பராமரிப்பு, பழக்கத்தை மாற்றுதல் மற்றும் திறனை வளர்த்தல்.

WinS திட்டங்கள் பள்ளிகளில் மாணவர்கள் பதிவாகும் விகிதத்தை மேம்படுத்துவதுடன், கிராமங்களின் வாழ்க்கைத் தரங்களில் காணக்கூடிய பலன்களைக் கொண்டுவரும் நவீன மாற்றம் உண்டாக்குவோராகக் குழந்தைகளை மாற்றியுள்ளன என்று அக்கர்வால் குறிப்பிட்டார். இந்திய அரசு அறிமுகப்படுத்திய ODF-ப்ளஸ் வியூகத்தின் ஒரு பகுதியாக, அனைத்து வீடுகளுக்கும் இந்தத் தூய்மை வசதி நீட்டிக்கப்படுவதால், முந்தைய ஆறு ஆண்டுகளில், இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் ஒரு லட்சம் கழிப் பறைகளைக் கட்டின என்றார்.

நீர் திரட்டும் இடங்களை (தடுப் பணைகளை) மீட்டல், அதன் மூலம் மழை நீரை உறிஞ்சிக் கொள்வதற் கான அவற்றின் திறனை மேம் படுத்துதல், ஏரிகள், குளங்கள் மற்றும் தொட்டிகளைப் புதுப்பித்து அவற்றின் சேமிப்பு நிலைகளை மேம்படுத்துதல், சமூகத்தின் விவசாயத் தேவைகளை எட்டுதல், அவற்றைக் குடிநீர் மூலங்களாக ஆக்குதல் ஆகியவை ரோட்டரி இந்தியா நீர்ப் பணியின் ஒட்டுமொத்த இலக்குகள் என்று ரோட்டரி இந்தியா நீர்ப் பாதுகாப்பு அறக்கட்டளையின் தலைவர் PDG ரஞ்சன் திங்க்ரா குறிப்பிட்டார். இந்தியாமுழுவதும் 7,000 நீர்நிலை களை ஒரு படிப்படியான செயல் முறையின் மூலம் மீட்கலாம். 2005–19ல் நாம் 500க்கும் மேற்பட்ட கிராமங்களில் 300 நீர்நிலைகளைப் புதுப்பித்தோம், இதன் மூலம் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலன் பெற்றார்கள் என்றார் அவர்.

RIDE Dr மகேஷ் கொட்பாகி நிகழ்ச்சியை வழிநடத்தினார். PRID P T பிரபாகர் நிகழ்ச்சியைத் தொகுத்துக் வழங்கினார்.■

TRF உதவியுடன் நற்பணி

குவஹாத்தியில் தாய்ப்பால் வங்கி

ரோட்டரி செய்திக்குழு

RC குவஹாத்தி, RID 3240, குவஹாத்தி சத்ரிபரி கிறித்துவ மருத்துவமனையில் தாய்ப்பால் வங்கியொன்றை அமைத்துள்ளது. RID 5240, USA மற்றும் TRF வழங்கிய ஒரு பன்னாட்டு நல்கை ஆதரவின் கீழ் இது அமைக்கப்பட்டுள்ளது. போதுமான அளவு பால் உள்ள, கூடுதல் பாலை நன்கொடையாக வழங்க விரும்பும் அன்னையரிடமிருந்து பெறப்பட்ட பாலைப் பதப்படுத்தி ஓர் ஆழ உறைவிப்பானில் சேமிப்பதற்கு இது உதவும் என்று இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் பிபூதி தத்தா தெரிவித்தார். வடகிழக்குப் பகுதியில் தாய்ப்பால் வங்கி அமைவது இதுவே முதன்முறையாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இந்த மாநிலத்தில் பல NICUகள் உருவாகியிருந்தாலும், முன்கூட்டியே பிறந்த, அல்லது, குறைந்த எடை யுடன் பிறந்த குழந்தைகளுக்குப் போதுமான ஊட்டச்சத்து ஆதரவை வழங்கும் தாய்ப்பாலுக்கான தேவை எப்போதும் உள்ளது. இந்தத் தாய்ப்பால் வங்கி இப்பகுதியில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்க உதவும் என்று இந்த மருத்துவமனையின் குழந்தைகள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தீவிரச் சிகிச்சை வழங்கும் வல்லுனர் டாக்டர் தேவஜீத் குமார் சர்மா தெரிவித்தார். இந்த மருத்துவமனையில் குழந்தை பெற்றுக்கொள்ளும் அன்னையர்கள் தான் இந்தத் தாய்ப்பால் வங்கிக்கு முதன்மையான நன்கொடையாளர்கள். எனினும், இந்த மருத்துவமனை கிராமப்புறப் பகுதிகளில் முகாம்களை நடத்தி, பாலூட்டும் தாய்மார்களைத் தங்கள் தாய்ப்பாலை நன்கொடையாக வழங்கும்படி ஊக்குவிக்கும்.■

அமைதி, சமாதானம் நம்மிலிருந்து தொடங்கட்டும்!

ஜெய்ஸ்ரீ

ரோட்டரியின் அமைதித் திட்டங்கள் நமது பகுதியில் அவ்வளவு பிரபலமாக இல்லை. நாம் அதற்கு போதிய முக்கியத்துவம் தரவில்லை என்பது வேதனையளிக்கிறது. நாம் அதில் போதிய கவனம் செலுத்த வேண்டும் என்றார் 4, 5 ,6 மற்றும் 7வது மண்டலங்களுக்கான TRF மெய்நிகர் கருத்தரங்கில் பேசிய TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன்.

நமது அமைதித்திட்டங்கள் பல அமெரிக்க ரோட்டேரியன்களுக்கு பிரதானமாக உள்ளன. உலக அமைதிக்கு நமது அறக்கட்டளை உறுதியான பங்களிப்பை அளிக்கிறது என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் ஈர்க்கப்படுகிறார்கள். அறக்கட்டளைக்கு நிதி பெறுவதில் ஒரு ஊக்கியாக இருப்பதைத்தாண்டி, அமைதிக்காக தங்களது வழியில் பங்களித்த சில முன்னாள் ரோட்டரியினரையும் உருவாக்கியுள்ளனர் என்றார் அவர்.

1960ம் ஆண்டு முதல் தொடர்ந்து 60 ஆண்டுகள் மோதலில் சிக்கிய பிலிப்பின்ஸில் உள்ள மிண்டனோவா தீவில் சண்டையை முடிவுக்குக் கொண்டுவந்து அங்கு அமைதியை நிலைநாட்டியதில் முக்கியப்பங்குவகித்த அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமாதான அறிஞரான மானுவேலா மோட் என்பவரின் வெற்றிக்கதையை அறங்காவலர் தலைவர் மேற்கோள்காட்டினார். 2019ம் ஆண்டில் அந்த தீவில் உலக வங்கி முதலீட்டுத் திட்டத்தை மதிப்பிடுவதற்காக அவர் அங்கு சென்றார். இது போரிடும் கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் சமாதான நடவடிக் கைக்கு கொண்டுவந்தது. ஏனெனில் அவர்கள் இருபிரிவினருமே அங்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பட வேண்டும் என்பதில் ஒன்றாக இருந்தனர்.

சேவை மூலம் அமைதியை நிலைநாட்டுவதற்கான மற்றொரு எடுத்துக்காட்டு போலியோ இல்லாத ஆப்பிரிக்காவை பிரகடனப்படுத்தியது. ஒவ்வொரு குழந்தையையும் போலியோ தடுப்பூசி சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தில் சுகாதார ஊழிர்கள் குறிப்பாக பெண்கள் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் பயணித்ததை நாங்கள் பாராட்டினோம். ஏனெனில் ஆப்பிரிக்காவின் ஏதாவது ஒரு பகுதியில் மோதல்கள் இருந்து கொண்டே இருந்தன. எனவே இந்த ஆண்டு ஆப்பிரிக்காவில் முதன் முதலாக உகாண்டாவில் உள்ள மேக்கரேரி பல்கலைக்கழகத்தில் ரோட்டரியின் 8வது அமைதி மையத்தை திறந்து கொண்டாடினோம்.

ரோட்டரி அமைதி மையங்களின் தோற்றத்தையும் அவர் விவரித்தார். ஒரு கட்டத்தில் ரோட்டரி அமைதிப் பணி ஆய்வுகளுக்காக ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க முடியுமா? என்று கூட நாங்கள் ஆச்சரியப்பட்டோம். இதற்கான திட்டம் கிடப்பில் இருந்த போது, அப்போது TRF அறங்காவலராக இருந்த ராஜேந்திர சாபூ, அந்த திட்டத்தை எடுத்து, கெல்லாக்ஸ் ஸ்கூல் ஆஃப் பிஸினஸ் நிறுவனத்தில் கடந்துவந்து, புதிதாக கட்டுவதை விட இருக்கும் நிறுவனத்தில் அமைதி மையம் உருவாக காரணமாக இருந்தார். இது தொடர்பான யோசனையை சாபூ, அப்போது TRF தலைவராக இருந்த பால்வோ கோஸ்டா மற்றும் PRIP லூயிஸ் கியே ஆகியோருடன் பகிர்ந்துகொண்டார். இதையடுத்து அவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. தற்போதுள்ள ரோட்டரி அமைதி மையங்கள் உருவாக முன்னோடியாக இருந்தவர் ராஜேந்திர சாபூ. இன்று ஏழு பல்கலைக்கழகங்களில் 8 அமைதி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் அமெரிக்காவின் டியூக் பல்கலைக் கழகம் மற்றும் வடக்கு கரோலினா பல்கலைக்கழகம் இரண்டும் ஒரு அமைதி மையத்தை பகிர்ந்து கொள்கின்றன. மற்ற மையங்கள் ஜப்பான்,

TRF தலைவர் K R ரவீந்திரன் மற்றும் அறங்காவலர் குலாம் வஹன்வதி.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, ஸ்வீடன் மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ளன. இந்த மையங்களிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஐம்பது மாணவர்கள் அமைதி மற்றும் அமைதிக்கான மேம்பாட்டு படிப்புகளில் முதுகலைப் பட்டம் பெறுகின்றனர். நம்மால் போர்களை நிறுத்த முடியாமல் போகலாம். ஆனால், அமைதிக்கான பேச்சுவார்த்தையை நடத்தக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு நாம் பயிற்சி அளிக்க முடியும்.

ரவீந்திரன் கொழும்புவில் நடந்த ஒரு மோதல் சம்பவத்தை பகிர்ந்து கொண்டார். இலங்கையின் தலைநகர் கொழும்புவில் வெடிகுண்டுகள் நிரம்பிய வேன் ஒன்றை, இரண்டு தற்கொலைப் படையினர் ஓட்டிவந்தனர். அவர்களை பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமையகத்தின் வாயிலில் இருந்த 6 பாதுகாவலர்கள் தடுத்து நிறுத்தினர். அப்போது தற்கொலைப்படையினர் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதில் அந்த 8 பேரும் பலியானார்கள். அந்த குண்டுவெடிப்பில் அந்த கட்டடத்தின் மேற்கூரை தகர்க்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், அப்பகுதியில் இருந்த ரவீந்திரனின் வீடு உள்பட 15க்கும் மேற்பட்ட வீடுகள் சேத மடைந்தன.

1991ம் ஆண்டு ஜூன் மாதம், நான் மாவட்ட ஆளுநராக பொறுப் பேற்பதற்கு முன்பு நடைபெற்ற இந்த சம்பவத்தில் அருகில் உள்ள நர்சரி பள்ளியில் படிக்கும் குழந்தைகள் உள்பட 21 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 175 பேர் காயமடைந்தனர். வெடிகுண்டு தாக்குதலில் ஒரு கி.மீ. தொலைவில் உள்ள எனது வீட்டின் ஜன்னல் தகர்க்கப்பட்டது. இந்த தாக்குதல் எங்கள் மகள் பிரசாந்தி படிக்கும் பள்ளி இருக்கும் திசையில் நடந்துள்ளது என்பதை எனது மனைவி உணர்ந்து கொண்டாள். அன்று காலை எனது மகள், பள்ளியில் இருந்த கடையிலிருந்து பென்ஸிலை வாங்கிய அடுத்த நிமிடமே தூக்கிவீசப்பட்டாள். தன்னைச் சுற்றியுள்ள பகுதிகளில் குழந்தைகள் இரத்தம் வழிய அலறிக்கொண்டே ஓடுவதை அவளால் பார்க்க முடிந்தது. சில குழந்தைகள் பெற்றோர்களின் வருகைக்காக ஆசிரியர்களுடன் பதுங்கியிருந்தனர். உடைந்த கண்ணாடிகளுக்கு இடையே கிடந்த அவளை நாங்கள் மீட்டு வீட்டுக்கு அழைத்துவந்தோம். இலங்கையில் போர் 25 ஆண்டுகள் நீடித்தது. இந்த சண்டையில் சுமார் 1 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். எண்ணற்ற மக்கள் நிற்கதியானார்கள்.

நம்மில் பலர் அமைதி என்பது போர் இல்லாத நிலை என்று நினைக்கிறோம். ஆனாலும், அமைதியில்லாத நிலை என்றால் என்னவென்று பலருக்கும் தெரியாது என்றார் ரவீந்திரன். கடந்த ஆண்டு நடந்த சண்டைகளில் சிரியாவில் 76,000 பேரும், ஆப்கானிஸ்தானில் 14,000 பேரும், ஆப்பிரிக்காவில் போக்கோ ஹோரம் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 15,000 பேரும் பலியாகியுள்ளனர். சமாதான சமிக்ஞையுடன் போர் முடிந்து விடுவதில்லை. இதற்கு நிதி பாதிப்பு, வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் குடும்பங்கள், அடிப்படை கட்டமைப்புகள் இல்லாத நிலை. நிதி ஆதாரங்களை சண்டைக்கு திருப்பி விடப்பட்டது என பல காரணங்கள் உள்ளன.

ரஷீதா பகத்

1955ம் ஆண்டில் ஜில் ஜாக்ஸன் எழுதிய ஒரு பாடலை அவர் குறிப்பிட்டார். “Let there be peace on earth” என்பதுதான் அந்த பாடல். அதன் இரண்டாவது வரிகள்தான் என்னிடம் தாக்கத்தை ஏற்படுத்தின. “Let there be peace on earth; let it begin with me” பூமியில் அமைதி நிலவட்டும், அது என்னிடமிருந்து தொடங்கட்டும் என்பதுதான் இதன் முக்கியத்துவம். அதாவது, நாம் ஏற்றுக்கொள்ளும் விதத்தின் உடன்பாடு ஏற்படவில்லை என்றாலும் கருத்துவேறுபாடுகளை கட்டுப்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும்.

RI இயக்குநர் கமல் சங்வி பேசுகையில், ரோட்டேரியன்கள் அறக்கட்டளைக்கு தாராளமாக நிதியுதவி வழங்க புதிய மாவட்ட ஆளுநர்கள் ஊக்குவிக்க வேண்டும் என்றார். பணத்தால் மகிழ்ச்சியை வாங்க முடியாது என்று சொல்வது தவறானது. உங்கள் பணம் ஏழைகளுக்கு பயன்படும்போது மகிழ்ச்சியைத் தரும். இந்த கருத்தரங்கு அறக்கட்டளையின் மகத்துவத்தையும், கொடுப்பதன் மகிழ்ச்சியையும் புரிந்துகொள்ள உதவும் என்றார்.

RI இயக்குநர் பரத் பாண்ட்யா, ஆண்டு நிதி உலகம் முழுவதும் பின்தங்கியிருப்பதையும் அதை வலுப்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். இதே நிலை தொடர்ந்தால் நமது சேவைத் திட்டங்கள் பாதிக்கப்படும் என எச்சரித்தார். இதற்கு பெரிய அளவிலான நன்கொடை தேவையில்லை. ஆனால், 25 டாலர் முதல் 1,000 டாலர் என்ற வழக்கமான அளவில் இருந்தாலே போதுமானது என்றார் அவர்.

TRF தொழில்நுட்பப் பிரிவின் தலைவர் PRID மனோஜ் தேசாய் பேசுகையில், மாவட்ட அளவிலான TRF கருத்தரங்குகளில் உரையாற்ற தொழில்நுட்ப பிரிவினரை அழைக்குமாறு DGEக்களிடம் வலியுறுத்தினார். அவர்களின் வழிகாட்டுதல்கள் உங்களுடைய சர்வதேச திட்டங்களுக்கு அறக்கட்டளை ஒப்புதலை எளிதில் பெற உதவும் என்றார்.

சில அறங்காவலர்கள் எடுக்கும் முடிவுகள் சில நாடுகள் மற்றும் சில மாவட்டங்களுக்கு ஏன் பொருந்தவில்லை என்று RIDE மகேஷ் கோட்பகி விளக்கினார். அறங்காவலர்கள் உலக அளவில் சிந்திக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்துக்கு தங்கள் திட்டங்களை மட்டுப் படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொண்டார். மேலும் DGEக்கள் தங்கள் DDF நிதியை எதற்காக ஒதுக்கப் பட்டதோ அதற்கு பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கருத்தரங்கை தொகுத்து வழங்கிய அறங்காவலர் குலாம் வாகன்வதி, தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக TRFக்கு மொத்தமாக வழங்குவதில் இந்தியா இரண்டாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளதற்குப் பாராட்டு தெரிவித்தார். டிசம்பர் 2020 வரை நான்கு மண்டலங்களைச் சேர்ந்த நன்கொடையாளர்கள் TRFக்கு 5.7 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்துள்ளனர். இது கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்தில் இருந்ததைவிட அதிகமாகும். 2019–20ம் ஆண்டில் நான்கு மண்டலங்களுக்கான மாவட்ட மற்றும் உலகளாவிய மானியங்களின் மொத்த மதிப்பு 41.7 மில்லியன் டாலராகும். ஒப்பீடு செய்துபார்த்தால், டிசம்பர் 2020 உடன் முடிவடைந்த 6 மாதங்களில் அதன் மதிப்பு 25 மில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது என்றார்.

RI *இயக்குனர் கமல் சங்வி*

AKS உறுப்பினர்கள் ரவிசங்கர் டகோஜு, Dr கிருஷ்னேந்து குப்தா மற்றும் விக்ரம் ரெட்டி ஆகியோர் அறக்கட்டளைக்கு தாராளமாக நிதிப்பங்களிப்பு செய்ய பிரதிநிதிகளை ஊக்கப்படுத்தினர். PDG சாம் படிபந்த்லா, Bequest Society உறுப்பினராவது எப்படி என்று விளக்கினார்.

RIDE வெங்கடேஷ், கொடுப்பதில் மகிழ்ச்சி என்னும் தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தினார். இதில் AKS உறுப்பினர்களான அமிதா ஆனந்த் மொஹிந்திரு (தில்லி சிட்டி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர்), ரோட்டரி மாவட்டம் 3131ன் DG ராஷ்மி குல்கர்னி மற்றும் மும்பை பையர் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் சையீப் குரேஷி ஆகியோர் பங்கேற்றனர்.

ஈவான்ஸ்டனில், நான், ரவி சங்கர் மற்றும் பவுலா டகோஜுவுடன் நடத்திய பேச்சுக்கள்தான் என்னை AKS உறுப்பினராக்கத் தூண்டியது. எனக்கு அப்போது “விலையுயர்ந்த காரை விற்ற துறவி” என்ற புத்தகம் தான் எனது நினைவுக்கு வந்தது என்றார் அமிதா. நீங்கள் ஒரு நாளைக்கு அறங்காவலர் தலைவர் பதவியில் இருந்தால் என்ன மாற்றத்தை கொண்டு வருவீர்கள்? என்று வெங்கடேஷ் கேட்டார். நான் மானியங்களுக்கு ஒப்புதல் அளிக்க SOP நடைமுறையைக் கொண்டுவருவேன் என்று அமிதா பதிலளித்தார். நான் தலைவராக இருந்தபோது ஒரு திட்டத்துக்கு ஒப்புதல் பெற மூன்று மாதங்களானது. ஆனால், வேறு ஒரு திட்டத்துக்கு ஒப்புதல் பெற 6 மாதங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. CSR 2நிதி இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் நாங்கள் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். காலதாமதங்களுக்கு எங்களிடம் விளக்கங்கள் இல்லை. அந்த சமயத்தில் நமது நற்பெயர் கேள்விக்குறியாகிவிடும் என்றார்.

ராஷ்மி பேசுகையில் எண்டோவ் மெண்ட் நிதி மூலம் நாம் TRFக்கு அளிக்கும் பணம் மீண்டும் DDF நிதியாக நம்மிடமே வந்து சேர்ந்து விடுகிறது. அதன் மூலம் எங்கள் சங்கம் சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்த முடிகிறது. அது இப்போது மட்டுமல்ல, எப்போதும் என்றார்.

RI *இயக்குனர் பரத் பாண்டியா*

பலர் இது ஒரு நிதிதிரட்டும் அமைப்பு என்றே நினைக்கிறார்கள். உண்மையில் நமது அறக்கட்டளை அதற்கு மேலாகச் செயல்பட்டு வருகிறது. அதன் சக்தியை, மக்களுக்கு தெளிவுபடுத்தினால் மக்கள் ஊக்கத் துடன் தாராளமாக நிதிப்பங்களிப்புச் செய்வார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

ரோட்டரி உறுப்பினர் அல்லாத நண்பர்களுக்கு ரோட்டரியைப் பற்றி எப்படி விவரிப்பேன் என்று குரேஷி கூறினார். பொதுவாக நண்பர்கள் ஒன்று சேரும்போது அரசியல், பொருளாதாரம் அல்லது பட்ஜெட் பற்றி பேசுவார்கள். ஆனால், ரோட்டேரியன்கள் சந்திக்கும்போது சேவைத் திட்டங்கள் பற்றியும், சமூகத்தில் அதன் தாக்கம் பற்றியும் பேசுவோம். சமூகத்தில் நன்மை செய்வதற்கான பொதுவான பிணைப்பையும் ஆர்வத்தையும் நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். ரோட்டேரியன்களுடனான நட்புறவு ஆழமானது. நாங்கள் எல்லோரும் சிறகுகளை விரித்து பறக்கும் பறவைகள்போல ஒன்றாகவே பயணிக்கிறோம் என்றார்.■

நம் பூமியைக் காப்பதற்கு ரோட்டரி செயல்படவேண்டிய நேரம் இது: ஹோல்கர் நாக்

ரோட்டரி செய்திக்குழு

பூமியைக் காப்பதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசிய RI தலைவர் ஹோல்கர் நாக், ரோட்டரி சங்கங்கள் இதற்காக ‘இப்போதே செயல்படவேண்டும்’ என்று அழைத்தார். ஆஸ்திரேலியா, கலிஃபோர்னியாவில் காட்டுத் தீ, மத்திய அமெரிக்க, பசிஃபிக் நாடுகளில் புயல்கள் என நம்மைச் சுற்றி நிகழ்ந்துவரும் தொடர்ச்சியான பேரிடர்களைப்பற்றி அவர் மெய்நிகர் பங்கேற்பாளர்களுக்கு நினைவுபடுத்தினார். இப்போது, சுற்றுச்சூழல் என்பது ரோட்டரியின் கவனப் பகுதிகளில் ஒன்று. நம் நிகழ்ச்சிகள், சேவைத் திட்டங்களில் நாம் சுற்றுச்சூழல் பற்றி வலியுறுத்த வேண்டும் என்றார் நாக். சூழியல் பிரச்சனைகளில் ரோட்டரி தெளிவான நிலைகளை எடுக்கவேண்டும் என்றும், தொலைநோக்கு, தீர்வு களுடன் தலைமைப்பண்பை நாம் காண்பிக்கவேண்டும் என்றும் கூறினார்.

ஒரு டிஜிட்டல், இணைய உலகத்துக்கான மாற்றம் நன்கு நடந்து கொண்டிருந்தது, கோவிட் அதை ஒரு கட்டாயத் தேவையாக்கிவிட்டது.

புதிய பன்னாட்டுக் கிராமம்

ஆனால், உலகெங்குமுள்ள ரோட்டரி சங்கங்கள் இந்தச் சவால்களை நன்கு எதிர்கொண்டன, சங்கங்கள் ஒரு கடினமான காலகட்டத்தைச் சமாளித்துள்ளன. இந்த நெருக்கடியைச் சமாளித்து நாம் இன்னும் வலுவாக ஆகிறோம்.

பலர் தங்கள் வேலைகளை, தொழில்களை இழந்துள்ளார்கள். எல்லா இடங்களிலும் மக்களுடைய வாழ்க்கை மேலும் கடினமாகியுள்ளது, முன்பு எப்போதையும் விடக் கூடுதலான மக்களுக்கு உதவி தேவைப்படுகிறது. நாம் பல விஷயங் களை விட்டுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது, வெறும் கை குலுக்கல்களை மட்டுமின்றி, நம்முடைய ஒட்டு மொத்த வாழ்க்கை முறையையே விட்டுக் கொடுத்திருக்கிறோம்.



ஆனால், இது வெறுமனே இழப்பின் ஆண்டாக இருக்கவில்லை, புதிய வாய்ப்பு களின் ஆண்டா கவும் இருந் துள்ளது. சமூக ஊடக, இணைய இணைப்புகள் கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இப்போது, நாம் அனை வரும் மெய்நிகர் சந்திப்புகளுக்குப் பழகிவிட்டோம் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

புதிய சமூக விதிமுறைகளுடன் ஒரு புதிய பன்னாட்டுக் கிராமம் மலர்ந்துள்ளது. பொதுவாகப் பேச்சின் போது பிறருடைய விழிகளைப் பார்த்துப் பேசாதவர்கள் கூட, ஜூமில் அவ்வாறு செய்யப் பழகி விட்டார்கள் என்று அவர் தெரிவித்தார். முற்றிலும் மாறுபட்ட ஒரு நெருக்கத்தை நாம் இப்போது அறிகிறோம்.

2021ல் புதிய தடுப்பு மருந்துகளும் சிகிச்சைகளும் கிடைக்கும் என்பதால், உலகம் இயல்புக்கு நெருக்கமான ஒரு நிலைக்குத் திரும்பத் தொடங்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஆனால், அது ஒரு மாறுபட்ட இயல்பாக இருக்கும். இந்த (டிஜிட்டல்) உலகத்தை ஏற்றுக்கொள்வதுதான் நமக்கு ஒரே வழி. இனி, எதிர்பாராத நிகழ்ச்சிகளைச் சிந்தித்து நாம் கவனமாகத் தயாராகவேண்டும் என்றார் அவர்.

ரோட்டரியில், சேவை, தோழமை, பன்முகத்தன்மை, நேர்மை மற்றும் தலைமைப்பண்பு ஆகிய ஐந்து சேவை மைய மதிப்பீடுகள் நம் அமைப்பின் அடித்தளத்தை அமைக்கின்றன. இந்த மதிப்பீடுகள் அனைத்தையும் எல்லா நேரங்களிலும் நாம் பின்பற்றா விட்டால், எல்லாம் வெறும் பேச்சுதான் என்றார் நாக். பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்குதல் செயல் குழுவை RI அமைத்துள்ளது, நாம் அமைத்துள்ள பன்முகத்தன்மை இலக்குகளை ரோட்டரி எட்டுவதை உறுதிப்படுத்துவதற்கான வலுவான படிநிலைகளை எடுத்துள்ளது.

ரோட்டரி என்பது, நீங்கள் சேர்கிற ஒரு சங்கம் மட்டுமில்லை. சேவைக் கான எண்ணற்ற வாய்ப்பு களுக்கான ஓர் அழைப்பு அது. குறிப்பாக, இளம்பிள்ளைவாதத்தை முடிக்கும் நம்முடைய வரலாற்றுத் திட்டத்தை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். அதேபோல், உலகெங்குமுள்ள நண்பர்களுடன் இன்னும் வளமான, வாழ்க்கையை வாழ்வதற்கான ஓர் அழைப்பாகவும் அது அமைகிறது என்று அவர் நிறைவாகத் தெரிவித்தார். ■

ரோட்டரியில் தலைமை என்பது உங்களுக்கு சமமானவர்களை வழிநடத்துவது: கல்யாண் பானர்ஜி

ரோட்டரி செய்திக்குழு

நீங்கள் பதவியிலிருப்பது ஓராண்டு காலம்தான். அதற்குள் நீங்கள் முத்திரை பதிக்கவேண்டும்.ஆனால், நீங்கள் முதலிலிருந்து தொடங்க முயற்சித்தால் அந்த ஓராண்டில் பெரிதாக எந்த சாதனையையும் செய்யமுடியாமல் தோல்விதான் அடைவீர்கள். நீங்கள் உங்களையும் தாண்டி ரோட்டரியின் வளர்ச்சி, சமூக சேவைகள் மற்றும் ரோட்டரி இயக்கத்தின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் இந்த ஓராண்டில் நமது குறிக்கோளை எட்டமுடியும் என்றார் PRIP கல்யாண் பானர்ஜி. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மெய்நிகர் முறையில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் DGEக்கள் மற்றும் DGNகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பேசியபோது அவர் இதைக் குறிப்பிட்டார்.

உலகெங்கிலும் உள்ள மாவட்டத் தலைவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்த அவர், நாம் அனைவரும் இன்று தனித்தனியாக கணினி, ஐபேடு, செல்லிடைப்பேசிகள் மூலம் ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம். இந்தச் சூழல் வழக்கத்துக்கு மாறானது மட்டுமல்ல, யாரும் எதிர்பாராதது. கொடூரமான தொற்றின் முடிவுக்குப்பின் நாம் மீண்டும் துணிச்சலுடன் பாதுகாப்பான, புதிய உலகில் ஒன்றாக சந்தித்து மகிழ்வோம் என்று நம்புவோம்.

ரோட்டரியின் முக்கிய கொள்கைகளை அவர் மீண்டும் நினைவுபடுத்தினார். நைஜீரியாவில் இந்திய மருத்துவக் குழுவினர் மேற்கொண்ட சேவைகள், கரீபியன் நாடுகளில் புயலால் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டபோது அமெரிக்க ரோட்டேரியன்கள் அவர்களுக்கு நிவாரண உதவி அளித்து, தங்கள் வீடுகளை மீட்டெடுக்கவும், புனரமைக்கவும் உதவியதை சுட்டிக் காட்டிய கல்யாண் பானர்ஜி, நட்புறவு, பன்முகத்தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக நமது தலைமைப் பண்பு ஆகியவை நாம் சேவையில் ஈடுபட ஊக்கமளித்தது.

ரோட்டரியன்கள் எப்போதுமே தலைவர்களாக இருந்து செயல்பட்டதை குறிப்பிட்ட அவர், முன்னாள் ரோட்டரித் தலைவர்களின் தனித்துவமான செயல்களை விளக்கினார். PRIP ராஜேந்திர சாபூ, உலகில் அமைதிக்காக பணியாற்ற அமைதி தூதர்களை உருவாக்கியதை நினைவுகூர்ந்தார். சர் கிளெம் ரெனூஃப் ரோட்டரி முதன் முதலாக சர்வதேச அளவிலான திட்டங்களை வகுத்து செயல்படுத்த ஊக்கப்படுத்தினார். லூயிஸ் கியே ரோட்டரி அறக்கட்டளைத் திட்டத்தின் அதிக கவனம் செலுத்தியதுடன் அதில் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தினார். கிளிப் டோச்டர்மேன் மற்றும் கார்லோஸ் கான்செகோ இருவரும் உலகில் போலியோவை ஒழிக்கும் பணியில் ரோட்டரியை ஈடுபடுத்தினர் என்றார்.

ரோட்டரியில் தலைமையின் ஒரு பகுதி ஒரு முன்மாதிரியாக இருப்பது. ரோட்டரியில் தலைமை என்பதாவது நீங்கள் இங்கே உங்களுக்கு சமமானவர்களை வழிநடத்துகிறீர்கள். நீங்கள் உத்தர விடுவதற்காக தலைமைப் பதவியில் இல்லை. நம்முடன் இருப்பவர்களுக்கு தோள்கொடுக்க வேண்டும் என்றார் பானர்ஜி.

சிறந்த தலைவர்கள் தங்களை தலைவரென்று கூறிக்கொள்ள மாட்டார்கள். சரியாக செய்லபடாதவர்களை முறையாக செயல் படவைப்பதும், சிறப்பாக செயல்படுபவர்களை மேலும் சிறப்பாகச் செயல்பட வைப்பதும்தான் நல்ல தலைமைக்கு அடையாளம்.

மாவட்டத் தலைவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும். நான் மாவட்ட ஆளுநராக இருந்தால் அவரைப் போன்ற ஒருவராக செயல்பட விரும்புகிறேன் என்று ரோட்டேரியன்கள் சொல்லும் தலைவராக நாம் இருக்க வேண்டும். அதுதான் தலைமைத்துவத்தின் தங்க மகுடம்.

நீங்கள் செய்யக் கூடிய மிகச்சிறந்த விஷயம் என்னவென்றால், உங்கள் மாவட்டத்தை நீங்கள் நினைப்பதை விட வலிமையானதாக்குவதுதான். இதனால் யாருக்கு நல்ல பெயர் கிடைக்கிறது என்பது முக்கியமல்ல என்றார் பானர்ஜி.

மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அடிக்கடி குறிப்பிடும் ஒரு வார்த்தையை அவர் மேற்கோள் காட்டினார். உலகில் இரண்டு வகையான மனிதர்கள் இருக்கிறார்கள். ஒருவர் தனக்கு கொடுத்த வேலையை கடமையாக ஏற்றுச் செய்பவர். மற்றொருவர் பெயரை மட்டும் தட்டிச் செல்பவர். இதில் நாம் முதலாமவராகவே இருப்போம். அதற்கு போட்டி இருக்காது. ■

உறுப்பினர்களைத் தக்கவைப்பது ஆளுநர்கள் கையில் உள்ளது: ஜான் ஹ்யூகோ

ரோட்டரி செய்திக்குழு

மருத்துவம், பசிப்பிணி போக்குதல், மனிதநேயம் (Health, Hunger and Humanity) ஆகியவற்றை உள்ளடக்கிய பெரிய அளவிலான 3H திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல், போலியோ பிளஸ் திட்டம் ஆகியவை தான் ரோட்டரியின் வரலாற்றின் திருப்புமுனையாகும் என்று RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ, மெய்நிகர் முறையில் நடைபெற்ற சர்வதேச மாநாடு கூட்டத்தில் பேசினார்.

ரோட்டரி மாறிவரும் உலகிற்கு ஏற்ப புதிய கொள்கைகளுடனும், புதிய கண்ணோட்டத்துடனும் செயல்பட வேண்டியத் தேவையுள்ளது. RI வாரியம், அறக்கட்டளை நிர்வாகிகள், சட்டமன்றக்குழுவும் சேர்ந்து 3H திட்டத்தை கொண்டு வந்தனர். ரோட்டரியில் இருந்த கார்ப்பொரேட் திட்டங்களுக்கு எதிரான 55 ஆண்டு காலத்தடை முறியடிக்கப் பட்டது. ரோட்டரி போலியோ ஒழிப்புத் திட்டத்தை முன்னெடுத்து செயல்படுத்தியதால் தான் இன்று 19 மில்லியன் மக்கள் உலகில் நடந்து கொண்டிருக்கிறார்கள். இல்லையெனில் அவர்கள் முடங்கிப் போயிருப்பார்கள். உலக அரங்கில் ரோட்டரியின் அந்தஸ்தானது நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. 20ம் நூற்றாண்டில் 3H திட்டமும், போலியோ பிளஸ் திட்டமும் ரோட்டரிக்கு திருப்புமுனையாக இருந்தது என்றால், இந்த வருடம் கொரோனா வைரஸ் தொற்று ரோட்டரிக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. புதிய மற்றும் தைரியமான யோசனைகள் எதிர்ப்பை எதிர்கொள்ளக்கூடும் என்றாலும் நமது முயற்சிக்கு வெற்றிகிடைத்தால் அது ரோட்டரியின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும். என்று ஹ்யூகோ விளக்கினார்.

சேவை வாய்ப்புகள்

3H மற்றும் போலியோ பிளஸ் திட்டங்களை எடுத்துக் கொண்டால் அவற்றுக்கு ஒரே காரணத்திற்காக பெரும்பாலான ரோட்டரி உறுப்பினர் களால் ஆதரவளிக்கப்பட்டது. அவை சேவை திட்டங்கள் மூலம் உறுப்பினர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கியது. முன்பைவிட இப்போது சேவை செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. உள்ளூர் பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டுவது, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஆர்வம் காட்டுவது, புதிய மானிய திட்டங் களைச் செயல்படுத்துவது என ஒவ்வொரு ரோட்டேரியனும் ஏதாவது ஒரு சேவையில் பங்கேற்க வாய்ப்பு உள்ளது.

புதிய உறுப்பினர்களுக்கு அவர்களின் பங்கு என்ன என்பதை தொடக்கத்திலேயே தெளிவு படுத்த வேண்டும் என்ற அவர், அதற்கு ஓர் உதாரணத்தையும் மேற்கோள் காட்டினார். அமெரிக்காவின் நியூஜெர்ஸியில் உள்ள RC சென்ட்ரல் ஓஷன், உங்கள் புதிய திட்டத்தை கொண்டு வாருங்கள் என்ற புதுமையான யோசனையை செயல்படுத்தினார்கள். அதாவது புதிய திட்டத்தை கொண்டுவாருங்கள். புதிய உறுப்பினர்களிடம் ஒப்படையுங்கள் என்பதுதான் அதன் கருத்து. இதன் மூலம ரோட்டரி ஆண்டின் முதல் பாதியில் 9 சேவைத் திட்டங்களை சங்கத்தால் வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடிந்தது. இதன் மூலம் புதிய உறுப்பினர்களை சேவையில் ஈடுபடுத்தி அவர்களை தக்கவைத்துக் கொள்ள முடிந்தது.

இப்போது சங்க அளவில் சேவையில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களுக்கு பெல்லோஷிப் மற்றும் ரோட்டரி செயல்பாட்டுக் குழுவுடன் (RAG) உலகம் முழுவதும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் அவர்கள் தங்கள் விருப்பத்தை பகிர்ந்து கொள்ள முடியும். மேலும் தொடர்ந்து உறுப்பினர்களை ஈடுபாட்டில் வைத்திருக்க, ரோட்டரி கற்றல் மையங்கள் மூலம் 12க்கும் மேலான மொழிகளில் 600க்கும் மேற்பட்ட படிப்புகளை முழுமையாக அவர்கள் பயன்படுத்திக் கொள்ள நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் தலைமைப் பண்பு படிப்பு களையும் தேர்ந்தெடுக்க முடியும் என்றார் ஹ்யூகோ.

நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் சில மாற்றங்களை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அந்த வகையில் மாவட்ட ஆளுநர்களின் பங்கு முக்கியமானது.

இப்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டு நாம் புதிய உலகத்துக்குள் செல்லவேண்டுமானால் அதற்கான மாற்றத்தை கொண்டு வருவது உங்கள் கையில் உள்ளது. நீங்கள் தலைமை தாங்கி வழிநடத்துவதற் கான நேரம் வந்துவிட்டது. நமது உறுப்பினர்களுக்கு சரியான முறையில் வழிகாட்டி அவர்களை சேவையில் ஈடுபடுத்தி தக்கவைத்துக் கொண்டால் அது நமக்கு மிகப்பெரிய சொத்தாகும். இதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கலாம். மாவட்ட ஆளுநர்கள், நிர்வாகிகளை விட அதிக முக்கியத்துவம் பெற்றவர்கள். மாற்றத்தையும் புதுமை களையும் ஏற்படுத்துவதற்கான காரண கர்த்தாக்கள் நீங்கள்தான். ரோட்டரியில் பல புதுமைகளைப் புகுத்திய மறைந்த PRIP லூயிஸ் விசென்ட் கியேயின் வார்த்தைகளில் சொல்லுவதானால், நீங்கள்தான் ரோட்டரியின் எதிர்கால சிற்பிகள் என்றார்.■

உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியில் புதிய சாதனை படைக்கும் இந்திய ரோட்டரி

V முத்துகுமரன்

RIPE *சேகர் மேத்தா*

4,000 புதிய உறுப்பினர்கள் என்ற இலக்குடன் ஜனவரி 23ல் தொடங்கி ஒரு மாதத்துக்கு நடைபெற்ற பால் ஹாரிஸ் சவாலில், 4, 5, 6 மற்றும் 7வது பகுதிகளைச் சேர்ந்த 40 ரோட்டரி மாவட்டங்கள் 6,087 புதிய ரோட்டரியன்களைச் சேர்த்தார்கள், 79 புதிய சங்கங்களை அமைத்தார்கள்.

நம்முடைய பகுதிகள் அனைத்திலும் உறுப்பினர் எண்ணிக்கையில் இப்படி ஒரு மிகச் சிறந்த வளர்ச்சியைக் கொண்டு வந்துள்ள உண்மையான நாயகர்கள், நம் மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட உறுப்பினர் பிரிவுத் தலைவர்கள், ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்கள், ARCகள் மற்றும் சங்கத் தலைவர்கள் தான். ரோட்டரியின் 116வது பிறந்த நாளுக்கு இதை விடச் சிறந்த பரிசு ஏதுமில்லை என்றார் RIPE சேகர் மேத்தா. களத்தில் முன்னால் நின்று வழிகாட்டும் நம் ஆளுநர்கள் ஜூலை 2021ல் தொடங்கி இன்னும் பல மைல்கற்களை அமைப்பார்கள், அதற்கான ஒரு முன்னோட்டம் தான் இது.

நான்கு பகுதிகளிலும் உள்ள மாவட்டங்கள் பெற்றுள்ள சாதனை உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியைப் பாராட்டுவதற்காக, இந்தியப் பகுதிகள் அனைத்து ரோட்டரி தலைவர்களிடையே மேத்தா பேசினார், முந்தைய ஒரு மாதத்தில் நான்கு RCகள், ARCகள், DGகள் தங்களுடைய செயல்திறனால் நம்மை வியக்கச் செய்துள்ளார்கள். இந்தச் சாதனை, ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் என்ற முழக்கம் கண்டிப்பாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை வழங்குகிறது. ஏனெனில், புதிய உறுப்பினர்களில் 70% உள் வளர்ச்சியால் கிடைத்துள்ளது, மீதி 30% ரோட்டரியை வளர்ப்போம் முயற்சிகளால் (புதிய சங்கங்களை அமைப்பதால்) கிடைத்துள்ளது என்றார் அவர்.

40 மாவட்டங்களில் 28 மாவட்டங்கள் குறைந்தது 100 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் இலக்கைக் கடந்தன. அதே நேரம், மெய்நிகர் மற்றும் நேரடிக் கூட்டங்களைக் கொண்ட கலவைச் சங்கங்களைத் தொடங்குவதன் மூலம், உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு DGகள் முயற்சி யெடுக்கவேண்டும் என்றார் அவர். ரோட்டரி 1.3 மில்லியன் உறுப்பினர் எண்ணிக்கையை எட்ட வேண்டுமென்றால், உள்வரும் ஆளுநர்கள் இந்த உறுப்பினர் எண்ணிக்கை உயர்வைப் பயன்படுத்தி முன்னேறவேண்டும்.

ஊக்கம் அளிக்கும் தலைமை

ரோட்டரி உலகத்தின் இந்தப் பகுதி

Paul Harris Challenge winners

Winner
RID 3054 DG Rajesh Agarwal, DMC Ashish Desai (zone-4) - 479 new members
Runners-up
RID 3212 DG PNB Murugadoss, DMC K Selvamani (zone-5) - 437 new members
RID 2981 DG Balaji Babu Rajagopal, DMC Dr C V Padmanabhan (zone-5)
RID 3060 DG Prashant Jani, DMC Amardeep S Bunnet (zone-4)
Highlights
* 28 out of 40 districts added over 100 new members, thus passing the eligibility target
* 1,940 new members were added from 49 new clubs, while 4,147 came from existing clubs
* 6,087 new members were inducted and 79 new clubs formed in one month (Jan 23-Feb 23)
* 70 per cent of new members were from internal growth, 30 per cent from new clubs
Zone highlights
* Zone-4 with 11 districts added 1,880 new members and 28 new clubs
* Zone-5 with 10 districts added 2,028 new members and 23 new clubs
* Zone-6 with 10 districts added 1,228 new members and 18 new clubs
* Zone-7 with 9 districts added 951 new members and 10 new clubs

கண்டுள்ள தலைமை மிகச் சிறந்தது' என்று சிறப்பாகக் குறிப்பிட்ட மேத்தா, RIDகள் பரத் பான்ட்யா, கமல் சங்வி இருவரும் வேறுபட்ட ஆளுமைகள், தங்கள் பணிப் பாணியில் ஒருவரை மற்றவர் நிறைவு செய்கிறவர்கள் என்றார். இதே போல் செயல்படும் RIDE-கள் A S வெங்கடேஷ், மகேஷ் கொட்பாகி ஆகியோருடன் இணைந்து பணியாற்றத் தான் ஆர்வமாக இருப்பதாகவும் அவர் கூறினார். பான்ட்யா, சாங்க்வி ஆகியோர் RI வாரிய உறுப்பினர்களாக நம் அமைப்புக்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள் என்றார்.

அடுத்த ரோட்டரி ஆண்டி லிருந்து, உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சிக்கான RI தலைவராக சங்வி செயல்படுவார், பான்ட்யா, RI வாரியத்தின் வியூகத் திட்ட மிடல் குழுவின் உறுப்பினராகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்று மேத்தா தெரிவித்தார். எதிர்வரும் ஆண்டுகளுக்கான தெளிவான நோக்கத்துடன் செயல்படும் ஒரு ரோட்டராக்ட் குழுவுக்கு PDG ரவி வட்லமணி தலைமை தாங்குவார்.

இனிவரும் ஆண்டுகளில் மெய்நிகர் உலகத்தின் பங்களிப்பை மேத்தா எப்படிக் காண்கிறார், குறிப்பாக, ரோட்டரியன்களையும் ரோட்டராக்டர்களையும் அது எப்படி ஒருங்கிணைக்கும் என்று RC லாஸ் வேகாஸ், RID 5300, USஐச் சேர்ந்த PDG ஷப் எலவார் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த மேத்தா, கலவை மற்றும் மெய்நிகர் சங்கங்கள் மிகுதியாக வரும் என்று நான் நம்புகிறேன். நேரடி, மெய்நிகர் கூட்டங்களை நாம் கலந்து பயன் படுத்தவேண்டும். மெய்நிகர் நிகழ்ச்சிகளின் வழியாகத் தொடர்ந்து உரையாடினால், உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ள அது உதவும் என்றார்.

நம் பகுதிகளில் ஒரு புதிய அத்தியாயம் எழுதப்படுகிறது, அது நம் தோழமை, சேவையைத் தூண்டும் என்றார் பரத் பான்ட்யா. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த சங்வி, ரோட்டரியின் எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான புதிய யோசனைகள், சேவைத் திறனுடன் புதிய சங்கங்கள் வரவேண்டிய தேவையைச் சுட்டிக் காட்டினார். RIDEகள் கொட்பாகி, வெங்கடேஷ் DGக்களுடைய சாதனையைப் பாராட்டினார்கள்.RCகள் குர்ஜீத் செகோன் (பகுதி 4), R தீனசந்திரன் (பகுதி 5), பிரதீப் முகர்ஜி (பகுதி 6) மற்றும் வினய்குமார் ராய்கர் (பகுதி 7) ஆகியோர் தங்கள் பகுதிகளில் வெற்றியாளர்களாக அறிவிக்கப் பட்டார்கள். இந்நிகழ்ச்சியில் PRIPக்கள் கல்யாண் பானர்ஜி, ராஜேந்திர சாபூ மற்றும் அறங்காவலர் குலாம் வாகன்வதி உள்ளிட்ட சுமார் 650 பேர் பங்கேற்றார்கள். ■

நம் முக்கியத்துவம்: நாம் நம்முடைய மாறும் திறனைப் பெருக்குகிறோம்

Rotary

தரவுகளால் இயங்கும் உலகில் சிறந்து விளங்குதல்

ரோட்டரி ஒரு தொடர்ந்த மாற்ற மரபைக் கொண்டிருக்கவேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். ஆனால், நாம் சேர்ந்து என்ன சாதிக்கிறோம் என்பதற்கு ஓர் உறுதியான சான்றை வழங்காவிட்டால், புதுமைச் சிந்தனை கொண்ட, ஊக்கமுள்ள மாற்று சிந்தனையுள்ளவர்கள் நம்மோடு இணையச் செய்வது கடினம், பயனுள்ள வழிகளில் நம் திட்டங்களை மேம்படுத்துவது இன்னும் கடினம்.

தரவுகளைத் திரட்டி ஆராயும் நம் திறனை மேம்படுத்துவதன் மூலம் நாம் நம்முடைய முழுச் சாத்தியத்தை எட்டலாம். இதன்மூலம், தாக்கமுள்ள திட்டங்களை நாம் கண்டறியலாம், எவற்றைச் சரிசெய்யவேண்டும் என்று அறியலாம். இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் நம் முயற்சிகளில் நாம் கற்றுக்கொண்டவற்றைப் பயன்படுத்தி, நீடித்த மாற்றத்தை உருவாக்குகிற சாத்தியத்தை மிகுதியாகக் கொண்ட திட்டங்களை நிறைவேற்றுகிற, மேம்படுத்துகிற வழிகளை நாம் கண்டறியலாம்.

நாம் என்ன செய்வோம்

இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான போரில் நாம் கற்றவற்றை நம் கவனப் பகுதிகள் அனைத்திலும் பயன்படுத்துவோம்

மிகுந்த தாக்கமுள்ள திட்டங்களுக்கு முயற்சிகள், வளங்களைச் செலுத்துவோம்

ரோட்டரிக்குச் சரியான அளவிடல் முறை, உள்கட்டமைப்பை உருவாக்குவோம்

உங்கள் சங்கம் என்ன செய்யலாம்.

கவனம் செலுத்தலாம்
உங்கள் சமூகத்துக்கு மிக முக்கியமான பிரச்சனைகள், திட்டங்களில்

திரட்டலாம்
உங்கள் திட்டங்களுக்கு முன்பு, பின்பு தரவுகளை

பகிரலாம்
நீங்கள் உருவாக்கும் அளவிடக்கூடிய மாற்றத்தின் கதைகளை

உறுதி கூறலாம்
இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னேற்றுவதற்கு

மேலும் அறிந்துகொள்ள விருப்பமா?

முழுச் செயல் திட்டத்தை இங்கு படியுங்கள்: *rotary.org/actionplan*

© Rotary

அலங்கார மீன் பண்ணை வழியாகப் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்

கிரண் ஜெஹரா

நாங்கள் மீன்மட்டும் வளர்க்கவில்லை, சுய மதிப்பையும் வளர்க்கிறோம் என்கிறார் மஞ்சுலதா ஹெம்ப்ரும். மேற்கு வங்காளத்தின் சுந்தரவனப் பகுதியில் உள்ள ஓர் ஆற்றோரக் கிராமமான சுனகொலியைச் சேர்ந்தவர் இவர்.

2014ல், இந்தக் கிராமத்தை RC புபனேஸ்வர் ஏகம்ரா க்ஷேத்ரா, RID 3262 தத்தெடுத்தது. அதன்பிறகு, எங்கள் கிராமத்தில் நல்ல நாட்கள்மட்டும்தான் வந்துள்ளன. கிராமத்திலுள்ள பெண்களில் அநேகமாக ஒவ்வொருவரும் படிக்க, எழுத, கையொப்பமிடத் தெரிந்து கொண்டுள்ளார்கள். காரணம், இந்தச் சங்கம் அமைத்துள்ள வயதுவந்தோர் எழுத்தறிவு மையம்தான். எங்களில் சிலர் இந்தச் சங்கம் நடத்தும் பல திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் சேர்ந்துள்ளோம், இதன்மூலம் எங்களுக்கு வருவாய் வருகிறது, குடும்ப வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுக்க இது உதவுகிறது என்று இவர் தொடர்ந்து கூறுகிறார்.

ஸ்வாபிமான் கேந்த்ரா என்ற இந்தச் சங்கத்தின் வயதுவந்தோர் எழுத்தறிவு மையத்தில் தொடங்கி, துணிப்பைகள், ஊதுபத்திகள் செய்தல், காளான் வளர்த்தல் ஆகியவற்றைக் கற்றுத்தரும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், அலங்கார மீன் வளர்த்தலை ஒரு வாழ்வாதாரத் தெரிவாக முன்னிறுத்துதல் என்று இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்களைப் பொருளாதார அடிப்படையில் சுதந்தரம் பெறச் செய்வதில் இந்தச் சங்கம் கவனம் செலுத்துகிறது. ஏனெனில், பெண்கள் ஒரு சிறு தொழிலையும் தங்கள் வீட்டையும் நிர்வகிக்கும் ஆற்றல் பெறும்போது, குடும்பத்தின் சம்பாதிக்கும் உறுப்பினர்களில் ஒருவர் என்ற முறையில், தங்களுடைய குடும்பத்துக்கு மட்டுமின்றி, தங்களுடைய சமூகத்துக்கும் பங்களிக்கக்கூடிய சாத்தியங்களை அவர்கள் மெதுவாக உணர்கிறார்கள் என்கிறார் சங்கத் தலைவர் டாக்டர் பானி சென் குப்தா.

சமீபத்தில், இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பதினைந்து பெண்கள், மத்திய உள்நாட்டு நன்னீர் ஆராய்ச்சி மையத்துடன் (CIFRI) இணைந்து இந்தச் சங்கம் நடத்தும் அலங்கார மீன் பண்ணை முயற்சியின்மூலம் பலன் பெறுவோராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். பலன் பெறுவோர் பிப்ரவரியில் CIFRI, பாரக்போரில் நடைபெற்ற ஒரு மூன்று நாள் பயிற்சித் திட்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பலன் பெறும் ஒருவருக்கு ரூ.30,000 மதிப்புள்ள பயணம், உணவு, தங்குதல், பயிற்சி மற்றும் கல்விப் பொருட்களுக்கான செலவுகள் அனைத்தையும் CIFRI ஏற்றுக்கொண்டது.

RC புபனேஷ்வர் ராயல் தலைவராகவும், CIFRI, பாரக்போர்

மீன் வளர்ப்புப்பற்றி பெண்களுக்கு கற்றுத்தரப்படுகிறது.

இயக்குநராகவும் உள்ள பசந்த குமார் தாஸ் அவர்களால்தான் இது சாத்திய மானது என்கிறார் பானி. முடக்கத்தின் போது, இந்தப் பெண்களுடைய துணிப்பை, ஊதுபத்தி விற்பனை நின்றுபோனது. அப்போது, அலங்கார மீன் வளர்ப்பைத் தாஸ் பரிந்துரைத்தார், முடக்கத்தின்போது இந்தப் பெண்கள் மீன்களை வளர்க்கலாம், முடக்கம் நீக்கப்பட்டபின் இதன்மூலம் ஒரு நிலையான வருவாயைப் பெறலா என்று தெரிவித்தார் என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.

பயிற்சிக்குப்பிறகு, ஒவ்வொரு பெண்ணுக்கும் மீன் தொட்டிகள், கருவிகள், மீன் உணவு ஆகியவை வழங்கப்பட்டன. அலங்கார மீன் வளர்ப்பு என்பது உலகெங்கும் ஒரு பொழுதுபோக்காகத் தொடங்கியது, பின் வணிகத் தொழில் செயல்பாடாக மாறியது என்று விளக்குகிறார் தாஸ். இந்திய அலங்கார மீன்களுக்கான மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தைகள், சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்கா, மலேசியா மற்றும் ஜெர்மனி. இந்தப் பிரிவு பணிவாய்ப்புகளை உருவாக்கும், வறுமையைக் குறைக்கும், பன்னாட்டு வணிகத்தை ஊக்குவித்துத் தேசிய வளர்ச்சிக்குப் பங்களிக்கும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்கிறார் இவர்.

இந்த முன்னெடுப்புக்கான பயிற்சியைக் கையாள்பவர், உள்ளூர்ப் பயிற்சியாளரும் அலங்கார மீன்பண்ணைத் தொழில் முனைவோருமான ராமேஸ்வர் தாஸ். ஏனெனில், அவர்களுடைய குடும்பங்கள் உணவுக்காக அவர்களைச் சார்ந் துள்ளன. எப்படியாவது தங்கள் குழந்தைகளின் வாழ்க்கைகளை மேம்படுத்தவேண்டும் என்று அவர்கள் உறுதியுடன் உள்ளார்கள். அதற்காக, மீன் சந்தையில் மீன் தூய்மைப்படுத்துதல், தோல் உரித்தல், இறாலின் தலையை அகற்றுதல் போன்ற தாழ்நிலை வேலைகளையும் செய்யத் தயாராக உள்ளார்கள்: அவர்கள் வீட்டுக்கு வெளியில் சென்று வேலை தேடிச் சிரமப்படாமல் சிறிது கூடுதலாகச் சம்பாதிப்பதற்கு அலங்கார மீன் பண்ணை அவர்களுக்கு உதவும்.

புபனேஷ்வர் அருகிலுள்ள டமனா பஸ்தி கிராமப் பெண்களுக்கு காளான் வளர்ப்பு கற்றுதரப்படுகிறது.

இந்தக் கிராமப்புறப் பெண் களுக்குக் கூடுதல் உதவியாக, புபனேஸ்வரில் உள்ள தன்னுடைய கடைக்கு வந்து தங்களுடைய அலங்கார மீன்களை விற்கும் பெண்களுக்கு ஆட்டோக் கட்டணத்தைச் செலுத்த, அல்லது, இதுபற்றிய அவர்களுடைய ஐயங்களைத் தெளிவுபடுத்தத் தாஸ் ஒப்புக்கொண்டுள்ளார். சுனகொலியைச் சேர்ந்த பெண்கள் இப்போது தங்க மீன், ஜீப்ரா டானியோ மற்றும் பிளாக் விடோ டெட்ரா போன்ற ஆறு வகை அலங்கார மீன்களை வளர்க்கிறார்கள்.

காளான் வளர்ப்பு

முடக்கத்தின் போது இந்தச் சங்கம் செயல்படுத்தியுள்ள இன்னொரு திட்டம், புபனேஷ்வருக்கு அருகிலுள்ள டமனா பஸ்தியிலுள்ள பெண்களுக்கான காளான் வளர்ப்புத் திட்டம். RC புபனேஷ்வர் கன்ஃப்ளுயன்ஸ் உறுப்பினரும் தோட்டக்கலை அலுவலருமான Rtn கோபிநாத் கர் வழியாக, மல்கன்கிரி தோட்டக்கலைத் துறையுடன் உண்டாக்கப்பட்ட ஒரு கூட்டு முயற்சியால், நலிந்த பின்னணியைச் சேர்ந்த 15 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பெண்கள் தங்கள் வீடுகளில் காளான் வளர்ப்பைத் தொடங்குவதற்கான மூலப்பொருட்களுக்குப் பானி நிதியளித்தார். இதற்கு மொத்தம் ரூ.4,500 செலவானது.

இந்த முயற்சியின் மூலம், அவர்கள் சரியான வகை உரத்தை உருவாக்க, காளான் வளர்க்க, அறுவடை செய்யக் கற்றுக் கொண்டுள்ளார்கள். இது ஓர் எளிய முறை, இதை வீட்டுக்குள்ளேயே செய்யலாம், இதற்குக் கூடுதலான இடம் தேவையில்லை. பலன் பெறுவோர் இரண்டாம் அறுவடை பரல் கிளிஞ்சல் காளான்களை நிறைவு செய்துள்ளார்கள், கோடைக் குப் பட்டன் காளான்களை வளர்க்கத் தொடங்கியுள்ளார்கள் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் பானி.

இந்த இரு திட்டங்களும் எப்படி முன்னேறுகின்றன என்பதைச் சரிபார்ப்பதற்காகச் சங்க உறுப்பி னர்கள் அவ்வப்போது இந்தக் கிராமங்களுக்கு வருகிறார்கள். சுனகொலியிலுள்ள கிராமப் பள்ளியை ஒரு மகிழ்ச்சிப் பள்ளியாக இச்சங்கம் மாற்றியுள்ளது. வெவ்வேறு பாலினத்தவருக்கான தனித்தனிக் கழிப்பறைத் தொகுதிகள், ஒரு நூலகம், நன்கு பராமரிக்கப்பட்ட வளாகம் என அந்தப் பள்ளி சிறப்பாக மாறியுள்ளது.■

பின்லாந்து நாட்டில் பெண்களின் வளர்ச்சி

ஜெய்ஸ்ரீ

34 வயதான பின்லாந்து பிரதமர் சன்னா மரின்தான் அநேகமாக உலகிலேயே இளம் வயது பிரதமராக இருப்பார். அவரது அமைச்சரவையில் பெரும்பான்மையாக பெண்கள் இடம்பெற்றுள்ளனர். பின்லாந்தில் பெண்கள், ஆண்களுக்கு இணையான சமத்துவத்தை பெற்றுள்ளனர். சமூகத்தில் அவர்களது நிலையும், அவர்களின் தொழிலும் மிகவும் மதிக்கப்படுகிறது.

அண்மையில் ரோட்டரி சர்வதேச மகளிர் குழு (RIW) பின்லாந்து சமூகம் மற்றும் ரோட்டரியில் பெண்கள் என்ற தலைப்பில் மெய்நிகர் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்த கூட்டத்தில் பின்லாந்து நாட்டைச் சேர்ந்தவரும் RI இயக்குநர்களில் ஒருவருமான டாக்டர் விர்பி ஹோங்கலா பேசுகையில் இந்த தகவல்களைத் தெரிவித்தார். ரோட்டரி சர்வதேச மகளிர் குழு கடந்த ஆண்டு ஏப்ரலில் உருவானது. 30 நாடுகளைச் சேர்ந்த மகளிர் ரோட்டேரியன்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். மாதவிடாய் சுகாதாரத்தை வலியுறுத்தும் செயல்பாட்டு குழுவை உருவாக்கியுள்ளது.

பின்லாந்து சமூகத்தில் பெண்களின் வளர்ச்சியை அவர் பட்டியலிட்டார். 1150 முதல் 1809ம் ஆண்டு பின்லாந்தில் போர் முடிவடையும் வரையில் 700 ஆண்டுகள் பின்லாந்து ஸ்வீடனின் ஒரு பகுதியாக இருந்தது. அதன் பின்னர் அது ரஷிய பேரரசின் கிராண்ட் டச்சு பின்லாந்து என்ற தன்னாட்சி பகுதியாக மாறியது. பின்னர் 1917ம் ஆண்டில் பின்லாந்து சுதந்திர நாடாக மாறியது.

பெண்களின் உரிமைகளில் உலகளாவிய பாலின இடைவெளி குறியீட்டில் பின்லாந்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. பெண்களின் சமத்துவத்துக் கான முதன்மை நாடுகளில் ஒன்றாகவும் பின்லாந்து இருக்கிறது. 1906ம் ஆண்டில் பெண் களுக்கு வாக்களிக்கும் உரிமையையும் தேர்தலில் போட்டியிடும் உரிமையையும் வழங்கிய முதல் நாடுகளில் பின்லாந்து ஒன்றாகும். உலகில் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்துக் குப் பிறகு இந்த உரிமையுள்ள மூன்றாவது நாடு பின்லாந்து. அடுத்த ஆண்டில் உலக வரலாற்றில் முதன் முறையாக 19 பெண்கள் எம்.பி.க்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டனர் என்று நினைவுகூர்ந்தார் விர்பி.

2003ம் ஆண்டில் முன்மொழியப் பட்ட பாலின சமத்துவத்திற்கான நாட்டின் அரசின் செயல் திட்டத்தில் 100க்கு மேற்பட்ட பிரச்னைகள் முன் வைக்கப்பட்டன. சம மதிப்புள்ள வேலைக்கு சம ஊதியம், அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கை அதிகரித்தல், ஆண் பார்வையில் பாலின சமத்துவத்தை மதிப்பிடுதல், குடும்ப வன்முறை மற்றும் நெருங்கிய கூட்டாளியால் ஏற்படும் வன்முறையைத் தடுப்பது மற்றும் கடத்தலில் இருந்து பெண்களை பாதுகாப்பது ஆகியவை அதில் குறிப்பிடத்தக்கவை.

Dr விர்பி, பின்லாந்தில் உள்ள ராஹே மருத்துவமனையில் மருத்துவ இயக்குநராகவும் அறுவைச் சிகிச்சை

RI இயக்குனர்
Dr விர்பி ஹோங்கலா

பிரிவின் தலைவராகவும் இருக்கிறார். 1986ம் ஆண்டில் தான் அவர் பொது அறுவைச்சிகிச்சை நிபுணராகத் தகுதிபெற்றார். அப்போதுதான் பல விஷயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. 1970களிலும் 1980களிலும் பைலட்டுகள், பேருந்து ஓட்டுநர்கள், கிறிஸ்துவ குருமார்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் போன்ற பணிகள் ஆண்களுக்குத்தான் என்று இருந்தது. ஆனால், நான் தகுதிபெற்றபோது 50 சதவீத மருத்துவ மாணவர்கள் பெண்களாக இருந்தனர். 1919ம் ஆண்டில் கணவரின் அனுமதி இல்லாமலேயே அலுவலகங்களுக்குச் சென்று பணிபுரிந்து சம்பளம் பெறும் உரிமை பெண்களுக்கு வழங்கப் பட்டது. இன்று அதுவே புதுமையாகி விட்டது. அந்தக் காலத்தில் இது ஒரு புரட்சிகரமான முடிவாகும் என்று புன்னகையுடன் தெரிவித்தார்.

1860ம் ஆண்டிலேயே மனைவியை கணவன் அடிப்பது சட்ட விரோதமான செயல் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் 1878ல் ஆண், பெண் இருவருக்கும் சொத்தில் சம உரிமை வழங்கப்பட்டது. 1901ல் பல்கலைக்கழகங்களில் சேர பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்பட்டது. 1897ல் தமது பாட்டி ஆரம்பப் பள்ளி வகுப்புகளில் கலந்து கொண்டதாக விர்பி நினைவுகூர்ந்தார். அப்போது அவை பல்வேறு வீடுகளில் நடைபெற்றதால் சுழலும் பள்ளிகள் என அழைக்கப்பட்டது. அவர் கணிதத்தில் அடிப்படைக் கல்வியையும், மேலும் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார். விர்பியின் தாயார் 1941ல் ஒரு தன்னார்வலாக யுத்த முன்னணியில் பணியாற்றினார். 1937லிருந்து மகப்பேறு உதவித்தொகைக்கான சட்டமும், 1944ல் மகப்பேறு மற்றும் குழந்தைக்கு மருத்துவப் பரிசோதனை சட்டமும் கொண்டுவரப்பட்டது.

மிக சமீபத்தில், அதாவது 1994ம் ஆண்டில் திருமணமான பெண்ணை அவரது அனுமதி இல்லாமல் உறவு கொள்வது சட்ட விரோதம் என்று அறிவிக்கப்பட்டது. 1999ம் ஆண்டு, ஓரினச்சேர்க்கை மற்றும் விபச்சாரம் இவற்றின் மீதான கட்டுப்பாடுகளை அரசு நீக்கியது. 2019ல் குழந்தைத் திருமணங்களுக்கு தடைவிதிக்கப் பட்டது.

பின்லாந்து ரோட்டரியில் பெண்கள்

1926ம் ஆண்டில் ஹெல்சிங்கியில் முதன் முதலாக ரோட்டரி சங்கம் உருவானது. பின்னர் 1987ம் ஆண்டு ரோட்டரியில் பெண் உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டனர். அதன் பின் ஹெல்சிங்கி சங்கம் மூன்று பெண் தலைவர்களைக் கண்டது. அவர்களில் ஒருவர் இரண்டு முறை பதவியில் இருந்தார். விர்பி, 2008–09 இல் முதல் பெண் மாவட்ட ஆளுநராகவும், பின் நாட்டின் முதல் RI இயக்குநராகவும் இருந்தார். 2019ம் ஆண்டு ரோட்டரி வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்ட பன்முகத்தன்மை, சமபங்கு, சேர்க்கை ஆகியவற்றை அவரும் ஏற்றுக்கொண்டார். பின்லாந்தின் பருவ வயதுப் பெண்கள் மத்தியில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை (MHM) பற்றி பேசிய அவர், பள்ளிகள் முன்கூட்டியே அவை பற்றிய கல்வியை கற்பிப்பதாகக் கூறினார். பள்ளிகளில் வளர் இளம் பருவத்தில் உள்ள பெண்களுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இருக்கிறதா என்று ரோட்டரி சர்வதேச மகளிர் குழு உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது, அங்கு நிலைமை நன்றாக இருப்பதாக பதில் கூறினார்.

ஒரு பெண் ரோட்டரி இயக்குநர் என்ற முறையில் தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்ட அவர், விவாதங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். பல்வேறு பிரச்னைகளின் தன்மைகளை புரிந்துகொள்ள நிறைய வாசிக்க வேண்டும். மாதவிடாய் சுகாதார மேம்பாட்டு நிர்வாகத்திற்காக தனியாக ஒரு நடவடிக்கைக் குழு தேவை என்று இங்கிலாந்தைச் சேர்ந்தவரும் ரோட்டரி சர்வதேச மகளிர் குழுவின் நிறுவன உறுப்பினருமான ஷர்மிளா நாகராஜன் தெரிவித்த கருத்துக்களை அவர் ஒப்புக்கொண்டார். ஆரம்ப காலச் சட்டங்கள் ஆண்களாலேயே அங்கீகரிக்கப்பட்டன.

ஆனால், மேம்பாடு கொண்ட இந்த சட்டங்களுக்கு பின்னால் சக்தி வாய்ந்த பெண்கள் பரப்புரை செய்கிறார்கள் மற்றும் மாதவிடாய் சுகாதார மேம்பாட்டின் அவசியத்தை விளக்குகிறார்கள். உலெகங்கிலும் உள்ள பெண்கள் மாதவிடாய் தொடர்பான பிரச்னைகளை எதிர் கொண்டனர். அவர்கள் அசுத்தமான வர்களாக கருதப்பட்டனர்.

ஆனால், இப்போது எல்லாமே நமக்குப் பின்னால் உள்ளன. ஆண்களுக்கு இதன் பொருள் என்ன என்பது பற்றிய அறிவு இருக்கவேண்டும். உலகில் பெண்களின் அதிகாரம் மற்றும் அவர்களின் வெற்றியை உறுதிசெய்வதும் முக்கியமானது. நான் உங்கள் கருத்தை ஆதரிக்கிறேன் என்றார் RI இயக்குநர் விர்பி.

முன்னாள் மாவட்ட ஆளுநர் ஷியாமாஷ்ரீ சென், ரோட்டரி செயல்பாட்டுக்குழு திட்டத்தை முன்னெடுத்து அதற்கு ரோட்டரி இன்டர்நேஷனில் ஒப்புதலை விரைந்து பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சேகர் மேத்தா, நேற்றைய கூட்டத்தில் மகளிர்க்கு அதிகாரம் அளித்தல் குறித்து பேசும்போது, நாப்கின்களை துவைத்துவிட்டு மீண்டும் பயன்படுத்துவது பற்றி பேசினார். அவர் menstrual cup பற்றி கேள்விப்பட்டிருக்க மாட்டார். நமது நாட்டில் மாதவிடாய் பற்றி யாரும் ஆண்களிடம் பேசு வதில்லை. ஏனெனில் அதை ஏதோ ஒரு தர்மசங்கடமான பிரச்னையாக கருதுகிறோம்.

மாதவிடாய் கோப்பை (menstrual cup) பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும். சானிடரி நாப்கின்களை விட அவை எப்படி சிறந்தவை என்பதை பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று குறிப் பிட்ட ஷர்மிளா, இங்கிலாந்தில் கூட பெரும் பாலான சூப்பர் மார்க்கெட்டுகளில் மாத விடாய் கோப்பைகளை விற்பனைக்கு வைத்திருக்கவில்லை. அவர்கள் பயன்படுத்திவிட்டு தூக்கி எறியக் கூடிய நாப்கின்களைத்தான் வைத்திருக்கின்றனர்.

இது சுற்றுச்சூழலுக்கு நல்லது மற்றும் அடுத்த தலைமுறை யினருக்கு சௌகரியமானது என்றால் நாம் அதை மேம்படுத்து வோம், பயன்களை எடுத்துக் கூறுவோம் என்றார் விர்பி.■

Rotary PEOPLE OF ACTION

கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தையல் பயிற்சி

V முத்துகுமரன்

தொழில் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து விழாவில் அதற்கான சான்றிதழையும், ஒரு தையல் இயந்திரத்தையும் 48 வயதான சவிதா பிரபாகரன் பெற்றுக்கொண்டபோது அவரது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. கணவனை இழந்த அந்த பெண், RID 2981க்கு உட்பட்ட, தஞ்சாவூர் சவுத் ரோட்டரி சங்கத்தின் தொழில் பயிற்சி மையத்தில் மூன்று மாத தையல் பயிற்சியில் சேரும் வரை அவர், பல ஆண்டுகளாக வீட்டு வேலை செய்யும் பெண்ணாகவே வாழவேண்டியிருந்தது.

"இப்போது எனக்கு ஒரு வாழ்வாதாரம் கிடைத்துவிட்டது" என்று நன்றிப் பெருக்குடன் குறிப்பிட்டார். இவருடன் பயிற்சி மேற்கொண்ட 51 வயதான கண்ணகிக்கு படுத்த படுக்கையாக இருக்கும் கணவரை கவனித்துக் கொள்வதே முக்கிய வேலையாக இருந்தது. இங்கு புதிய தொழிலை கற்றுக்கொண்டதன் மூலம் தனது மாத வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும் என்று நம்பிக்கையுடன் அவர் கூறினார். தொழில் பயிற்சி முடித்ததற்கான சான்றிதழ் பெற்ற 68 பேரில் இந்த இரு பெண்களும் அடங்குவர். ஆனால், இவர்கள் இருவருக்கு மட்டுமே தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன என்கிறார் சங்கத்தின் தலைவர் S பிரபு.

கடந்த ஆண்டு (2019–20) சங்கம், மாவட்ட மானிய உதவியுடன் மின்சாரத்தில் இயங்கும் 11 தையல் இயந்திரங்களை வழங்கியது. பயிற்சிக்கு சரியான நேரத்தில் நாள் தவறாமல் வருவது, திறன் மேம்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. விதவைகளுக்கும் ஆதவற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

சங்கத்தலைவர் S பிரபு (இடமிருந்து 2வது) மற்றும் Rtn முகமது எஹியா ஒரு பயனாளியிற்கு தையல் இயந்திரத்தை அளிக்கின்றனர்.

2012ம் ஆண்டு முதல் எங்கள் தொழில் பயிற்சி மையத்தில் ஆண்டுக்கு நான்கு தொகுதிகள் என்ற முறையில் இதுவரை 1,056 பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கொரோனா தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் முயற்சியாக போடப்பட்ட பொது முடக்கம் காரணமாக 10 மாதங்கள் மையம் மூடப்பட்டு, கடந்த நவம்பர் மாதம்தான் மீண்டும் திறக்கப்பட்டது என்றார் அவர். ஒரு வருடத்தில் நாங்கள் 98 பெண்களுக்கு இலவசமாக தையல் பயிற்சியைக் கற்றுத் தருகிறோம். ஆனால், கொரோனா தொற்று காரணமாக 68 பேர்தான் பயிற்சியில் சேர்ந்திருந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பயிற்சி நிறைவு விழாவில், தலைமை விருந்தினராகப் பங்கேற்ற சங்கத்தின் உறுப்பினர் முகமது எஹியா, கிராமப்புற பெண்கள் ஒரு குழுவை ஏற்படுத்தி தையல் இயந்திரங்கள் மூலம் மதிப்புக்கூட்டும் அழகான ஆடைகளை தயாரித்துக் கொடுத்தால் அதிக வருவாய் ஈட்ட முடியும் என்று குறிப்பிட்டார். கென்யா, துபாய், ஐரோப்பா, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட நாடுகளில் தொழில் செய்துவரும் எஹியா, தஞ்சாவூர் அருகே திருவையாறில் உள்ள நடுக்கடையில், தமது வீட்டின் அருகில் கணினி மற்றும் தையல் பயிற்சி மையத்தையும் நடத்தி வருகிறார். பெங்களூருவில் உள்ள தனது ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைக்கு திறமையான மனித வளத்தைப் பெறுவதற்காக

ரோட்டரி சங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளவும் எஹியா ஆர்வமாக உள்ளதாக பிரபு குறிப்பிட்டார்.

தன்னிறைவு பெற்ற சங்கம்

94 உறுப்பினர்களுடன், 43 வயதான சங்கத்தில் RID 2981ல் உள்ள 13 எண்டோவ்மென்ட் நன்கொடையாளர்களில் 7 பேரும், தவிர 10 பெரு நன்கொடையாளர்களும் உள்ளனர். எங்களுக்கு என்று சொந்தமாக 1983ம் ஆண்டில் ரூ.50 லட்சம் செலவில் கட்டப்பட்ட ரோட்டரி அருளானந்த சுவாமி நாடார் உள்அரங்க மண்டபம் உள்ளது. இந்த வளாகத்தின் தரைத்தளத்தில் பரந்த மண்டபமும், முதல் தளத்தில் தொழிற்பயிற்சி மையமும், மொட்டை மாடியில் தோட்டம் மற்றும் உணவுக்கூடம் என 5,300 சதுர அடி பரப்பளவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது அந்த மண்டபம் என்கிறார் பிரபு.

RCC *ஆம்பலாபட்டு அளித்திருக்கும் வகுப்பறை.*

எங்கள் சங்கம் 1,500க்கும் மேற்பட்ட ரோட்ராக்டர்கள் மற்றும் 1,400 இன்டராக்டர்களுடன் உதவிகளைச் செய்து வருகிறது. இதுவரை TRF அறக்கட்டளைக்கு ரூ.2.43 கோடி வழங்கியுள்ளது. RCC மூலம் ஆம்பலாபட்டில் உள்ள அரசு மேனிலைப் பள்ளிக்கு வகுப்பறை கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் பனயக்கோட்டையில் உள்ள மேனிலைப் பள்ளிக்கு பல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.■

RC காங்க்ரா-வின் புதுமையான செடிக்கன்றுத் திட்டம்

ரோட்டரி செய்திக்குழு

இமாச்சலப்பிரதேசத்தில் உள்ள காங்க்ராவில் நீங்கள் இளநீர் குடித்தால், மீதமிருக்கும் ஓட்டைத் தூக்கி எறிய வேண்டியதில்லை, இளநீர் விற்பனையாளரே அதில் மண் மற்றும் நாரை நிரப்பி ஒரு செடியை நட்டுக் கொடுத்துவிடுவார், நீங்கள் அதை வீட்டுக்குக் கொண்டு சென்று வளர்க்கலாம்.

RC காங்க்ரா, RID 3070தான் இந்த அதிசயத்தைச் சாத்தியமாக்கியிருக்கிறது. இவர்கள் நடத்திவரும் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பரப்புரையின் கீழ் இங்குள்ள இளநீர் விற்பனையாளர்களுக்கெல்லாம் சிறிய வேர்களைக் கொண்ட செடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் மிக நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்கிறார் சங்கத் தலைவர் சுனில் டோக்ரா, இதில் முக்கியமான விஷயம், இளநீர் ஓட்டுச் செடி முற்றிலும் இலவசம். நீங்கள் அதை வீட்டுக்குக் கொண்டுசென்று வளர்த்தால் போதும், விரைவில் ஒரு நல்ல தோட்டத்தை உருவாக்கிவிடலாம்.

தேங்காய் ஓடுகள் மட்கக்கூடியவை என்பதால், செடிக்கன்றுகளை வளர்க்க இவை நன்கு பயன்படுகின்றன. இவற்றை எளிதில் மண்ணுக்கு மாற்றிவிடலாம். தேங்காய் நாரில் சர்க்கரை, கனிமங்கள், அமினோ அமிலங்கள், வைட்டமின்கள் உள்ளதால், அது செடி வளர்க்க மிக நன்றாகப் பயன்படும் என்கிறார் டோக்ரா.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்த DG C A தாவீந்தர் சிங், தூய்மையான, பசுமைச் சூழலைக் கொண்டுவரும் புதுமைச் சிந்தனைக்காக இச்சங்கத்தைப் பாராட்டினார். திட்டத்தின் முதல் நாளில் 5,000க்கும் மேற்பட்ட செடிக்கன்றுகள் வழங்கப்பட்டன, என்று டோக்ரா உறுதி கூறுகிறார்.■

DG C A *தாவித்தர் சிங், அவர் மனைவி டாலி சச்தேவா மற்றும் சங்கத் தலைவர் சுனில் டாக்ரா இளநீர் ஓட்டில் வளர்க்கும் செடியுடன்.*

Rotary PEOPLE OF ACTION

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளித்தல்

ஜெய்ஶ்ரீ

சென்னையில் பில்டர்ஸ் அசோசியேஷன் வளாகத்தில் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை நான் அவரை சந்தித்தபோது குணசேகரன் அடைந்த மிகழ்ச்சிக்கு அளவே இல்லை. ரோட்டேரியன்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று நான் நல்ல வருமானத்துடன் வாழ்க்கை நடத்தி வருகிறேன். ஆறு மாதங்களுக்கு முன்பு நான் உண்மையில் மிகவும் நெருக்கடியில் இருந்தேன். கோவிட் தொற்றுவேறு நிலைமையை மேலும் மோசமாக்கியது என்றார் அவர். மாற்றுத் திறனாளி என்பதால் அவருக்கு நிலையான வேலை எதுவும் கிடைக்காமல் கிடைத்த வேலையை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார். ரோட்டரி மாவட்டம் 3232க்கு உட்பட்ட சென்னை கிரீன் சிட்டி ரோட்டரி சங்கம் அவருக்கு ஒரு தள்ளுவண்டியையும், தொழில் செய்வதற்கான மூலதனத்தையும் வழங்கியது. இன்று இவர் தின்பண்டங்களை விற்று தினமும் சராசரியாக ரூ.500 சம்பாதித்து மகிழ்ச்சியாக இருக்கிறார்.

குணசேகரன், சங்கத்தின் முன்னோடித் திட்டத்தின் ஆரம்பக்கால பயனாளிகளில் ஒருவர். தள்ளுவண்டி வழங்குவது மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள பலவகைகளில் உதவுகிறது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு மற்றும் அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் பி. சிம்மசந்திரன், ரோட்டரி சங்க உறுப்பினர் ஹரிச்சந்திரனிடம் ஒரு கணினி வழங்குமாறு கேட்டுக் கொண்ட போது தான் இந்தத் திட்டம் உருப்பெற்றது. மேலும் கலந்து ரையாடிய போது மாற்றுத்திறனாளிகள் குறிப்பாக பொது முடக்கத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டது வெளிச்சத்துக்கு வந்தது. அவர்களில் சிலர் முன்னதாக வீட்டுவேலை செய்பவர்களாகவும், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் பொருள்களை விற்பனை செய்துவந்தவர்கள். பொது முடக்கத்தால் அவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். அவர்கள் TNDFC மூலம் வாழ் வாதாரத்துக்கு உதவுமாறு எங்களைக் கேட்டுக்கொண்டனர். இதையடுத்து பிறந்ததுதான் மாற்றும் திறன் திட்டம் என்றார் சங்கத்தின் உறுப்பினர் S N பாலசுப்பிரமணியம். சமூக மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சி குழுவின் மாவட்டத் தலைவராகவும் அவர் இருந்து வருகிறார். முன்னோடித் திட்டம்

குணசேகரன் RC சென்னை க்ரீன்சிட்டி அளித்துள்ள தள்ளு வண்டியுடன்.

வெற்றிபெற்றதால் அவர், சமூகம் மற்றும் சுகாதார வளர்ச்சிக்கான மாவட்ட இயக்குநர் Dr R ஸ்ரீராம் உடன் இணைந்து RID 3232க்கு உட்பட்ட அனைத்து ரோட்டரி சங்கத்தையும் அழைத்துப் பேசினார். இதைத் தொடர்ந்து DG S முத்து பழனியப்பன், தனது குழுவினருடன் ஆண்டு இறுதிக்குள் 100 தள்ளு வண்டிகள் வழங்க கேட்டு கொண்டார். இதை யடுத்து ரோட்டரி சங்கங்கள் முடுக்கி விடப்பட்டன. அதன் பலனாக 2021 ஜனவரியில் 40 தள்ளுவண்டிகள் வழங்கப் பட்டன. சென்னை மாம்பலம் ரோட்டரி சங்கம் அவற்றில் அதிபட்சமாக 10 தள்ளு வண்டிகளை வழங்கியது. பயனாளிகள் உணவுப் பொருள்கள், காய்கறிகள், பழங்கள், புத்தகங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் உள்ளிட்டவற்றை கடைகள் போல் அமைத்து விற்பனை செய்தனர்.

வலமிருந்து: RIDE A S *வெங்கடேஷ்,* DG S *முத்துபழனியப்பன், சமூக மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக் குழு மாவட்டத்தலைவர்* S N *பாலசுப்ரமணியம், இக்குழுவின் இயக்குனர்* Dr R *ஸ்ரீராம் மற்றும்* DRFC M *அம்பலவானன் ஒரு பயனாளியுடன்.*

இதைத் தொடர்ந்து சமீபத்தில் RIDE A S வெங்கடேஷ் மற்றும் DG முத்துபழனியப்பன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேலும் 15 தள்ளுவண்டிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன. ஒரு ஆரம்பப்பள்ளியில் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் ஆயாவாக பணியாற்றிவந்த போலியோவால் பாதிக்கப்பட்ட கல்பனா, கொரோனா தொற்று முடக்கம் காரணமாக வேலையிழந்தார். அவருக்கு தள்ளு வண்டி வழங்கப்பட்டது. மிகவும் சிரமமான நேரத்தில் கடவுளே நேரில் வந்து உதவியது போல இந்த தள்ளு வண்டி கிடைத்துள்ளது. கல்பனாவுக்கு பக்கத்து வீட்டுக்காரரான ராஜேஸ்வரி, தள்ளு வண்டியில் மருமகள் தயாரித்துக் கொடுக்கும் சூப், பகோடா உள்ளிட்ட சிற்றுண்டிகளை தள்ளுவண்டியில் எடுத்துச் சென்று வியாபாரம் செய்யப்போவதாகக் கூறினார். இதைக் கூறியபோது அவர்களிடம் நம்பிக்கையின் ஒளி தெரிந்தது.

இந்நிகழ்ச்சியில் பேசிய வெங்கடேஷ், ஆப்பிரிக்காவின் கென்யாவில் ஒரு மருத்துவ முகாமுக்குச் சென்ற போது நடந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார். இந்த முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்த அமெரிக்காவைச் சேர்ந்த ரோட்டேரி யன்கள், ஆப்பிரிக்க நோயாளிகளிடம், சேவை செய்ய வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறினர். அதே போல உங்களுக்கு உதவி செய்ய எங்களுக்கு ஒரு வாய்ப்பளித்தமைக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். ரோட்டரி என்பது சேவையையே நோக்கமாகக் கொண்டது. அப்படி சேவை செய்வதற்கு எங்களுக்கு ஒரு தளம் தேவைப்படுகிறது. நீங்கள் அதை எங்களுக்கு வழங்கியுள்ளீர்கள் என்று அங்கு கூடியிருந்த பயனாளர்களிடம் தெரிவித்தார். தள்ளு வண்டி மற்றும் தொழில்நடத்துவதற்கான மூலதனத்தை வழங்கிய குழுவினரையும் அவர் பாராட்டினார். அவர்களுக்கு தொழில் மூலதனமோ அல்லது வியாபாரம் செய்வதற்கான வழிவகைகளையோ கூறாமல் தள்ளுவண்டியை மட்டும் வழங்குவது எந்தவிதத்திலும் பலனளிக்காது என்றும் குறிப்பிட்டார்.

இத்திட்டத்திற்கான பயனாளிகளை தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு மற்றும் அறக்கட்டளை கடந்த இரண்டு ஆண்டுகளாக கண்காணித்து தேர்வு செய்தது. மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான தள்ளு வண்டிகள் தலா ரூ.30,000 மதிப்பீட்டில் சென்னை மேற்கு ரோட்டரி சங்க உறுப்பினர் பஞ்சநாதன் என்பவரின் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவை. ரோட்டரி சங்கங்கள் அல்லது தனிநபர்கள் தள்ளுவண்டியை ஸ்பான்சர் செய்ய விரும்பினால் அதற்கான பணத்தை TNDFCயிடம் கொடுத்து விட வேண்டும். இதன் மூலம் வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் அவர்களுக்கு வருமான வரி விலக்கு கிடைக்கும். தள்ளுவண்டிகள் நீலவண்ண பூச்சுடன், ரோட்டரி சின்னத்துடனும் ஸ்பான்சர் செய்யும் சங்கத்தின் பெயரும் இடம்பெறும்.

வங்கிக்கடன் பெறுவது எப்படி, அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் என்னென்ன. அவற்றை பெற என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து பயனாளிகளுக்கு பயிற்சிப்பட்டறைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் தேவைப்படுபவர்களுக்கு சுழல்நிதி மூலம் உதவிசெய்கிறோம். அது மட்டு மல்லாமல் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஆலோசனை கூறிவருகிறோம் என்றார் பாலசுப்பிரமணியம்.

இந்த நிகழ்ச்சியில் ஐந்து ஆரம்பக் கால பயனாளிகள் அவர்களின் செயல் திறனுக்காக அங்கீகரிக்கப்பட்ட துடன் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.■

RAGகள் ரோட்டரியின் ஓர் ஒருங்கிணைந்த பகுதி: ஜான் ஹ்யூகோ

கிரண் ஜெஹரா

மாதச்சுழற்சி நலன் மற்றும் தூய்மைக்கான தங்களுடைய ரோட்டரி செயல் குழுவுக்கு (RAG – MHH) RI வாரியத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற RI பெண்கள் குழுவைப் பாராட்டிய RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ, 2013ல் நாம் அறிமுகப்படுத்திய இந்த நல்கை மாதிரி, 1980களில் தொடங்கிய இளம்பிள்ளைவாதத் தடுப்பு முயற்சிக்குப்பின் ரோட்டரி மேற்கொண்டுள்ள மிக முக்கியமான முன்னெடுப்பாகும். பலன் பெறுவோருக்குப் பல கூடுதல் நன்மைகளையும் அளிப்பதுடன், பல வழிகளில், நம் அமைப்பின் எதிர்காலத்தின் ஒரு முக்கியமான பகுதியையும் இது பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்றார்.

RAGகள் இன்னும் பெரியவை, இன்னும் பெரிய அளவில் வளரக்கூடியவை என்று குறிப்பிட்ட அவர், உள்ளூரில், பகுதியளவில் மற்றும் பன்னாட்டளவில் அவை மிகச் சிறந்த வகையில் நம் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துகின்றன என்றார், அதன்மூலம், நமக்குக் கூடுதல் உறுப்பினர்கள், ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடை அளிக்கக்கூடிய கூடுதல் நன்கொடையாளர்கள் கிடைப்பார்கள் என்று தெரிவித்தார்.

RAG–MHH என்பது, தங்கள் பகுதிகளில் இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்த விரும்பும் ரோட்டரியன்களுக்குப் பொருந்தும் வளங்களை வழங்கித் தாக்கம் உண்டாக்கும் ஒரு கருவியாகச் செயல்படும். RAGகள் குறிப்பிட்ட தலைப்புகள், பிரச்சனைகளில் கவனம் செலுத்துவதால், 100 பிரச்சனைகளில் ஒரு சதவிகிதத்தைத் தீர்ப்பதைவிட, ஒரு பிரச்சனையில் 100 சதவிகிதத்தை நாம் தீர்க்கலாம், இங்கு நாம் தீர்க்கவிருக்கும் அந்த ஒரு பிரச்சனை, மாதச் சுழற்சி நலன் மற்றும் தூய்மை என்றார் ஹ்யூகோ.

ஜார்ஜ் புஷ் நிர்வாகத்தில், நல்ல ஆட்சி, பொருளாதார விடுதலை மற்றும் தங்கள் குடிமக்களில் முதலீடு செய்வது ஆகியவற்றுக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட வளரும் நாடுகளுடன் கூட்டணியை உருவாக்கிய ஒரு வெளிநாட்டு உதவிக் கழகத்தை அமைக்கத் தான் பணியாற்றிய நேரத்தை அவர் நினைவுகூர்ந்தார், அதில் பல திட்டங்கள் பெண் குழந்தைகளின் தொடக்கப் பள்ளிக் கல்வியுடன் தொடர்புகொண்டிருந்தன என்றார். ஆனால், அவர்களுக்கு ஒரு கட்டடம் தேவை என்பதுபோல் எளிய பிரச்சனையாக அது இருக்கவில்லை. அவர்களுக்கு இன்னும் பல விஷயங்கள் தேவைப்பட்டன: தனிக் கழிப்பறை வசதிகள், உணவு, ஆசிரியர்கள், பாடத்திட்டம், படிப்பதற்குப் பாதுகாப்பான இடம்

நீங்கள் மற்ற RAGகளுடன் இணைந்து உங்கள் பணியைப் பெரிய அளவில் கொண்டுசெல்லவேண்டும், பெண்கள் குழுக்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையைத் தீர்ப்பதில் மட்டும் கவனம் செலுத்தாமல், நீண்ட கால, நீடித்திருக்கக்கூடிய, முழுமையான, தீர்க்கவேண்டிய பிரச்சனைகள் அனைத்தையும் கையாள்கிற திட்டங்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

உறுப்பினர் எண்ணிக்கையும் கோவிடும்

கடந்த 25 ஆண்டுகளாக உறுப்பினர் எண்ணிக்கை 1.2 மில்லியனாக நின்றுபோயிருப்பதைச் சுட்டிக் காட்டிய அவர் இது, சந்தையில் நாம் விற்கும் ஒரு பொருளைப் போன்றது. இங்கு நாம் சோப்போ ரொட்டியோ விற்கவில்லை. நாம் அனுபவத்தை விற்கிறோம் ஒரு ரோட்டரி சங்கத்தில் சேரும்போது நீங்கள் பெறும் அனுபவத்தை விற்கிறோம், அதற்காக நீங்கள் உங்கள் நேரத்தையும் பணத்தையும் செலுத்துகிறீர்கள் என்றார். நாம் நம்முடைய தயாரிப்பைப்பற்றி, நாம் வலுவாக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி மீண்டும் சிந்திக்கவேண்டிய நேரம் இது, இதற்கு RAGகள் ஒரு முக்கியப் பங்காற்றலாம் என்றார் அவர்.

ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கை

சற்று குறைந்துள்ளது என்பதை ஹ்யூகோ மறுக்கவில்லை. அதே நேரம், வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், நம் உறுப்பினர் எண்ணிக்கை குறிப்பிடக்கூடிய அளவில் குறைந்த ஒரே நேரம், 1930களில் பொருளியல் வீழ்ச்சிக்கு இரண்டு ஆண்டுகள் கழித்து! என்று அவர் நினைவுபடுத்தினார். அப்போது நம் உறுப்பினர் எண்ணிக்கை ஐந்து சதவிகிதத்தைவிடச் சற்று கூடுதலாகக் குறைந்தது. பன்னாட்டளவில் ஒவ்வொரு சதவிகித உறுப்பினர் எண்ணிக்கைக் குறைவுக்கும், ரோட்டரிக்கு $800,000 வருவாய் இழப்பு உண்டாகிறது. ஆகவே, ஐந்து சதவிகித உறுப்பினர் எண்ணிக்கைக் குறைவு என்றால், அது சுமார் $4 மில்லியன் வருவாய் இழப்பு உண்டாகிறது. நல்ல வேளையாக, கடந்த பல ஆண்டுகளாக, உங்கள் பணத்தை ரோட்டரி கவனமாகச் செலவுசெய்கிறது. RI மற்றும் TRF ஆகிய இரண்டிலும் வலுவான பண இருப்பு உள்ளது, இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இது போதுமானது. செயல்பாட்டளவிலும் நிதியளவிலும் ரோட்டரி ஒரு வலுவான நிலையில் உள்ளது என்றார்.■

பாட்டியாலாவில் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் அளிக்கப்பட்டன

ரோட்டரி செய்திக்குழு

RC பாட்டியாலா மிட்-டவுன், RID 3090 நடத்திய இலவசத் தையல் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குப் பதினைந்து தையல் இயந்திரங்கள், பயிற்சி நிறைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பணிப் பயிற்சி மறைந்த Rtn வித்யாசாகர் நினைவாகத் தொடங்கப்பட்டது, அவருடைய மனைவி சுமன் சாகர் தையல் இயந்திரங்களை ஆதரித்தார். இந்தப் பணி மையம் ரோட்டரி பவனில் இயங்குகிறது, ராஜீவ் பன்சால், N K ஜெயின் மற்றும் யஷ்விந்தர் சிங் ஆகியோரைக் கொண்ட மூன்று உறுப்பினர் குழு இதை வழிநடத்து கிறது.

இந்த நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராகப் பங்கேற்ற பாட்டியாலா நகராட்சிக் கழக இணை ஆணையர் லால் விஷ்வாஸ், பெண்களைச் சொந்தக் காலில் நிற்கச் செய்வதன் மூலம் அவர்களுக்கு ஆற்றல் அளிக்கும் இன்னொரு படிநிலையான இந்தப் பணி மையத்தை இயக்கும் இந்தச் சங்கத்தைப் பாராட்டினார். சங்கத் தலைவர் மனிக் ராஜ் சிங்க்ளா, செயலாளர் விஷால் ஷர்மா, பிற ரோட்டரியன்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.■

நம் இயற்கையில்

டயானா ஸ்கோபெர்க்

26 ஜூன் 2020 அன்று, அப்போதைய ரோட்டரி தலைவர் மார்க் டேனியல் மலோனி ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டார்: சுற்றுச் சூழல் என்பது ரோட்டரியின் புதிய கவனப் பகுதி ஆகும்.

கோவிட்-19 நோய்ப்பரவலால் தடுமாற்றத்துக்கு ஆளாகி, ரோட்டரியின் முதல் மெய்நிகர் சந்திப்பில் நிறைவடைந்த ஒரு பொறுப்புக் காலகட்டத்தின் நிறைவுச் சாதனைகளில் இதுவும் ஒன்று. நிறைவாக, அறங்காவலர்கள் இந்த முன்வைப்பை ஒருமனமாக நிறைவேற்றினார்கள், வாரியம் இதை ஒருமனமாக அங்கீகரித்தது, என் வீட்டில் அமர்ந்துகொண்டு நான் இதை மிகுந்த மன நிறைவோடு கூறுகிறேன் என்று சமீபத்திய ஜூம் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார் மலோனி.

இந்தக் கணம், பல பத்தாண்டு களாகத் தொடர்ந்த ரோட்டரியன் ஆர்வத்தால் கட்டமைக்கப்பட்டது. 1990–91ல் ரோட்டரி தலைவர் பௌலோ V C கோஸ்டா தன்னுடைய பொறுப்புக் காலகட்டத்தின் ஒரு கவனமாக சுற்றுச்சூழலை ஆக்கினார், சுற்றுச் சூழல் முன்னெடுப்புகளைச் சங்கங்களும் உறுப்பினர்களும் எப்படிச் செய்யலாம் என்பதற்கான வழிகளை ஆராய்வதற்காகப் பூமியைக் காப்போம் என்கிற குழுவை உருவாக்கினார். ரோட்டரி குடும்ப உறுப்பினர்கள் மிக முக்கியமாகக் கருதும் விஷயங்களில் சுற்றுச்சூழலும் ஒன்று எனக் கணக்கெடுப்புகள் கண்டறிந்தன.

பல பத்தாண்டுகளாக, ரோட்டரி உறுப்பினர்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் ஆயிரக்கணக்கான திட்டங்களை நடத்தியுள்ளார்கள். வெறும் ஐந்து ஆண்டுகளில், மொத்தம் $18 மில்லியன் மதிப்புள்ள பன்னாட்டு நல்கைகள் சுற்றுச்சூழலைப் பாது காக்கிற, அதே நேரம் ரோட்டரியின் நோக்கங்களில் ஒன்றிலும் (தூய நீர் மற்றும் தூய்மையை வழங்குதல், உள்ளூர்ப் பொருளாதாரங்களை வளர்த்தல், கல்விக்கு ஆதரவளித்தல் போன்றவை) கவனம் செலுத்துகிற திட்டங்களுக்கு நிதியளித்தன. இப்போது, சுற்றுச்சூழல் என்பது ரோட்டரியின் நோக்கங்களில் ஒன்றாகவே ஆகிவிட்டதால், உறுப்பினர்கள் தங்களுக்கு முக்கியமாக

இருக்கும் பிரச்சனைகளில் கவனம் செலுத்த மேலும் கூடுதல் வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

எல்லா இடங்களிலும் உள்ள ரோட்டரியன்களுடைய எல்லையற்ற படைப்பூக்கம், ஆர்வம், உறுதி, குறிப்பிடக்கூடிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அவர்கள் காட்டும் விருப்பம் ஆகியவற்றால், சுற்றுச்சூழலில் ஒரு தாக்கத்தை உண்டாக்கும் சிறப்புத் தகுதியை அவர்கள் பெறுகிறார்கள் என்கிறார் 2017–18 RI தலைவர் இயான் H S ரைஸ்லி. புதிய கவனப் பகுதிக்காகப் பணியாற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் செயல் குழு ஒன்றுக்கு இவர் தலைமை வகித்தார்.

ரோட்டரி உறுப்பினர்கள் ஏற்கெனவே சுற்றுச்சூழலை எப்படியெல்லாம் ஆதரித்து வருகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவும், 1 ஜூலையில் தொடங்கிப் பன்னாட்டு நல்கை நிதியளித்தலுக்குத் தகுதி பெறும் புதிய வகைத் திட்டங்களைப்பற்றிக் கற்றுக்கொள்ளவும், தொடர்ந்து படியுங்கள்.

மறுசுழற்சி செய்தல்

பிரேசிலில் உள்ள கேம்போ மௌரௌவில் வெறும் 5% குப்பைதான் மறுசுழற்சி செய்யப் படுகிறது. உள்ளூர் மறுசுழற்சி வளாக ஊழியர்களிடம் செயல்திறனை மேம்படுத்தத் தேவையான கருவிகள் இல்லை. நகரும் கன்வேயர் பெல்ட் இல்லாததால், அவர்கள் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை மேசை களில் வகை பிரித்து, அவற்றைக் கையால் நகர்த்தவேண்டியிருந்தது, இதற்குக் கூடுதல் நேரம், முயற்சி தேவைப்பட்டது. அவர்களுடைய அழுத்தும் கருவி பழையது, மெது வானது; அது உருவாக்கிய மறுசுழற்சி கட்டுகள் அந்தப் பகுதிச் சந்தையில் உள்ள வழக்கமான கட்டுகளைவிடச் சிறியவையாக இருந்தன.

கேம்போ மௌரௌ மற்றும் லிட்டில் ராக், அர்கான்சாஸ் ரோட்டரி சங்கங்களின் உறுப்பினர்கள், மறுசுழற்சி கூட்டுறவுகளை ஒருங்கிணைக்கும் உள்ளூர்ச் சுற்றுச்சூழல் திட்டம் ஒன்றுடன் பணியாற்றி, மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைப் பிரித்துச் செயல்முறைப்படுத்தும் ஊழியர்களுடைய திறனை மிகுதியாக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள், அதன்மூலம் பொருளாதார, சுற்றுச்சூழல் நன்மைகளை வழங்கினார்கள். சமூகப் பொருளாதார மேம்பாடு என்னும் கவனப் பகுதியில் $33,066 பன்னாட்டு நல்கை ஒன்றால் ஆதரிக்கப்படும் இந்தத் திட்டம், ஊழியர்களுடைய பாதுகாப்பு, செயல்திறனை மேம் படுத்தும் கருவிகளை வாங்க நிதியளித்தது, சுற்றுச்சூழல், நிதிப் பயிற்சியை அளித்தது.

நல்கைத் திட்டம் செயல்படுத்தப் பட்டபின், ஊழியர்கள் மாதத்துக்கு 2.63 டன் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைக் கூடுதலாக வகை பிரித்தார்கள், அவர்களுடைய வருவாய் மாதத்துக்குக் கிட்டத்தட்ட 25% கூடுதலானது.

சூரிய ஒளி விளக்குகள்

கிழக்குக் கென்யாவில் உள்ள ன்தந்தினி, க்யாய்தானி என்னும் தொலைதூரக் கிராமங்களில் வசிக்கும் குடும்பங்கள் நாள்தோறும் $1ஐ விடக் குறைவான தொகையில் வாழ்கிறார்கள், அவர்களுடைய வீடுகளில் எந்த மின் இணைப்பும் இல்லை. இவர்களில் பெரும் பாலானோருக்குத் தங்கள் வீடுகளுக்கு ஒளி வழங்க மண்ணெண்ணெய் அல்லது பாரஃபின் வாங்கும் வசதி இல்லை. இதனால், மாணவர்கள் மாலை நேரங்களில் வீட்டுப்பாடம் செய்ய இயலாது.

சன்ஷைன் கோஸ்ட்-செசெல்ட், பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் மாசாகோஸ், கென்யா ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்ற திட்டங்களுக்காக இந்தப் பகுதியில் பணியாற்றும்போது, இந்தப் பிரச்சனையைப்பற்றித் தெரிந்து கொண்டார்கள். 2014ல், அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவுக் கவனப் பகுதியில் $101,564 மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கையின் ஆதரவுடன் இங்குள்ள வீடுகள், பள்ளிகளுக்குச் சுற்றுச்சூழலுக்கு இதமான சூரிய ஒளி மின்சாரத்தை வழங்கும் ஒரு திட்டத்தை ரோட்டரியன்கள் இங்கு தொடங்கினார்கள்.

உள்ளூர்ப் பள்ளிகளில் பயிலும் சுமார் 1,500 மாணவர்களுக்குத் தலா ஒரு சூரிய ஒளி விளக்கு வழங்கப்பட்டது. வாடகை செலுத்தி உரிமை கொள்ளும் இந்தத் திட்டத்தின்கீழ், மாணவர்கள் மாதம் 1 செலுத்துகிறார்கள், இது பாரஃபின் செலவைவிடக் குறைவாகும். எட்டு மாதங்களுக்குப் பிறகு, அந்த விளக்கு அவர்களுக்குச் சொந்தமாகி விடும். இதன்மூலம் கிடைக்கும் தொகை, அடுத்த ஆண்டு இன்னொரு மாணவருக்கு ஒரு சூரிய ஒளி விளக்கை அளிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

சூரிய ஒளி விளக்குகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின், மாணவர்கள் படிக்கும் நேரம் மும்மடங் காகியுள்ளதைக் குறிப்பிடும் திட்டக் கூட்டாளர் கென்யா கனெக்ட், இந்தத் திட்டம் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது, கிராமப்புறப் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்தி யுள்ளது என்கிறார்.

இந்த நல்கையையும், ரோட்டரி அறக்கட்டளை (கனடா), கனடா அரசாங்கம் வழங்கிய நிதியையும் சேர்த்து, இரண்டு பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் உருவாக்கப் பட்டுள்ளன, ஒட்டுமொத்த அமைப்புக்கும் போதுமான ஆற்றல் அளிக்கும் ஒரு சூரிய ஒளி அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் டிஜிட்டல் கற்றல் பயிற்சி பெற்றார்கள், தங்கள் கற்பித்தலுக்குக் கணினிகளை இன்னும் நன்றாகப் பயன்படுத்தும் வழிகளைத் தெரிந்துகொண்டார்கள்.

நீர் திசைமாற்றல்

இந்தியாவிலுள்ள ஔரங்காபாதுக்கு அருகிலுள்ள இரண்டு சமூகங்களின் வசிப்போர் கிணறுகளிலிருந்து நீர் பெறுகிறார்கள். இந்தக் கிணறுகள் ஆண்டுதோறும் மழைக்காலத்தில் பெய்யும் மழையால் நிரம்புகின்றன. ஆனால், மழை பெய்து சில மாதங்களுக்குள், கிணறுகள் வறண்டுவிடுகின்றன. ஆகவே, சமூக உறுப் பினர்கள் நெடுந்தொலைவு சென்று நீர் கொண்டு வரவேண்டும், அல்லது, காசு கொடுத்து நீர் வாங்க வேண்டும், அதற்கான வசதி பலரிடம் இல்லை.

ஔரங்காபாத் ஈஸ்ட் மற்றும் சாட்ஸ்வுட் ரோஸ்வில்லெ, ஆஸ்திரேலிய ரோட்டரி சங்கங்

களின் உறுப்பினர்கள் இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காகச் சேர்ந்து உழைத்தார்கள், ஓர் எளிய, பழங்காலத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சுற்றுச் சூழலுக்கு இதமான ஒரு தீர்வைக் கண்டார்கள்: தடுப்பு அணைகள் இந்தச் சிறு அணைகள் இடுக்குகளின் குறுக்கில் கட்டப் படுகின்றன, நீர்ப்பெருக்கின் விகிதத்தைக் கட்டுப்படுத்துகின்றன. இவை அரிப்பைக் குறைக்கின்றன, தரைக்குள் ஊறும் நீரின் அளவை மிகுதியாக்குகின்றன. இந்த நோக்கத் துக்காக இந்தியாமுழுவதும் 200,000க்கும் மேற்பட்ட தடுப்பு அணைகள் கட்டப்பட்டுள்ளன; இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் கட்டப்பட்ட ஒரு தடுப்பு அணை இப்போதும் பயனில் உள்ளது, உலகின் மிகப் பழைய நீர் திசைமாற்றல் கட்ட மைப்புகளில் ஒன்று இது.

ஔரங்காபாதில், மழைக்கால மழை நீர் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு விளையாட்டுப் பயிற்சி மையத்தின் வழியாக ஓடி, சாக்கடையால் மாசுபட்ட கம் ஆற்றைச் சேர்கிறது. நீர், தூய்மை மற்றும் சுகாதாரக் கவனப் பகுதியில் $36,500 பன்னாட்டு நல்கை யொன்றின் ஆதரவைப் பெற்ற ரோட்டரி உறுப்பினர்கள் இந்த வளாகத்தில் இரண்டு காங்கீரீட் தடுப்பு அணை களைக் கட்ட நிதியளித்தார்கள். இதனால், மழைக்கால மழை நீர் தரையில் ஊறுவது கூடுதலாகும், இந்தப் பகுதியிலுள்ள 20,000 மக்கள் தங்கள் கிணறுகளிலிருந்து நீரைப் பெறும் காலகட்டம் நீளமாகும். இந்த அணைகள் 75 ஆண்டுகள் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, இவற்றுக்குக் குறைந்த பராமரிப்பு போதுமானது.

நீர்ப் பாதுகாப்பு

ஹைஃபா, இஸ்ரேல் மற்றும் கோரல் ஸ்ப்ரிங்க்ஸ்-பார்க்லான்ட், ஃப்ளோரிடாவின் சில பன்னாட்டு நல்கைத் திட்டங்கள், சுற்றுச்சூழல் கல்வித் திட்டம் ஒன்றைப் பயன்படுத்தி, வெவ்வேறு பண்பாடுகள் நம்பிக்கைகளைக் கொண்ட மாணவர்களைப் பாலைவனப் பகுதியில் பரஸ்பர முக்கியத்துவம் கொண்ட ஒரு தலைப்பில் ஒருங்கிணைக்கின்றன: நீர்ப் பாதுகாப்பு.

60 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் பங்கேற்றார்கள், அமைதி உருவாக்கம் மற்றும் முரண் தீர்ப்புக் கவனப் பகுதியில் $152,723 பன்னாட்டு நல்கையொன்றால் இது ஆதரிக்கப்பட்டது.

நீர்ப் பாதுகாப்பு அல்லது உப்பு அகற்றல், மழை நீர் சேகரிப்பு, அல்லது நீர்க் கசிவுகள் போன்ற தொழில்நுட்பம் தொடர்பான ஆர்வமூட்டும் ஆராய்ச்சி தலைப்புகளைப் பள்ளிகள் தேர்ந்தெடுத்தன. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அவர்களுடைய அறிவியல் திட்டங்களில் ஆதரவு அளிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, கருவிகள், பொறியாளர்கள், உயிரியலாளர்கள் அல்லது இயற்பியலாளர்கள் போன்ற வல்லுனர் களுடன் இணைப்புகள் வழங்கப் பட்டன. 26 பயிற்சி நிகழ்வு களில் 150க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி பெற்றார்கள்.

இஸ்ரேலில் பெரும்பாலான பள்ளிகள் பண்பாடு அல்லது மதத்தால் யூதர், இஸ்லாமியர், கிறித்துவர் அல்லது துருஸ் என்பதுபோல் பிரிக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் பண்பாடுகளுக் கிடையிலான பகுதியின் வழியாக, மாணவர்கள் மற்றவர்களுடைய பள்ளிகளுக்குச் சென்று ஆராய்ச்சித் திட்டங்களைப் பார்த்தார்கள், ஒன்றாகச் சேர்ந்து தொழிற்சாலை வளாகங்களுக்குக் களப்பயணம் சென்றார்கள் அல்லது தொடர்புடைய பேச்சாளர்களுடைய பேச்சுகளைக் கேட்டார்கள். மற்ற வழிகளில் அவர்களுக்குக் கிடைக்காத உரையாடல் வாய்ப்பை இது வழங்கியது.

நீடிக்கும் பண்ணைத் தொழில்

உள்நாட்டுத் தராஹுமாரா மக்கள் மெக்சிகோவின் சியர்ரா மாட்ரெ மலையின் தொலைதூரச் சரிவுகள், பள்ளத்தாக்குகளில் வாழ்கிறார்கள், உணவுக்காகப் பழைய வகைச் சோளம், பீன்ஸ் ஆகியவற்றை வளர்க்கிறார்கள். ஆனால், பல தலை முறைகளாகத் தொடர்ந்து வந்த இந்தச் செடிகளுக்கான விதைகள், ஒரு நீடித்த வறட்சியால் அழிக்கப்பட்டன. இதனால் பசி பரவலானது, பல இளைஞர்களும் பெண்களும் குழந்தைகளும் தங்கள் வீட்டை விட்டு வெளியேறி நகரத் தெருக்களில் பிச்சை எடுக்கவேண்டியிருந்தது.

சிஹுவாஹுவா காம்பெஸ்ட்ரெ, மெக்சிகோ மற்றும் புனித அகஸ்டைன் சன்ரைஸ், ஃப்ளோரிடா ரோட்டரி சங்க உறுப்பினர்கள் பேர்ஃபுட் சீட்ஸ் என்ற அரசல்லாத அமைப்பு ஒன்றுடன் இணைந்து பணியாற்றி, தராஹுமாரா தலைவர்களுடன் சமூக உரையாடல்களுக்கு வழிசெய்தார்கள், தீர்வுகள் கண்டறியப்பட்டன. விதை



வங்கிகள், தொடர்ந்த பண்ணைத் தொழிலை ஆதரிக்கும் மேம்பட்ட நீர் சேமிப்பு ஆகியவற்றைச் சமூகத் தலைவர்கள் கேட்டார்கள்.

சமூகப் பொருளாதார மேம்பாட்டுக் கவனப் பகுதியில் $49,900 பன்னாட்டு நல்கையொன்றின் ஆதரவில் தொடங்கப்பட்ட ஒரு திட்டம், விதை வங்கிகள், செய்முறை விளக்கப் பண்ணைகள், நீடித்த பண்ணை முறைகளைப் பயன்படுத்திக் கூடுதல் விதைகளை வளர்க்கும் இடங்களை அமைத்தது, மண் வளத்தை மேம்படுத்துவதற்காக ஆடுகளை மீண்டும் அறிமுகப்படுத்தியது, மழை நீர் சேகரிப்புக் கருவிகளை நிறுவியது, பயிற்சி வழங்கியது. சேமிக்கப்பட்ட விதைகளின் வாழ்நாளை மேலும் கூடுதலாக்குவதற்காகச்

சூரிய ஒளி ஆற்றலில் இயங்கும் பாதுகாப்பு உறைவிப்பானையும் இந்தத் திட்டம் வழங்கியது. முதல் ஆண்டில், குறைந்தது 500 தராஹுமாரா விவசாயிகள் விதைகள், ஆடுகள் அல்லது மேம்பட்ட நீர் அணுகலைப் பெற்றார்கள்.

சுற்றுச்சூழல் அடுப்புகள்

சமையலுக்கான ஒரு பழைய மர அடுப்பு, ஒரு மணி நேரத்தில் 400 சிகரெட்களுக்கு இணையான புகையை உண்டாக்குகிறது. உலகெங்கும் சுமார் 3 பில்லியன் மக்கள் இன்னும் இது போன்ற அடுப்புகளை நம்பியிருப்பதால், இவற்றில் பல அடுப்புகள் வீட்டுக்குள் இருப்பதால், மலேரியா, காசநோய் மற்றும் HIV/ எயிட்ஸ் ஆகியவற்றால் இறப்பவர்களுடைய மொத்த எண்ணிக்கையைவிடக் கூடுதலான மக்கள் வீட்டுக்குள்ளான காற்று மாசினால் இறக்கிறார்கள் என்கிறது உலக சுகாதார அமைப்பு. இத்துடன், இந்த நெருப்புகளிலிருந்து உமிழப்படும் கருப்புக் கார்பன் சூரிய ஒளியை உறிஞ்சுகிறது, இது காலநிலை மாற்றத்துக்குப் பங்களிப்பதாக நம்பப் படுகிறது, அதேபோல், மரத்துக்கான தேவை காட்டை அழித்தலைத் தூண்டுகிறது.

குவாத்தமாலா டெல் எஸ்டெ மற்றும் லாஸ் ஏஞ்சலஸ், கலிஃபோர்னியா ரோட்டரி சங்கங்களின் உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றி, அடிட்லன் ஏரியின் தென்கிழக்குக் கரையில் உள்ள சன் லுகாஸ் டொலிமன், குவாத்தமாலாவில் வசிக்கும் குடும்பங்களுக்கு உதவினார்கள். சன் லுகாஸ் டொலிமன் உள்ளிட்ட சமூகங்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் முதன்மை மூலமான இந்த ஏரி மிகவும் மாசுபட்டுள்ளது, இதற்கு ஒரு காரணம், சமையல் விறகுக்காக மரங்கள் வெட்டப்பட்ட பகுதிகளில் நிகழ்ந்த புயலோட்டம்.

நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைக் கவனப் பகுதியில் $160,000 பன்னாட்டு நல்கையொன்றின் ஆதரவுடன் இங்கு தொடங்கப்பட்ட ஒரு திட்டம், 1,000 குடும்பங்களுக்குச் சுற்றுச்சூழல் அடுப்புகளை வழங்கியது, இவை புகையை வெளியில் விடுகின்றன, தேவைப்படும் விறகின் அளவை 70% குறைக்கின்றன. ஒவ்வோர் அடுப்பும் ஆண்டுக்கு 3 முதல் 4 டன் கார்பன் உமிழ்வைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தூய ஆற்றல்

க்யும்ரி, அர்மேனியாவில் நடைபெற்ற ஒரு கொடுமையான நிலநடுக்கத்துக்குப்பின், 1993ல் பெர்லின் பாலிக்ளினிக் என்ற

மருந்தகம் தொடங்கப்பட்டது. அப்போதிலிருந்து, இந்தப் பகுதிக்கான முதன்மை நலப் பராமரிப்பு வழங்குநராக இது உள்ளது. ஆனால், இங்கு உள்ளவர்களுக்குச் சுமாரான நலப் பராமரிப்புதான் கிடைக்கிறது. க்யும்ரி ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மருத்துவ மையப் பிரதிநிதிகளுடன் இதுபற்றிப் பேசினார்கள், ஆற்றல் செலவுகள் மிகவும் மிகுதியாகிவருவதால், இந்த மருந்தகத்தால் நோயாளிகளுக்குப் போதுமான சேவை வழங்க இயலுவதில்லை என்று தெரிந்து கொண்டார்கள். முந்தைய பத்தாண்டில், மின்சாரச் செலவு 200%, இயற்கை வாயுச் செலவு 70%, நீர்ச் செலவு 50% உயர்ந்துள்ளன. இந்த உயர்வுகளும், செயல்திறனற்ற சூடாக்கல் மற்றும் நீர் சூடாக்கல் அமைப்புகளும் சேர்ந்து, இந்தப் பகுதியின் நீண்ட குளிர்காலங்களில் இந்த மருந்தகத்தின் பணி

நேரத்தைக் குறைத்துவிட்டன. இதனால், சூடாக்கும் பருவத்தில் (அக்டோபர் முதல் ஏப்ரல்வரை) இந்த மருந்தகத்துக்கு வரும் நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை 25 முதல் 30% குறைந்துவிட்டது.

2017ல், க்யும்ரி ரோட்டரியன்கள் நார்த் ஃப்ரெஸ்னோ, கலிஃபோர்னியா ரோட்டரி சங்கத்துடன் இணைந்து, தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலன் கவனப் பகுதியில் $101,000 ரோட்டரி அறக்கட்டளை பன்னாட்டு நல்கை ஒன்றின் ஆதரவுடன் ஒரு திட்டத்தில் பணியாற்றினார்கள், நோயாளிகளின் அணுகலை மேம்படுத்தினார்கள், சுற்றுச் சூழலுக்கு நன்மை அளித்தார்கள். இந்தத் திட்டத்தின் கீழ், ஃபோட்டோவோல்டாயிக் பேனல்கள், சூரிய ஒளி வெந்நீர் அமைப்பு, சூரிய ஒளி வெப்பப் பம்ப்கள் மற்றும் LED விளக்குகள் அமைக்கப்பட்டன, இதனால் ஆண்டு மின்சாரச் செலவு 80% வரை குறையும் என

எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், இந்த மருந்தகம் ஆண்டு முழுவதும் முழுமையாக இயங்குகிறது, அதே நேரம், கார்பன் உமிழ்வுகள் 50% குறைந்துள்ளன. புதிய அமைப்புடன் முதல் குளிர்காலச் சூடாக்கல் பருவத்தில், சேவை பெற்ற நோயாளி களின் எண்ணிக்கை 32% கூடுதலானது.

"விண்மீன்கள் ஒன்றாகப் பொருந்தியது" எப்படி

ரோட்டரி சுற்றுச்சூழலை ஒரு கவனப் பகுதியாக ஆக்கத் தீர்மானித்தது ஏன், ரோட்டரி உறுப்பினர்கள் இதற்கு எப்படி எதிர்வினையாற்றியுள்ளார்கள் என்பதுபற்றி 2019–20 ரோட்டரி தலைவர் மார்க் டேனியல் மலோனியிடம் நாங்கள் பேசினோம்.

ரோட்டரி சுற்றுச்சூழலை ஒரு கவனப்பகுதியாக ஆக்குவது முக்கியம் என்று நீங்கள் ஏன் நினைத்தீர்கள்?

நான் மரங்களைக் கட்டிப்பிடிப்பதில்லை, ஆனால், என் பேரப் பிள்ளைகள், வருங்காலத் தலைமுறையினரைக் காலநிலை மாற்றம் பாதிக்கும் என்று எனக்கு மிகுந்த கவலைகள் உண்டு. இதில் ஒரு சுயநல நோக்கம் உள்ளது என்று நான் ஒப்புக்கொள்ளவேண்டும்: நாம் ஒரு நல்ல வாய்ப்பை இழந்து கொண்டிருக்கிறோம் என்று எனக்குக் கவலையாக இருந்தது.



ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்கள், சாத்தியமுள்ள ரோட்டரியன்களிடையே நடத்திய கணக்கெடுப்புகளில், ஒவ்வொரு குழுவின் முதல் ஐந்து நோக்கங்களில் சுற்றுச்சூழல் இருந்தது. பொதுமக்கள், சாத்தியமுள்ள ரோட்டரியன்கள் இதை முதல் நோக்கமாக எண்ணினார்கள். அந்தச் சாத்தியமுள்ள ரோட்டரியன் ரோட்டரி இணையத் தளத்துக்குச் சென்று நம் நோக்கங்களைப் பார்ப்பார், சுற்றுச்சூழல் அங்கு இருக்காது, அவர் வேறு எங்கேனும் சென்றுவிடுவார். ரோட்டரியின் பொருந்தும் தன்மைபற்றிய ஒரு பிரச்சனையாக நான் அதைக் கண்டேன், அத்துடன், நாம் குறிப்பிடக்கூடிய அளவில் செய்யவேண்டிய ஒன்றாகவும் அதைக் கண்டேன்.

தலைவராக நான் வலியுறுத்திய விஷயங்களில் ஒன்று, ரோட்டரியை வளர்த்தல். சுற்றுச்சூழலை நம் நோக்கங்களில் ஒன்றாகக் கொள்ளாமலிருப்பது வளர்ச்சியைத் தடுக்கும் என்று நான் எண்ணினேன்.

வாரியம், அறங்காவலர்களுடைய வாக்குகளுக்குமுன்னால், சுற்றுச் சூழல்பற்றி ரோட்டரியன்கள் உங்களிடம் என்ன கூறினார்கள்?

ஜூன் 2019ல் நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோது, ஆசியாவின் முதல் ரோட்டரி சங்கமான மணிலா ரோட்டரி சங்கத்தின் நூற்றாண்டைக் கொண்டாடுவதற்காக ஃபிலிப்பைன்ஸ் சென்றேன். அது வெறும் கொண்டாட்ட விருந்தாக இருக்கவில்லை. ஒரு நாள்முழுதும் பலர் பேசினார்கள், அப்போதைய ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் ரஃபேல் கார்சியா, பல RI தலைவர்கள், இயக்குநர்கள், முன்னாள், இப்போதைய மாவட்ட ஆளுநர்களுடன் ஒரு வட்ட மேசை விவாதத்துக்காக நான் மேடைக்கு அழைக்கப்பட்டேன். மேடையிலிருந்த பிறர் என்னிடம் கேள்விகளைக் கேட்டார்கள். அந்த நேரத்தில்,

உயர்நிலைத் தொழில் மக்களுடன் நான் மேடையில் இருக்கிறேன், எங்களிடம் கேட்கப் பட்ட கேள்விகளில் பாதிக்கு மேல்,

சுற்றுச்சூழல்பற்றியவை. அது என்னை மிகவும் ஈர்த்தது.

ஆனால், இது ஃபிலிப்பைன்ஸில் மட்டும் நடக்கவில்லை. சுற்றுச் சூழல் பற்றிய கேள்விகளை நான் உலகெங்கும் எதிர் கொண்டுள்ளேன்: தெற்கு அமெரிக்காவில், பிரேசில் ரோட்டரி சந்திப்பில். ஹாம்பர்கில் 2019 RI சந்திப்பில். இந்தியாவில் உள்ள சூரத்தில் ஒரு ரோட்டராக்ட் நிகழ்வில்.

சுற்றுச்சூழல் செயல் குழு அக்டோபர் 2019ல் அமைக்கப் பட்டது, இந்தப் புதிய கவனப் பகுதி அடுத்த ஜூனில் அங்கீகரிக்கப்பட்டது. இது எப்படி இவ்வளவு விரைவாக நடந்தது?

ஹொனலுலுவில் நடைபெறவிருந்த 2020 ரோட்டரி சந்திப்பை ஒரு பசுமைச் சந்திப்பாகச் சான்று பெறுவதை நோக்கி நாங்கள் முன்னேறிக்கொண்டிருந்தோம். அதற்குள் அது நோய்ப்பரவலால் இணையத்துக்கு மாற்றப்பட்டுவிட்டது. 5 ஜூன் அன்று உலகச் சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்காகச் சுற்றுச்சூழல் நீடித்திருத்தல் ரோட்டரி செயல் குழு, நீர், தூய்மை மற்றும் சுகாதார ரோட்டரி செயல் குழுவுடன் நாங்கள் இணைந்து பணிபுரிந்துகொண்டிருந்தோம். இவை அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து, சுற்றுச்சூழலை ரோட்டரியில் முதன்மைக்குக் கொண்டுவந்தது. ஒருவர் சற்றுக் கூடுதலாக வற்புறுத்த விரும்பவேண்டியிருந்தது, அவ்வளவுதான் என்று நான் நினைக்கிறேன்.

உண்மையில், நான் அவ்வளவு கடினமாக வற்புறுத்த வேண்டியிருக்கவில்லை. விண்மீன்கள் ஒன்றாகப் பொருந்திவிட்டன. ரோட்டரி தலைவர், அறங்காவலர்கள் வாரியத்தில் சேவை புரியும் பல முன்னாள் தலைவர்கள் இது நிகழ வேண்டும் என்று விரும்பினார்கள்.

இது ரோட்டரியின் பணி இல்லை என்று சொல்லும் ரோட்டரியன்களுக்கு நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்?

அப்படி ஒரு கருத்தை நான் எதிர்கொண்டதில்லை. அமெரிக்காவில் காலநிலை மாற்றத்தைப்பற்றி நீங்கள் பேசத் தொடங்குமுன், துறைச் சொல் சார்ந்த சில பிரச்சனைகள் உள்ளது எனக்குத் தெரியும். ஆனால், உண்மையில், அமெரிக்காவுக்கு வெளியில், இங்கு இப்படி ஓர் எதிர்ப்பு உள்ளது ஏன் என்பது பலருக்குப் புரியவில்லை.

நாம் யாரையும் எதையும் செய்ய வற்புறுத்தவில்லை. நாம் ஓர் அரசியல் நிலையை எடுக்கவில்லை. நீங்கள் சுற்றுச்சூழல் தாக்கம் உள்ள ஒரு திட்டத்தைச் செய்ய ஆர்வம் கொண்டால், பன்னாட்டு நல்கைகளின் வழியாக நிதியை அணுகும் வாய்ப்பை இது உங்களுக்கு அளிக்கிறது. ரோட்டரியன்கள் செய்ய விரும்புகிறவற்றுக்கு நாம் பதிலளிக்கிறோம்: ரோட்டரியன்கள் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைக் கையாள விரும்புகிறார்கள்.



சுற்றுச்சூழல் ஏற்கெனவே உள்ள கவனப் பகுதிகளின் வழியாக, சுற்றுச் சூழலுக்கு நன்மை அளிக்கும் திட்டங்களுக்கு நிதியளிக்கும் பன்னாட்டு நல்கைகளை ரோட்டரி உறுப்பினர்களால் ஏற்கெனவே பயன்படுத்த இயன்றது. இதில் இப்போது என்ன புதிதாக மாறியுள்ளது?

சுற்றுச்சூழல் கவனப் பகுதியின் கீழ், ரோட்டரி உறுப்பினர்கள் இதுபோன்ற குறிப்பிட்ட முயற்சி களுக்காகப் பன்னாட்டு நல்கை நிதியளித்தலைப் பயன்படுத்தலாம்:

- வாழ்விடத்தை மீட்டல், உள்ளூர்த் தாவரங்களை நடுதல், ஆக்கிரமிக்கும் செடி, விலங்கு வகைகளை நீக்குதல்
- அருகிவரும் உயிரினங்களைப் பாதுகாத்தல், சட்ட விரோத மான காட்டு உயிர் விற்பனையைத் தடுத்தல்
- கூடுதல் மீன் பிடித்தல், மாசு, கடற்கரை அரிப்பைக் கையாளுதல்
- பாதுகாப்பு, வள மேலாண்மை யில் சமூகங்களுக்குக் கல்வி அளித்தல்
- சுற்றுச்சூழலுக்கு இதமான விவசாயம், நீடித்திருக்கும் மீன் பிடித்தலை ஆதரித்தல்
- வள மேலாண்மையில் பாரம்பரிய, உள்ளூர் அறிவின் பயன்பாட்டை முன்னிறுத்துதல்
- ஆற்றல் செயல்திறன் கொண்ட போக்குவரத்துக்கு மாறுதலை ஆதரித்தல்
- சுற்றுச்சூழல் நச்சுகளுக்கு வெளிப்படுதலைத் தடுத்தல்
- உணவு வீணாதலைக் குறைத்தல்

அனைத்துப் பன்னாட்டு நல்கைத் திட்டங்களைப்போல, சுற்றுச்சூழல் கவனப் பகுதியின்கீழ் வருகிறவற்றுக்கும் ஒரு சமூக மதிப்பீடு வேண்டும், அவை நீடித் திருப்பவையாக அமையவேண்டும். இதில் தகுதி பெறாத திட்டங்கள் சில: சமூக அழகுபடுத்தல் திட்டங்கள், ஒற்றை நிகழ்வுத் தூய்மைப்படுத் தல்கள், பரந்த வியூகத்தின் ஒரு பகுதியாக அமையாத மரம் நடல்கள், வெளிப் பொழுதுபோக்கு முன்னெடுப்புகள்.

சுற்றுச்சூழல் கவனப் பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் ஜூலை 1 முதல் பெறுக்கொள்ளப்படும். மேலும் தெரிந்துகொள்ள: rotary.org/environment.

© Rotary

வீணான பொருட்களைக் கையாள உதவும் 5Rகள்

ப்ரீதி மேஹரா

சிறிய மாற்றங்கள் பெரிய வேறுபாட்டைக் கொண்டுவருமா என்று நீங்கள் யோசிக்கலாம், ஆனால், உங்கள் வீட்டிலுள்ள குப்பைகளைச் சுற்றுச்சூழலுக்கு இதமான முறையில் கையாளவேண்டும் என்று விரும்பினால், இது உங்களுக்கு உதவும்.

இதற்கு நீங்கள் செய்யவேண்டிய தெல்லாம், உங்கள் அன்றாட வழக்கத்தில் 5Rகள் கொள்கையைச் செயல்படுத்தவேண்டும்.

அவை Rகள்: Refuse (மறுத்தல்), Reduce (குறைத்தல்), Reuse (திரும்பப் பயன்படுத்துதல்), Recycle (மறு சுழற்சி செய்தல்). மற்றும் R, Recover (மீட்டெடுத்தல்).

நான் என் வீட்டில் 4Rகள் திட்டத்தை எப்படித் தொடங்கினேன், தெரியுமா? மூன்று பச்சை அம்புகள் ஒன்றையொன்று துரத்தும் அந்தப் புகழ் பெற்ற மறுசுழற்சிச் சின்னத்தை பெரிய ஸ்டிக்கர் வடிவில் வாங்கி என்னுடைய ரெஃப்ரிஜிரேட்டரில் (குளிர்பதனப்பெட்டியில்) ஒட்டினேன். அதைப் பார்க்கும் போதெல்லாம், வீட்டில் ஒவ்வொரு பொருளும் தன்னுடைய பயன்பாட்டை முடித்த பிறகு, தொழில்நுட்ப மொழியில் சொல்வதென்றால், அந்தப் பொருளின் "வாழ்க்கை முடிந்தபிறகு" என்ன செய்யவேண்டும் என்பது நம் நினைவுக்கு வரும்.

எடுத்துக்காட்டாக, காலாவதித் தேதி முடிந்த உணவு, ஃப்யூஸ் ஆன பல்ப்கள், பழைய மின்கலன் (பேட்டரி)கள், பயன்படுத்தப்பட்ட தாள், வீணான அட்டைப் பெட்டி, பிளாஸ்டிக் பொதிகள், கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் பாத்திரங்கள், பழைய, உடைந்த சமையலறைப் பொருட்கள், பயன்படுத்தித் தேய்ந்த அமர்பொருட்கள்... இந்தப் பட்டியல் நீண்டுகொண்டேயிருக்கும்.

இவற்றை என்ன செய்யலாம் என்று தீர்மானிப்பதற்குச் சிறந்த வழி, 5Rகள் விதிமுறைகளைப் பயன்படுத்துவது தான். இதை வரிசையாகப் பயன்படுத்தினால் இன்னும் உதவியாக இருக்கும்.

முதலில், மறுத்தல், இதுதான் நல்ல தொடக்கத்தை உண்டாக்குகிறது. இன்னும் இயங்கிக்கொண்டிருக்கும் ஒன்றை மாற்றமாட்டேன் என்று நீங்கள் எப்போதும் மறுக்கலாம். சில நேரங்களில், பழையது பொன் போன்றது, அதைப் பழுதுபார்த்து விட்டால், இன்னோர் ஆண்டுக்கு உழைக்கும்.

உலகெங்கும் பழுது பார்க்கும் கடைகள் மீண்டும் சுறு சுறுப்பாகிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் நாம் பயன்படுத்தும் பொருட்களின் வாழ்க்கையைக் காக்கவும் நீட்டிக்கவும் நாம் முயலலாம், அதன்மூலம், திறனுள்ள ஒருவருக்கு வாழ் வாதாரம் கிடைக்கவும் இது உதவும்.

கடைக்காரருடைய பிளாஸிடிக் பையை ஏற்காதீர்கள்; பிளாஸ்டிக் அல்லது தெர்மகோல் பாத்திரங்களுக்குப்பதிலாக மட்கக்கூடிய இலைத் தட்டுகள், கிண்ணங்களைப் பயன்படுத்துங்கள், காகித ரசீதுகளை மறுத்துவிட்டு மின் ரசீதுகளைப் பெறுங்கள்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது Rகள்: குறைத்தல் மற்றும் திரும்பப் பயன்படுத்துதல். கடினமான, எதார்த்தத்தில் பயன்படுத்தக்கூடிய, நீண்ட உத்தரவாதக் காலகட்டம் கொண்ட, பழுதுபார்க்கக் கூடிய பொருட்களை வாங்குங்கள். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு மடிக்கணினி

அல்லது குளிர்வூட்டும் கருவியை வாங்குகிறீர்கள் என்றால், மிகக் கூடுதலான உத்தரவாதக் காலகட்டம் உள்ளதைத் தேர்ந்தெடுங்கள், அதற்காகத் தொடக்கத்தில் சிறிது கூடுதலாகப் பணம் செலுத்தினாலும் பரவாயில்லை.

அதேபோல், எப்போதும் மறுபடி மின்னேற்றக்கூடிய மின்கலன்களை வாங்குங்கள், பிளக்குகள், வயர்களை மீண்டும் பயன்படுத்துவதற்காகச் சேமித்துவையுங்கள். தனிப்பட்ட பொருட்களைப் பொறுத்தவரை, பெரிய அளவுப் பாட்டில்களை வாங்குங்கள், விலை குறைவான,

தெருவோர ஆடைகளை வாங்கினால், சில நாட்களில் அவற்றைத் தூக்கி வீசவேண்டியிருக்கும். ஆகவே, நீண்ட நாள் உழைக்கும் என்று தெரிந்த பிராண்ட்களில் ஆடைகளை வாங்குங்கள்.

மறுசுழற்சிப் பழக்கத்தைப் பின்பற்றினால் பணமும் மிச்சமாகும், அத்துடன், உலகுக்கு நீங்கள் தரும் நல்ல பரிசு அது.

மீண்டும் பயன்படுத்துதல் என்பது கற்பனையைத் தூண்டும் விஷயமாகவும் அமையலாம். தேவையில்லாத சட்டைகளைக் கொண்டு குஷன் செய்யலாம், உடைந்த குவளைகளில் பல் தேய்க்கும் பிரஷ் அல்லது பேனாக்களைப் போட்டுவைக்கலாம், மெலிதான பாட்டில்களில் செடி வளர்க்கலாம், அவற்றின்மீது வண்ணம் தீட்டலாம், பயன்படாத ஒரு கிடாரைப் புதுமையான புத்தக அலமாரியாக மாற்றலாம்... உங்கள் கற்பனையைத் தூண்டுங்கள், ஒரு பொருளைக் குப்பையில் எறியுமுன், அதை வேறு எதற்காவது பயன்படுத்தலாமா என்று சிந்தியுங்கள்.

சமையலறைக் குப்பைகளையும் வீணாக்கவேண்டியதில்லை. அவற்றைக் கொண்டு உரம் தயாரிக்கலாம்.

நான்காவது R, மறுசுழற்சி செய்தல். மற்ற எல்லாம் சாத்திய மில்லை எனும்போது, அந்தப் பொருள் உண்மையில் “தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொண்டு விட்டது” என்று நீங்கள் எண்ணும் போது, இதைப் பயன்படுத்தலாம்.

இப்போது, சில நகரங்களில் முறையான மறுசுழற்சி மையங்களும் திட்டமிடப்படுகின்றன. அதுவரை, பழைய பொருட்களை வாங்குவோரிடம் உங்களுடைய பழைய பொருட்களை விற்கலாம். அவர்கள் பொதுவாக இவற்றுக்கு ஒரு நிலையான விலையை அளிப்பார்கள், நீங்கள் வீண் என்று நினைக்கும் பொருட்கள் அவர்களுக்கு வாழ்வாதாரமாக அமையும்.

ஆனால் ஒன்று, பழைய பொருட்களை வாங்குகிறவரை அழைக்குமுன், அல்லது, பழைய பொருட்களை வாங்கும் ஒரு கடைக்குச் செல்லுமுன், உங்களிடமுள்ள பழைய பொருட்களைப் பல வகைகளாகப் பிரியுங்கள்: காகிதம், அட்டைப் பெட்டி, பாட்டில்கள், டின்கள் என்று பிரித்து வையுங்கள்.

நிறைவாக, ஐந்தாவது R, மீட்டெடுத்தல். பொதுவாக, மறுசுழற்சி செய்கிறவர்கள்தான் மீட்டெடுப்பார்கள், அதன் மூலம் பலன் பெறுவார்கள். ஆனால், ஒரு சுழல் பொருளாதாரத்தை அமைப்பதற்கு அது முக்கியம். நிறுவனங்கள் தங்கள் பொருட்களை நுகர்வோரிடமிருந்து வாங்கி, அவற்றின் வாழ்க்கை முடிவைச் செயல்திறனுடன் கையாண்டால், மீட்டெடுக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி அவர்கள் புதிய பொருட்களை உருவாக்கினால், நாம் இன்னும் மேம்பட்ட ஓர் உலகில் வாழ்வோம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

நல்ல செய்தி கொண்டுவரும் பூம் பூம்மாடு!

ஜெய்ஸ்ரீ

தீபாவளி, பொங்கல் அல்லது தமிழ்ப் புத்தாண்டு என எந்த பண்டிகை நாட்களாக இருந்தாலும் பூம் பூம்மாடு என்பது தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கொண்டாட்டங்களில் ஒரு பகுதியாகும். இருப்பினும் சமீபகாலமாக இது நகர்ப்புறங்களில் அரிதாகி வருகிறது. வண்ண வண்ண ஆடைகளால் போர்த்தப்பட்ட காளை மாட்டுடன், ஒருவர் நாதஸ்வரம், மேளம் வாசித்தப்படி வரும் சத்தம் கேட்டவுடனேயே குழந்தைகள் உற்சாகத்துடன் துள்ளிக்குதித்து வீட்டின் வாசலை நோக்கி ஓடுவார்கள். அந்த மனிதரும் காளை மாட்டுடன் வீடுவீடாகச் சென்று பிச்சை கேட்பார். பெரும்பாலும் துணிமணிகள் குறிப்பாக புடவை, வேஷ்டி அல்லது சில சமயங்களில் பெட்ஷீட் ஆகியவற்றை வாங்கிச் செல்வார். சிலர் அவருக்கு அரிசியும் வழங்குவார்கள்.

சில சமயங்களில் குழந்தைகள் வீட்டில் படுத்தினால் (தொந்தரவு செய்தால்) அம்மா அவர்களிடம், உன்னை பூம் பூம் மாட்டுக் காரனிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன் என்று பயமுறுத்து வதும் உண்டு. காளை மாடு மற்றும் தலையில் முண்டாசு கட்டி, பெட்ஷீட்டை போர்த்தியபடி வரும் மனிதர்களைக் கண்டால் குழந்தைகள் குலை நடுக்கத்தில் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொள்வதும் உண்டு. எந்த ஒரு விஷயத்திலும் தனது கருத்தை தைரியமாக வெளிப்படுத்தாமல் எதற்கெடுத்தாலும் தலையாட்டும் ஒருவரை பூம் பூம்மாடு என்றும் சொல்வதுண்டு.

இந்த ஆண்டு பொங்கல் தினத் தன்று என் வீட்டிற்கு வந்த இந்த விருந்தனர்களை வரவேற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நாதஸ்வரம் வாசித்தப்படி, மேளம் கொட்டிய படி வந்த அந்த பூம்பூம் மாட்டுக் காரரை பார்க்க அரை டஜன் வாழைப் பழங்களை எடுத்துக்கொண்டு வாசலுக்கு நான் ஓடினேன். இந்த நல்ல நாளில் மாட்டுக்கு வாழைப்பழம் கொடுத்தால் நல்லது என்பதால் அதைச் செய்தேன். நான் வாழைப்பழம் கொடுத்ததும் அந்த மாடு அதன் உரிமையாளர் நரசிம்மனை பார்த்தது, உடனே அவர், மாட்டின் பெயரைக் கூறி ‘அம்மாவுக்கு பதவி உயர்வு இருக்கா கோபாலகிருஷ்ணா?’ என்று கேட்க, அது பலமாக தலையை ஆட்டியது. அதன் கொம்புகள் மற்றும் கழுத்தில் கட்டப்பட்ட மணிகளும் ஒலித்து அதை ஆமோதித்தது. இதையடுத்து நான், என் மகள் என்னைப் போலவே பத்திரிகையாளராக வருவாரா? என்று மற்றொரு கேள்வியைக் கேட்டேன். அதற்கு அது தலையை பலமாக ஆட்டி ஆமோதித்தது. அவள் வெளிநாடு

நரசிம்மன் தன் காளை கோபால கிருஷ்ணனுடன்.



செல்வாளா என்றதற்கு அதற்கு சாத்தியம் இல்லை என்பது போல் மாடு எதிர்மறையாக தலையை ஆட்டியது.

கையில் கொண்டு வந்த அரிசியை நரசிம்மனின் (பூம் பூம்மாட்டுக் காரர்) பையில் போட்டு விட்டு, ஒரு போர்வையை மாட்டின் மீது போர்த்திவிட்டு அவரிடம் பேச்சு கொடுத்தேன். இந்த தொழிலில் அவர் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. இந்த தொழில் என்னுடன் முடிந்துவிடும். எனது மகனுக்கு இதில் விருப்பம் இல்லை. அவனுக்கு அலுவலகம் சென்று வேலை செய்வதிலேயே விருப்பம் என்றார் நரசிம்மன். இந்த சமூகத்தினர் (பழங்குடியினர்) பெரும்பாலும் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சென்னை போன்ற இடங்களில் நகரத்துக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் வசிக்கிறார்கள். மாதத்தில் 25 நாட்கள், தங்கள் குக்கிராமத்திலிருந்து காளை மாடுகளுடன் வெளியே வந்து நகர்ப்புறங்களில் உள்ள வீடுகளுக்குச் சென்று பிச்சை கேட்கிறார்கள். முடிந்தவரை பிச்சை எடுத்து சம்பாதித்துவிட்டு அதை வைத்து ஐந்து அல்லது ஆறு நாட்கள் குடும்பத்துடன் இருப்பார்கள். பின்னர் மீண்டும் அடுத்த பயணத்துக்காக வெளியில் கிளம்பிவிடுவார்கள்.

இப்போது இவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. நகரங்களில் உள்ள மக்களுக்கு ஏராளமான பொழுதுபோக்கு அம்ச ங்கள் வந்துவிட்ட நிலையில், மக்களுக்கு இதில் ஆர்வம் இல்லை. எங்களுக்கு இப்போது போதிய வருமானம் இல்லை. ஆனால், எங்களுக்கு வேறு எந்த தொழிலும் தெரியாது என்கிறார் நரசிம்மன்.

தங்கள் வேண்டுதல் நிறை வேறியதை அடுத்து பக்தர்கள் கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கோயில்களுக்கு மாடுகளை நன்கொடையாக கொடுக்கிறார்கள். அதை சில நாட்களுக்குப் பிறகு கோவில் நிர்வாகத்தினர் இந்த சமூகத்தினரிடம் கொடுத்துவிடுகின்றனர். எங்களின் பூம் பூம்மாடு தலையசைத்து வாழ்த்து தெரிவிக்கும்போது அதை நல்லசகுனமாக சிலர் பார்க்கிறார்கள். அந்த வகையில் எங்களுக்கு மகிழ்ச்சிதான் என்று புன்னகையுடன் கூறுகிறார் நரசிம்மன். உடனே கோபாலகிருஷ்ணனும் (பூம் பூம்மாடு) நன்றியுடன் தலையசைக்கிறது.■

TRF உதவியுடன் நற்பணி

ஜெய்ப்பூர் மருத்துவமனையில் ரோட்டரி ''கோவிட்'' சிகிச்சைமையம்

ரோட்டரி செய்திக்குழு

தொற்றுக்காலத்தில் சர்வதேச மானிய உதவிக்கு விரைவாக ஒப்புதல் கிடைத்ததன் மூலம் RID 3054க்கு உட்பட்ட RC ஜெய்ப்பூர் ரவுண்ட் டவுன், ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூர் மருத்துவ மனையில் கோவிட் சிகிச்சை வார்டு அமைத்துள்ளது. அமெரிக்காவின் ரோட்டரி மாவட்டம் 6900க்கு உட்பட்ட எமோரி-ட்ரூயிட் ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் கூட்டுமுயற்சியுடன் 69,500 டாலர் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் ராஜஸ்தான் அரசு சிறப்பாக செயல்பட்டு வந்தாலும், கோவிட் படுக்கைகள் நிரம்பிவிட்ட காரணத்தால் பெரும்பாலான நோயாளிகள் சிகிச்சைக் காக தனியார் மருத்துவ மனையைத் தேடிச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. தனியார் மருத்துவமனைகள் கோவிட் சிகிச்சைக்காக அதிக கட்டணம் வசூலித்து வந்தாலும் நோயாளிகளுக்கு வேறு வழியில்லை. இந்தச் சூழலில் லாபநோக்கில் இல்லாமல் அல்லது அரசு மருத்துவமனைகளில் வசூலிக்கும் கட்டணங்களை வசூலிக்கும் மருத்துவ மனைகளை நாங்கள் தேடிவந்தோம். இந்த மருத்துவமனை அதற்கு ஒப்புக்கொண்டது என்றார் இத்திட்டத்தின் முதன்மை தொடர்பாளரான முன்னாள் மாவட்ட ஆளுநர் ரமேஷ் அகர்வால்.

கோவிட் தொற்று காலத்தில் இந்த மையம் 1,000த்துக்கும் மேற்பட்ட நோயாளிகளை உள் நோயாளிகளாக அனுமதித்தும் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட 3,000த்துக்கும் மேற்பட நோயாளிகளுக்கும் சிகிச்சை அளித்துள்ளது என்றார் அகர்வால். முதல் ஐந்து மாதங்களில் 100 நோயாளிகள் கோவிட் வார்டுக்கு வருகைதந்தனர். 2020ம் ஆண்டு செப்டம்பர் வரை 550 நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். எங்கள் சங்க உறுப்பினர்கள், குறிப்பாக மருத்துவர்கள் அடிக்கடி வார்டுக்குச் சென்று பார்வையிடுவதுடன் சிகிச்சை அளிக்கும் மருத்து வர்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளனர் என்றும் அகர்வால் மேலும் குறிப்பிட்டார்.■

இசையும் & இனிமையும்

சங்கீத சாகரம் பீம்சென் ஜோஷி!

V ராம்நாராயண்

அல்லா பாட விரும்பினால், அது பீம்சென் ஜோஷியின் குரலில்தான் இருக்கும் என்று ஒரு பாகிஸ்தான் இசை விமர்சகர், மறைந்த கிரான கரானா இசை மேதைக்கு மரியாத செலுத் தியதை ஜோஷியின் சுயசரிதையை எழுதிய டாக்டர் நாகராஜ ராவ் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு முறையும் அந்த மேதை பிருந்தாவணி சாரங்கில் “தும் ரப்”, “தும் சாஹிப்” என்று பாடும்போது ஈஸ்வர் அல்லது அல்லாவோ மெய்மறந்து அதை கேட்பதை யாராலும் தடுக்க முடியாது எனில் அந்த பாடகரின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள முடியும்.

மறைந்த பீம்சென் ஜோஷி, பணத்துக்காக பாடுபவர், அவர் ஓர் இசைக்கலைஞர் அல்ல என்ற தவறான எண்ணத்தில் ஹிந்துஸ்தானி இசை உலகிற்கு புதியவரான ஒருவர், ஜோஷியின் கச்சேரி செய்யும் இடத்தை விட்டு வெளியேறினால் அவரை மன்னித்துவிடலாம். நம் நாட்டின் பாரம்பரிய இசை முறைகளில் முக்கியமான ஹிந்துஸ்தானி இசையில் நிபுணராக கொடிகட்டி பறந்தவர் பீம்சென் ஜோஷி. சாஸ்திரிய முறையிலும், அதே சமயமத்தில் நவீன முறையிலும் வித்தகராகத் திகழ்ந்தவர் அவர்.

ஒரு பாடலை அவர் பாடும் விதம், அதில் உள்ள ஆழம், கணீரென்ற குரல் மற்றும் மென்மையான குரல் மற்றும் பிசிறு இல்லாமல் ஸ்வரம் பாடும் திறன், லய கட்டுப்பாடு ஆகியவை அவரை தன்னிகரில்லாத இசை மேதையாக உருவெடுக்க வைத்தது. பாட்டியாலா, ஆக்ரா, குவாலியர் என பல்வேறு நகரங்களில் இருந்த குருக்களிடமிருந்து கற்றவற்றை இணைத்து தனக்கே உரித்த பாணியில் கரானாவை பாடுவதில் அவர் வல்லவர்.

பீம்சென் ஜோஷியின் இசையை பின்பற்றுபவர்களிடம் அவரின் குரல் எதிரொலிப்பதை பார்க்கலாம். ஆமிர்கான் மற்றும் டி.வி. பலுஸ்கரிடம் அவரது குரலின் தாக்கத்தை காணமுடிந்தது. உள்ளரங்கமாக இருந்தாலும் சரி, திறந்தவெளி அரங்கமாக இருந்தாலும் சரி பீம்செனின் பாடலை கடைசி வரிசையில் அமர்ந்திருக்கும் ரசிகர்கள் கூட தெளிவாகக் கேட்க முடியும். ரசிகர்களை தனது பாட்டின் மூலம்



கட்டிப்போடும் சக்தி அவரிடம் இருந்தது.

கடந்த நூற்றாண்டில், அதாவது 70களிலும் 80களிலும் ஹிந்துஸ்தானி இசையில் ஜோஷி வித்தகராக இருந்தார். எனினும் அவர் குடிப்பழக்கத்துக்கு அடிமையானதால், அவரது இசைவாழ்க்கையில் சிறிது தொய்வு ஏற்பட்டது. ஆனாலும், அதிர்ஷ்டவசமாக பின்னடைவிலிருந்து அவர் மீண்டு பக்தி மார்க்கத்தில் சரணடைந்தார்.

பீம்சென் ஜோஷி, 1922ம் வருடம், பிப்ரவரி 4ம் தேதி, கர்நாடக மாநிலம், கடாக்கில், கன்னடமொழி பேசும் பிராமண குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை குருராஜ் ஜோஷி, உள்ளூரில் உள்ள பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிவந்தார். பீம்சென் நன்கு படித்து ஒரு என்ஜினீயராகவோ அல்லது மருத்துவராக வரவேண்டும் என்று தந்தை விரும்பினார். ஆனால், சிறு வயதில் இருந்தே ஜோஷி இசையில் நாட்டம் கொண்டிருந்தார். மேலும் ஹார்மோனியம், தம்புரா கருவிகள் மீது அவருக்கு ஈர்ப்பு இருந்தது. எங்கு இசை நிகழ்ச்சி கள் நடந்தாலும் சென்று கேட்க ஆரம்பித்தார். தம்புராவையும், ஹார்மோனியத்தையும் சுமந்து கொண்டு இசைக்கலைஞர்களுடன் செல்வார். அவர்கள் தங்குமிடத்தில் இவரும் படுத்து உறங்கிவிடுவார். ஒரு கட்டத்தில் இவரைக் காணாமல் போலீஸில் புகார் கொடுத்து கச்சேரிக் குழுவினருடன் இருப்பதைக் கண்டுபிடித்து மீட்டனர்.

பண்டிட் பீம்சென் ஜோஷி ஹிந்துஸ்தானி பாடகர் கங்குபாய் ஹங்கலுடன்.

புகழ்பெற்ற பாடகர் இனாயத்கானின் சீடர் சன்னப்பாவிடம் இசை பயில பீம்சென் சேர்ந்தார். சில கால பயிற்சிக்குப் பின், மும்பை சென்று சியாமாச்சார்ய ஜோஷியிடம் சீடராகச் சேர்ந்தார். ஒருமுறை சியாமாச்சார்ய ஜோஷி, ஹரிதாச மஹிபதி தாசரின் பாடல்களை ஒலிப்பதிவு செய்ய முயன்ற போது தீடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் அவரால் இரண்டு பாடல்களை மட்டுமே ஒலிப்பதிவு செய்ய முடிந்தது. மீதிப் பாடலை பீம்சென் ஜோஷியை பாடச் சொல்லி விட்டார். இது பீம்சென்னுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

சிறுவயதில் தும்ரி இசையில் அமைந்த பாடல்களை கேட்டு மகிழ்ந்த பீம்சென், அதுபோன்ற பாடல்களை பாடவேண்டும் என்று ஆர்வம் கொண்டார். அதேபோல பண்டிட் சவாய் கந்தர்வா என்ற புகழ்பெற்ற இசை க்கலைஞர் இவரது ஊருக்கு அருகே தார்வாடில் கச்சேரி செய்வதை அறிந்து ஜோஷி தார்வாட் சென்றார். அங்கிருந்து கச்சேரிக்குழுவினர் புனே செல்வதை அறிந்து அவரும் புனே சென்றார். பின்னர் அங்கிருந்து குவாலியர் சென்றார். அங்கு குவாலியர் மகாராஜா நடத்திவந்த மாத்வா இசைப்பள்ளியில் சேர்ந்தார். பின்னர் குவாலியரில் உஸ்தாத் ஹபீஸ் அலிகான் என்ற இசைமேதையிடம் பயின்றார்.

குருவைத் தேடி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அலைந்து திரிந்தார். பெரும்பாலும் டிக்கெட் இல்லாமல் ரயிலில் பயணம் செய்தார்.

தம்புராவையும், ஹார்மோனியத்தையும் சுமந்து கொண்டு இசைக்கலைஞர்களுடன் செல்வார். ஒரு கட்டத்தில் இவரைக் காணாமல் போலீஸில் புகார் கொடுத்து கச்சேரிக் குழுவினருடன் இருப்பதைக் கண்டுபிடித்து மீட்டனர்.

ரயிலில் சென்றபோது கிராமஃபோன் பதிவுகளிலிருந்து தாம் கற்றுக் கொண்ட பாடல்களைப் பாடி சக பயணிகளை மகிழ்வித்தார்.

பீம்சென் பின்னர் கரக்பூர், கொல்கத்தா, தில்லி மற்றும் ஜலந்தர் ஆகிய இடங்களுக்குச் சென்று சிறந்த பாடர்களிடம் இசை கற்றுக்கொள்ள முயன்றார். அவரது தொடக்ககால வழிகாட்டிகளில் ஒருவர் குவாலியரைச் சேர்ந்த சரோட் மாஸ்டர் ஹபீஸ் அலிகான். பிரபல திரைப்பட நட்சத்திரக் கலைஞர் பஹடி சன்யால் அவரை வெள்ளித் திரையில் நடிப்பதற்கும் பாடுவதற்கும் பரிந்துரைக்க முயன்றார். ஆனால், ஜோஷிக்கு இசையில் மட்டுமே ஆர்வம் இருந்தது. நல்லவேளையாக நடிப்பை அவர் தொழிலாக தேர்ந்தெடுக்க வில்லை. ஜலந்தரில் ஹரிவல்லப் திருவிழாவுக்குச் சென்றபோது அவருக்கு விநாயக்ராவ் பட்வர்தன் என்கிற கயாகி பாடகருடன் தொடர்பு ஏற்பட்டது. அவர், கடாக் அருகில் உள்ள குண்ட்கோல் என்னும் இடத்தில் சிறந்த காயல் பாடகரான ராம்பாவ் குண்ட்கோல்கர் என்பவரை சந்திக்குமாறு பரிந்துரைத்தார். சவாய் கந்தர்வா என்று அழைக்கப்படும் அவரிடம் ஜோஷி இசை பயிற்சியைத் தொடங்கினார். அங்கு காயல் பாடல்களை பாடுவதற்கான அடிப்படைகளை கற்றுக்கொண்டார். பின்னர், தனது தந்தைக்கு ஓர் கடிதம் எழுதினார். அதில், சவாய் கந்தர்வாவிடம் இசைப்படிக்க விருப்பம் உள்ளதாகவும், அதற்கு அனுமதி அளித்தால் வீடு திரும்புவதாகவும் தெரிவித்திருந்தார். மகன் வீடு திரும்புவதை கண்டு பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்து அவரது நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டார்கள்.

தனது மகன் முறையாகப் படித்து விட்டு ஒரு நல்ல வேலைக்குச் செல்லவேண்டும் என்று தந்தை குருராஜ் ஜோஷி விரும்பினாலும், இசைமீது அவருக்கு இருந்த ஆர்வத்தை

> குருவைத் தேடி அலைந்து திரிந்தார். பெரும்பாலும் டிக்கெட் இல்லாமல் ரயிலில் பயணம் செய்தார். கிராமஃபோன் பதிவுகளிலிருந்து தாம் கற்றுக் கொண்ட பாடல்களைப் பாடி சக பயணிகளை மகிழ்வித்தார்.

தபலா மேதை உஸ்தாத் அல்லா ராக்கா கான் அவர்களுடன் பண்டிட் ஜோஷி.

அறிந்து, பீம்சென் ஜோஷியை சவாய் கந்தர்வாவிடம் அழைத்துச் சென்றனர். ஜோஷியின் குரல் வளத்தை அறிய சில சோதனைகளை நடத்திய பின் அவருக்கு இசை கற்பிக்க சவாய் கந்தர்வா ஒப்புக்கொண்டார். மேலும் இசை கற்பிக்க மாதம் ரூ.25 கட்டணம் தர வேண்டும் என வலியுறுத்தினார். இது ஜோஷியின் தந்தைக்கு ஒரு சுமையாகவே இருந்தது. ஆனாலும் ஜோஷியுடன் ஹார்மோனியம், தப்லா வாசிப்பவர்களுக்கும் அவர் பணம் கொடுத்தார்.

ஜோஷி, சவாய் கந்தர்வாவிடம் ஐந்து ஆண்டுகள் கடுமை யான பயிற்சிளை மேற் கொண்டார். சரியாக பாடாத சமயங்களில் அவருக்கு தண்டனையும் வழங்கப்பட்டது. அதாவது குரு-சிஷ்ய பரம்பரைப்படி பயிற்சி நடந்தது. ஜோஷியிடம் கண்டிப்பு காட்டினாலும் அவர் மீது சவாய் தனி கவனம் செலுத்திவந்தார். காலையில் தோடி, பிற்பகலில் மூல்தானி, மாலையில் பூரியா என ராகங்களை திட்டமிட்டு கற்பித்தார். கங்குபாய் ஹங்கல், பிரோஸ் தஸ்தூர் ஆகியோரும் கந்தர்வாவின் சிஷ்யர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஒருமுறை கந்தர்வா கோபத்தில் அடித்ததில் ஜோஷியின் முகத்தில் தழும்பு ஏற்பட்டது. ஆனாலும், அர்ப் பணிப்பு உணர்வுடன் ஜோஷி, ராகங்களை கற்றுக்கொண்டார். அவரது இசையில் குறிப்பிடத்தக்க மாற்றங் கள் ஏற்பட்டன. சவாய் கந்தர்வா, இசை கச்சேரிக்காக சுற்றுப்பயணம் மேற்கொண்ட போதெல்லாம் ஜோஷியும் உடன் சென்றார். அப்போது இந்தியாவின் பிரபலமான இசைக் கலைஞர்களின் பாடல்களை கேட்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. 1946 ஜனவரியில் சவாய் கந்தர்வாவின் 60வது பிறந்தநாளை முன்னிட்டு புனேவில் அவரது இசை நிகிழச்சி நடைபெற்றது. அதுதான் அவர் பின்னாளில் பிரபலமான இசைக்லைஞராவதற்கு திருப்புமுனையாக இருந்தது.

ஹிந்துஸ்தானி இசையில் ஏராளமான ராகங்கள் இருந்த போதிலும் ஜோஷி அவற்றில் குறிப்பிட்ட ராகங்களை மட்டும் தேர்ந்தெடுத்து நேர்த்தியாக வழங்கினார். அவரது “தோடி”, “தர்பாரி” மற்றும் “மியான் கி மல்ஹர்” ராகங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. ஆனால், அவரின் “கௌட் சாரங்”, “சுத்த சாரங்”, “பிருந்தாவணி சாரங்”, “சுத்த கல்யாண்”,

பண்டிட் பீம்சென் ஜோஷி மனைவி வத்சலா மற்றும் Dr கங்குபாய் ஹங்கல் அவர்களுடன்.

கர்நாடிக் இசைக்கலைஞர் M பாலமுரளிகிருஷ்ணாவுடன்.

“ஜோகியா” மற்றும் “பைரவி”யில் அவரது தும்ரிக்கள் கேட்பதற்கு அருமையாக இருக்கும். மேலும் அவர் சில ராகங்களை ஒன்று சேர்த்து புதிய ராகங்களை உருவாக்கினார்.

ஹிந்துஸ்தானி இசையில் வடக்கு மற்றும் தெற்கில் சிறந்தவற்றை தேர்ந்தெடுத்து அதை கலவையாக வழங்கினார். ரசிகர்களுக்கு விருப்ப மானவற்றை அவர் பாடினார். பிசிறு இல்லாத அவரின் குரல் வளம் அவரது இசைக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் இருந்தது. அவரது சந்த்வாணியும், தசர்பாஸும் கடவுள் மீதும் கன்னட மொழி மீதும் அவருக்கு இருந்த ஈடுபாட்டை விளக்கும் வகையில் அமைந்திருந்தது. பாலமுரளி கிருஷ்ணா வுடன் இணைந்து அவர் ஜுகல்பந்தி நிகழ்ச்சி களும் நடத்தினார். அது அவரது ஆர்வத்தினால் ஏற்பட்டது. ஆனாலும் கர்நாடக இசையில் வடக்கு-தெற்கு என்ற பிளவை ஏற்படுத்தவில்லை.

ஹிந்தி, மராத்தி, கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் இவர் தேசபக்திப் பாடல்களை பாடி இசைத்தட்டு களையும் வெளி யிட்டுள்ளார். பல ஹிந்தி, மராத்தி, கன்னட திரைப்படங்களில் பின்னணி பாடகராகப் பாடியுள்ளார். கர்நாடக சங்கீதம், சாஸ்திரீய சங்கீதம் தெரியாதவர்கள் கூட அவரது இசையை கேட்டு ரசித்தனர். மாதவ் குடி அவரது சிறந்த சீடராக இருந்தார். ஆனாலும் அவரால், ஜோஷி அளவுக்கு புகழ் பெற முடியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக சிகரம் வைத்தாற்போல் 1988ல் மிலே சுர் மேரா தும்ஹாரா தேசபக்திப் பாடலை ஏராளமான இசைக்கலைஞர்களுடன் சேர்ந்து பாடினார். இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டையும், கலாசாரத்தின் பன்முகத் தன்மையை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருந்த அந்த பாடல் மிகவும் பிரபலமானது. மேலும் சுதந்திரப் பொன்விழா ஆண்டில் A R ரஹ்மான் தயாரித்த ஜன கண மன ஆல்பத்திலும் ஜோஷி இடம்பெற்றார். நாடாளுமன்றத்தில் வந்தேமாதரம் பாடலை பாடச் சொல்லி அரசு இவரை கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

பீம்சென் ஜோஷி, இரண்டு முறை திருமணம் செய்து கொண்டார். அப்போது பலதார மணத்தை தடுக்க சட்டம் கொண்டு வரப்படவில்லை. சுனந்தா, வத்சலா என்ற இரு மனைவிகள் மூலம் அவருக்கு குழந்தைகள் பிறந்தன.

ஹிந்துஸ்தானி இசை உலகில் சுமார் 40 ஆண்டுகாலம் கோலோச்சி வந்த பீம்சென் ஜோஷிக்கு, 2008ம் ஆண்டு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. உஸ்தாத் இனாயத் கான் அறக்கட்டளை விருது (2002), பத்ம விபூஷண் (1999), ஹெச்எம்வியின் பிளாட்டினம் டிஸ்க் விருது (1986), பத்ம பூஷண் (1985), சங்கீதநாடக அகாதெமி விருது (1976) மற்றும் பத்மஷ்ரீ (1972) உள்ளிட்ட விருதுகள் குறிப்பிடத்தக்கவை.■

ஒருமுறை கந்தர்வா கோபத்தில் அடித்ததில் ஜோஷியின் முகத்தில் தழும்பு ஏற்பட்டது. ஆனாலும், அர்ப்பணிப்பு உணர்வுடன் ஜோஷி, ராகங்களை கற்றுக்கொண்டார்.

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோராண்டும்

ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வோராண்டும் ஆண்டு நிதிக்கு ஒரு தனிப்பட்ட பரிசை வழங்கவேண்டும். ஆண்டு நிதிதான் TRF செயல்பாடுகளுக்கான நிதிகளுக்கு முதன்மை மூலம். EREY சிற்றேட்டை இங்கு தரவிறக்கம் செய்யலாம்: *https://my.rotary.org/en/document/every-rotarian-every-year-brochure*

ஒவ்வோராண்டும், EREYல் மிகச் சிறந்த வழங்கலைச் சாதிக்கும் சங்கங்களுக்கு, 100% EREY Club என்ற பதாகை வழங்கப்படுகிறது.

Major Donor அங்கீகாரம்

மொத்தம் $10,000 வழங்கியுள்ள தனி நபர்கள் அல்லது தம்பதிகளை TRF அங்கீகரிக்கிறது. இந்த அங்கீகரிப்பு நிலையைத் தனி நபர் பங்களிப்புகளின் மூலம் மட்டும் தான் எட்டலாம், அங்கீகரிப்புப் புள்ளிகளின் வழியாக எட்ட இயலாது. இவர்கள் ஒவ்வொரு புதிய அங்கீகரிப்பு நிலையிலும் இந்தப் பரிசை நினைவு கூரும் வகையில் படிக அங்கீகரிப்பு பின்களை பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கலாம்.

நிலை வரம்புகள்: நிலை 1: $10,000 முதல் $24,999 வரை; நிலை 2: $25,000 முதல் $49,999 வரை; நிலை 3: $50,000 முதல் $99,999 வரை; நிலை 4: $100,000 முதல் $249,999 வரை

CSR இந்தியா நல்கைகள்

அறங்காவலர்களால் அங்கீகரிக்கப் பட்ட CSR இந்தியா நல்கை மாதிரி ஜூலை 1, 2021இலிருந்து செயல் படுத்தப்படும். இதன் முக்கிய அம்சங்களில் சில:

- குறைந்தபட்ச CSR பங்களிப்பு $21,000 ஆகும் (நிர்வாகச் செலவுகளை ஈடுசெய்வதற்கான 5 சதவிகிதக் கூடுதல் பங்களிப்பு உள்பட); RFக்கு அனுப்பப் பட்டால், ஆதரிப்போர் ரொக்கப் பங்களிப்பு களையும் (நிர்வாகச் செலவுகளை ஈடுசெய்வதற்கான 5 சதவிகிதக் கூடுதல் பங்களிப்பு உள்பட) சேர்க்கலாம்.

மாவட்டங்கள் மாவட்ட நல்கைகளுக்கு விண்ணப்பம் செய்யும் போது, தங்களுடைய மாவட்ட நல்கையின் பகுதிகளைக் குறிப்பிட்ட CSR இந்தியா நல்கைகளை மேம்படுத்துவதற்கு நியமிக்கலாம். TRF உலக நிதியிலிருந்து பொருந்தும் நிதிகளை வழங்காது. CSR இந்தியா நல்கைகள் விண்ணப்பம் மின் அங்கீகாரம் பெற்றபிறகு, பெருநிறுவனங்கள் CSR பணம் செலுத்தலாம்; நல்கை அறிக்கையிடல் மாற்றமின்றித் தொடரும்.

ஜூன் 30, 2021இலிருந்து, CSR நிதிகளைப் பயன்படுத்தும் CSR வெள்ளோட்டப் பன்னாட்டு நல்கை விண்ணப்பங்களைப் பெறுவதை அறக்கட்டளை நிறுத்திவிடும்.

பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் ஜனவரி 22, 2021 தேதியிட்ட CSR கொள்கைத் திருத்த விதிமுறைகள் வெளி யிட்டுள்ளது. இந்தச் சுற்றறிக் கையை இங்கு முழுமையாகப் படிக்கலாம்: https://www.mca.gov.in/Ministry/pdf/CSRAmendmentRules_22012021.pdf.■

Rotary PEOPLE OF ACTION

தோனே-யில் ரோட்டரி பொதுக் கழிப்பறைகள்

ரோட்டரி செய்திக்குழு

RC தோனே, RID 3160, அந்நகரின் மையத்தில் கட்டியுள்ள பொதுக் கழிப்பறைக்கு மக்கள் வந்து செல்கிறார்கள். ஆகவே, இந்த வசதி மக்களுக்கு நன்கு பயன்படும் என்றார் சங்கத் தலைவர் சங்கர் கௌட். ரூ.8 லட்சம் செலவில் கட்டப்பட்ட இந்தத் தூய்மைத் தொகுதியை DG B சின்னப்ப ரெட்டி மற்றும் நகராட்சி ஆணையர் KLN ரெட்டி ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

இச்சங்கம் உள்ளூர்ப் பூங்கா ஒன்றில் ரூ.2 லட்சம் செலவில் 25 காங்க்ரீட் பெஞ்ச் இருக்கைகளையும் நிறுவியுள்ளது. சங்க உறுப்பினர் ராஜையா கௌட் ஆதரவில், ரூ.7 லட்சம் செலவில் அமரர் ஊர்தி ஒன்றும் சமூகத்துக்கு வழங்கப்பட்டது.■

Wordsworld

My friends and other animals

Sandhya Rao

It's not just humans who make history, you know

For a long time, when I pushed open the curtains in the morning, I saw a small white cat sitting curled up beneath the coconut tree, staring intently at me, almost as though we had an 'otherly' connection. Or is it earthly? My son's friend, for instance, is married into a conservative family, but they adore dogs. They have two or three pet canines, and the arrival of each, as a puppy, is greeted with a visit to the temple and special pujas performed in their names. The pets participate in every function in the family, be it social, celebratory or religious, and when they fall sick, it's not only vets that attend on them, but potions and prayers to ward off the evil eye.

The bond between humans and animals is as old as they have been around. All animal-lovers have stories to share — stories that make you laugh, move you to tears or amaze you. Nandini Sengupta has written just such a book: *The Blue Horse, and other amazing animals from Indian History*. As the top line on the back cover says: 'It's not just humans who make history, you know.' Although the publisher has categorised it as a children's book, this beautifully written and engaging paperback is most definitely for all ages, it's one for the family from the littlest one up. If you love animals and history, then this one's especially for you!

We've all heard or read stories about the valour of animals. Many schoolchildren can recite Shyam Narayan Pandey's poem 'Chetak ki Veerta' about Maharana Pratap's horse. It's possibly one of the most well-known animals in India, and that's probably why the book is called, after Chetak, *The Blue Horse*. The blue horse? 'I am a Kathiawari horse,' says Chetak. Incidentally, the stories are all told in first person. 'Not as big and imposing as an Arab stallion, but sturdier and just as fast. And then there's my dappled grey coat, which earned me the sobriquet of the 'Blue Horse'.'

Chetak goes on to say: 'Maharana Pratap was an exceptionally tall man. And strong as an ox to boot. Bard songs say he weighed nearly 200kg in his full chain mail and armour, fitted with all his weapons! I am not sure about the numbers — I am a horse, not a maths teacher! — but it was a heavy burden I carried on my back. Remember, I also wore armour — my *Pakhar* saddlery, my *Jhool* mail and caparison clothes, all of which weighed a lot too. But weight or no, I had to be quick, or *Hukum* and I would both be dead.'

The descriptions in the book are detailed and engaging; they are based on historical facts, unearthed after painstaking research and cross-checking by the author. Yes, the Nawab of Junagadh did in fact hold a lavish, three-day celebration for the marriage of his favourite pet dog, Roshanara, with Bobby, a pet belonging to the Nawab of Mangrol. Both dogs were heavily bejewelled and taken in a procession. The author provides the sources for the details at the end of each story. The info-box at the end of 'The Wedding Belle' mentions the source of the information as *The Dog Book: Dogs of Historical Distinction* by Kathleen Walter-Meikle. The info box at the end of Chetak's story, for instance, can clarify — for those who wish to know — the historical position on the Battle of Haldighati which, in recent times, was embroiled in controversy following the rewriting of some portions of it in school textbooks. As Nandini points out, this event is well-documented by

The Nawab of Junagadh held a lavish, three-day celebration for the marriage of his favourite pet dog, Roshanara, with Bobby, a pet belonging to the Nawab of Mangrol. Both dogs were heavily bejewelled and taken in a procession.

Mughal chroniclers as well as Rajput bards; she draws attention to the view of contemporary historians that there was no clear winner: Maharana Pratap lost many soldiers and had to leave the battlefield while the Mughals could neither kill him nor end the Rajput resistance.

It's not surprising that many of the stories are about dogs, but there are cheetahs and elephants too. And an extraordinarily beloved parrot that belonged to a scion of the Kadamba dynasty in what we now know as Goa. The author says she first came across this story in 'a passing reference by historian Upinder Singh in her seminal book *A History of Ancient and Early Medieval India*' in which she 'referred to a 12th-century inscription at Tambur that talks of the king who killed himself for his parrot'. Further research revealed more details. As the parrot says, 'It isn't every day that a human, much less a king, gives up his life for the sake of his pet parrot. But then again, I was no ordinary bird. I was a talking parrot who had been trained to recite the Vedas and discuss *Chanakya Niti*. And my loyal human was a king called Jayakesi.' Now, in that palace prowled a cat intent on making a meal of the parrot. Jayakesi had promised to protect his parrot from the wiles of the cat and if he did not do this successfully, he had promised that he 'would follow him to the next world'. So, when the cat finally got the parrot, Jayakesi honoured his promise.

'To be honest,' the author has the parrot say, 'I didn't expect Jayakesi to stick to his promise. There was no one in the room when he made the vow. And humans don't value their friendship with animals the way animals do with humans. To them, it's just a few moments of amusement. To us, it is our whole life. But Jayakesi was different. It didn't matter to him that his promise was made to a bird. And that the bird was now dead and could not speak for itself. He ordered a funeral pyre piled high with sweet-smelling sandalwood and climbed inside, holding me in the palm of his hands.'

I was so enthralled and enchanted by this book that I wanted to chat with the author about it. After all, she was practically my neighbour, in Pondicherry, barely 170km away from Chennai! Nandini was more than generous and answered all my questions passionately. She had been researching the *Akbarnama* — the official chronicle of Akbar's reign written by Abu'l-Fazl ibn Mubarak — for a book she was working on, when she came upon a reference to the cheetahs. One thing led to another and the idea for this book was born. 'I am a history evangelist, and an animal evangelist,' she says. The cheetahs open this collection, and the names they are called by in the story — Samand Manik, Madan Kali, Chitranjan — are the actual names of Akbar's cheetahs. Nandini says the book is only 15 per cent embellishment, the rest is historical facts.

Jayakesi had promised to protect his parrot from the wiles of the cat and if he did not do this successfully, he had promised that he 'would follow him to the next world'. So, when the cat finally got the parrot, he honoured his promise.

My son's friend has two or three pet canines, and the arrival of each, as a puppy, is greeted with a visit to the temple and special pujas performed in their names.

The world knows of many animals that have made a mark on history, and some of them find mention at the end of the book, such as Caligula's horse Incitatus, King Dutugamunu's war elephant, Queen Isiemkheb's pet gazelle, Genghis Khan's falcon, Emperor Yongle's giraffe and so on. But Nandini consciously chose to focus on Indian animals. 'They are known so little,' she says, and she would like them to be known. For about two years, she researched, located authentic sources, and wrote their stories. She located many animals that had played a significant role in Indian history, but the book tells the stories only of those that could be clearly attributed to authentic sources. That's why it's a slim book, but who knows, perhaps the next edition will be thicker because the research continues. Meanwhile, *The Blue Horse* is a beautiful way to experience adventure and get a taste of the past, source and all.

The columnist is a children's writer and senior journalist.

Membership Summary

(As on March 1, 2021)



Rotary at a glance

Rotary clubs	: 36,598	Rotary members	: 1,190,766
*Rotaract clubs :	9,273	*Rotaract members :	219,157
Interact clubs	: 15,758	Interact members :	362,434
RCCs	: 11,619		*As on 18 March 2021*



Source: RI South Asia Office

A book for word-lovers

S R Madhu



Tharoorosaurus

Author : Shashi Tharoor
Publisher : Penguin Random House India
Pages : 325
Price : ₹399

Shashi Tharoor is a mesmeric speaker and prolific writer (he brings out a book every year) as everyone knows, but his fondness for big words is a myth. Good communication in speech or writing is a matter of using the right word, as Tharoor has said often.

A big word is justified only if it's the best one for the occasion. Otherwise it looks absurd and pompous, like a person wearing a three-piece suit for shopping in a bazaar round the corner.

However, Tharoor's wordsmith reputation led to a request from Penguin India for a book titled *Tharoorosaurus,* which covers three words — Tharoor, tyrannosarus (because "people are terrified of big words") and thesaurus. Tharoor clarifies that the book isn't a scholarly work but reflects his love for words, which he inherited from his father Chandran Tharoor. There was no word game at which his father did not excel, whether it was Scribble or Bingo or games that he devised himself.

The book describes and analyses 53 words: there's a definition for each word, a sample usage and a little essay. Plus a one-page fun sketch. The cover shows Tharoor's head on a long dragon's body.

The cover and the sketches inside fascinated my four-year-old grandson. He took the book away from me before I could read it, opened its pages again and again over the next couple of weeks and stared at the sketches, and asked me to "explain". By the time he was through with the book and agreed to part with it, its cover had come off and the pages began to look frayed.

The book begins with the horrendous-sounding *Agathokakological* which means "consisting of both good and evil". The word was coined by English poet Robert Southey in the early 19th century. Tharoor says Indian philosophy has often held that good and evil can coexist in the same person. The heroes of the *Mahabharata* were god-like, yet not perfect human beings. They were prone to lust, greed and anger.

The longest word in the book is *Floccinausinihilipilification* which means "the act of estimating something or someone as worthless". Sir Walter Scott in 1826 said the inventor of the word was William Shenstone who used it in a letter in 1741. Perhaps one could describe a book, a movie, a theory or a budget as an exercise in *Floccinausinihilipilification.*

Contronym is an interesting word "which can mean the opposite of itself". Tharoor cites the example of President Trump's "sanctions" on Iran's oil supplies. Sanctions is a contronym because it means both "permitted" and "prohibited".

The book features common words like apostrophe, brickbat, curfew, impeach, jaywalking, pandemic, phobia, lunacy, lynch, quiz, quarantine, hyperbole, namaste, umpire, yogi, zealot. There are less familiar words like aptagram, authorism, cwtch, cromulent, defenestrate, panglossian, epicaricacy, epistemophilia, lithologies, rodomontade, snollygoster, valetudinarian and zugzwang.

Have you heard of the word *Cwtch* which just means a hug? You are *Panglossian* if you are foolishly optimistic. *Epicaricacy* is deriving pleasure from the misfortunes of others. On the familiar word *hyperbole,* Tharoor quotes American humourist Will Rogers who said of a particular politician that if brains were gunpowder, he wouldn't have enough to blow the wax out of his ears.

In sum, this is a fun book, particularly if you are a word-lover.

The author is a senior journalist and a member of the Rotary Club of Madras South.

470 சிறுவர்களுக்கு இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்யத் திட்டமிடுகிறது RC பாம்பே

V முத்துகுமரன்

RC பாம்பே, RID 3141 தற்போது இரண்டு பன்னாட்டு நல்கைகளின் வழியாகச் சிறுவர்களுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளை நிறைவேற்றிவருகிறது. கோவிடாலோ முடக்கக் கட்டுப்பாடுகளாலோ இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த இயலவில்லை.

இந்த இரண்டு GG திட்டங்களில் முதலாவது (ரூ.1.3 கோடி) 125 இதய அறுவைச் சிகிச்சைகள் (இது வரை 119 செய்யப்பட்டுள்ளன) என்ற இலக்குடன் மார்ச் நிறைவில் முழுமையடையும், இரண்டாவது GG 350 குழந்தைகளையாவது சென்றடையும் இலக்குடன் இது செயல்படும்.

இதய அறுவைச் சிகிச்சைகள் குழுத் தலைவர் ஜெய்மின் ஜாவெரி முதல் GGன் கீழான அறுவைச் சிகிச்சைகள் அனைத்தும் அந்தேரியிலுள்ள கோகிலாபென் திருபாய் அம்பானி மருத்துவமனையில் (KDAH)

நிறைவேற்றப்படுவதாகவும், இரண்டாவது GGக்குத் தங்கள் சங்கம் இரண்டு மருத்துவமனைகளுடன் (ஹாஜி அலியிலுள்ள SRCC குழந்தைகள் மருத்துவமனை மற்றும் வாபி (குஜராத்தில்) உள்ள ஹரியா ரோட்டரி மருத்துவ மனை) பணியாற்றவுள்ளதாகவும் தெரிவித்தார். இதுவரை இரண்டாம் நல்கையின்கீழ் (ரூ.3.6 கோடி) 75 அறுவைச் சிகிச்சைகள் செய்யப் பட்டுள்ளன; இந்தத் தொகையில் 50 சதவிகிதத்தை நாங்கள் பெற்றுள்ளோம்; நாங்கள் சுமார் 140–150 அறுவைச் சிகிச்சைகளை நிறைவு செய்ததும், நோயாளி களைப்பற்றிய தகவல்கள், RIன் நல்கைகள் பிரிவுக்கு அனுப்பப்படும். இந்த அறிக்கையை ஆராய்ந்து உறுதிப்படுத்தியபின், திட்டத்தின் மீதிப் பகுதிக்கான நிலுவைத் தொகையை அவர்கள் வெளியிடுவார்கள் என்று விளக்குகிறார்.

மும்பையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள குழந்தைகளுக்கு மிகப் பெரிய இதயப் பரிசோதனை முகாம்களை நடத்துவதற்காக இந்தச் சங்கம் உள்ளூர் மருத்துவமனை களுடன் இணைந்து செயல்படுகிறது, மாநில அரசும் தன்னுடைய குழந்தைகள் நலப் பராமரிப்புத் திட்டங்களின்கீழ் தகுதி பெறும் நோயாளிகளின் பட்டியலை வழங்குகிறது.

ஆராய்ந்து உறுதிப்படுத்தும் செயல்முறை

அரசாங்கம், மருத்துவமனைகள் வழங்கும் குழந்தைகள் பட்டியல்களை ஜாவெரி தலைமையில் DGN சந்தீப் அகர்வல்லா, முன்னாள் தலைவர் விஜய் K ஜடியா மற்றும் Rtn ஸ்வாதி ஜஜோடியா ஆகியோரைக் கொண்ட நான்கு உறுப்பினர் குழு ஆராயும், பலன் பெறக்கூடியவர்களைத் தேர்ந்தெடுக்கும்.

நாடுமுழுவதும், பிறந்த குழந்தைகளில் தொடங்கி 18 வயதுவரையுள்ள தேவையுள்ள எந்தக் குழந்தைக்கும் இலவச இதய அறுவைச் சிகிச்சைக்குத் தகுதி உண்டு என்கிறார் ஜாவெரி.

இரண்டு ஆண்டுகளுக்குமுன்னால், ஏழைக் குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகள் என்ற யோச னையை இன்னர் வீல் மாவட்டம் 314 தலைவர் ஜோதி தோஷி முன்வைத்தது தான் இந்தத் திட்டங்களின் தொடக்கம், பின்னர் அதை RC பாம்பே பெரிய ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டது என்கிறார் DGN அகர்வல்லா. இதற்கான முதல் GG திட்டம் RC பாம்பே பியர், RC டெட்ராய்ட், US, RID 6400 ஆதரவுடன் செய்யப்படுகிறது; இரண்டாவது GG திட்டம் RC ல்விவ்-சென்டர், உக்ரேனைத் தன்னுடைய பன்னாட்டுக் கூட்டு அமைப்பாகக் கொண்டு செய்யப்படுகிறது.■

எளிய வாழ்க்கை வாழ்வோம்

பரத்-ஷலன் சவூர்

மிகையான தகவல்கள் நம்மை மூழ்கடிக்கும் சூழல் இது. இந்த நேரத்தில் நீங்கள் உங்களைக் குணப்படுத்திக்கொள்வதற்கான வழிகளில் ஒன்று, உங்கள் மூளையில் இரைச்சலை நீக்குவது.

"ஆழ்ந்து சிந்திக்கும்" கலையை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்கு, நம்முடைய இப்போதைய வரம்புகளைத் தாண்டிச் சின்னங்கள், கதைகளை நம் மனம் காணவேண்டும், நேரத்தைத் தாண்டி, "என்றென்றும் நிலைத்திருப்பது" என்று கூறப்படும் இடத்தைக் காணவேண்டும். இதன்மூலம், நாம் சிறிது நின்று யோசிப்போம், நல்லவற்றைப் பாராட்டுவோம், நன்றியுணர்வில் மூழ்குவோம்.

ஆனால், அதற்குமுன்னால், நம் மனத்தையும் இதயத்தையும் எளிதாக்கி விடுதலை பெறச் செய்யும் சில விஷயங்கள், இதோ.

வாழ்க்கையில் தொடங்கி, நலமான வாழ்க்கையை நோக்கி: நம்முடைய மூச்சுத் தரம் மேம்படும்போது, நம் உடலும் மனமும் அமைதி பெறுகின்றன. அது நம் வாழ்க்கைத் தரத்தை மிகவும் மேம்படுத்துகிறது: வெறும் வாழ்க்கை இல்லை, அது நலமான வாழ்க்கை.

மகிழ்ச்சியற்ற விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதும் கவலைப் படுவதும் முகத்தைச் சூடாக்கும், உச்சந்தலையை இறுகச்செய்யும்.

அன்புப் பார்வையைச் செலுத்துங்கள்... கண்ணாடியைப் பாருங்கள், உங்களுடைய அன்பான, நன்கு பழகிய முகம் தெரிகிறதா? அதில் அன்பை எழச் செய்யுங்கள் உங்களை நீங்களே இதமாக, அன்பாகப் பாருங்கள் வெளி உலகிலிருந்து நாம் எதைப் பார்க்கிறோமோ, அதை உள் உலகத்தின் பார்வையுடன் நாம் எப்போதும் கலக்க முயல்கிறோம் என்று உளவியலாளர்கள் கூறுகிறார்கள். நாம் இரு பார்வைகளைச் சரி செய்ய முயல்கிறோம். அதாவது, மூளை, முதுகு எலும்பு ஆகியவற்றைக் கொண்ட நம்முடைய மைய நரம்பு அமைப்பு எப்போதும் வெளி உலகுடன் சரிசெய்து கொண்டிருக்கிறது. இந்த முயற்சி துன்பமாக அல்லது அமைதியாக, சில நேரங்களில் மரத்துப் போனது போல் உணரப்படுகிறது.

அழுத்தத்தைக் குறைக்க, அல்லது எளிதாக்க, மனம் எதில் கவனம் செலுத்துகிறது என்பதை நாம் துண்டிக்கவேண்டும் அல்லது மாற்றவேண்டும். தூக்கமானது மூளைக்கும் நரம்பு அமைப்புச் சுற்றுகளுக்கும் ஓய்வு அளிக்கிறது. இதமான இசையைக் கேட்பதும் மிகுந்த நன்மை தருகிறது. தொடர்ச்சியான பார்வை-சரிசெய்தல் அமைப்புக்கு இடைவெளி கிடைக்கும்போது, அங்கு அமைதி ஆள்கிறது.

நரம்பு அமைப்பானது கிட்டத் தட்ட வாரத்தில் ஏழு நாட்களும், நாள்தோறும் 24 மணிநேரமும் சரிசெய்துகொள்கிற, சிந்திக்காமல் எதிர்வினையாற்றுகிற முறையில் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்திச் சூழ்நிலையை எளிதாக்கக்கூடிய சில உதவிக்குறிப்புகள், இதோ:

தீர்மானங்களை எடுங்கள். அனைத்தையும் அப்படியே தொங்க விடாதீர்கள். நீங்கள் ஒரு தீர்மானம் எடுக்கும்போது, அந்தச் செயல் நிறைவடைந்துவிடுகிறது. தொடர்ந்து வட்டமிட்டுக்கொண்டும் சரி செய்து கொண்டும் இருக்க வேண்டியதில்லை, நம் பாதையில் நடக்கலாம்!

செயல்களைக் கலந்து பாருங்கள். செயல்கள் அடுத்தடுத்து ஓடுகின்ற ஓர் அட்டவணையைத் தயாரியுங்கள். நீங்கள் செய்ய விரும்புகிற, செய்ய விரும்பாத விஷயங்களை நன்கு கலந்து விடுங்கள். ஒவ்வொரு செயலையும் செய்தபிறகு, உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள், அது மூளையைக் கதகதப்பாக்கும்.

நீங்கள் எதையேனும் சாதித்து விட்டதாக உணரும்போது உங்களுக்குள் சுரக்கிற, 'விருது வேதிப்பொருள்' என்ற பெயரில் புகழ் பெற்றுள்ள டோபமின் இரைச்சலை நன்கு குறைக்கும். உங்களை எச்சரிக்கையில் வைக்கும் நோரெபைன்ஃப்ரைன் என்ற வேதிப்பொருளை இது விரட்டிவிடும். ஒருவேளை நோரொபைன்ஃப்ரைன் மிகுதியாகிவிட்டால் நடுக்கமும் தேவையில்லாத அழுத்தமும் வரலாம், அதை இது தடுக்கிறது.

உங்களுடைய தனிமை நேரத்தைக் கொண்டாடுங்கள். நாம் தனியாக இருக்கும்போது மிகச் சிறப்பாகச் செயல்படுகிறோம்.

சிறு விஷயங்களை எண்ணி அலட்டிக்கொள்ளாதீர்கள். சில மக்கள் சிறு தகவல்களில் மிகவும் கவனமாக இருப்பார்கள்: நீளம், அகலம், கோணம் எல்லாம் மிகச் சரியாக இருக்கவேண்டும் என்பார்கள். அவ்வாறு கவனம் செலுத்துவது மிகச் சிறந்ததுதான், ஆனால், அது பல முக்கியமில்லாத விஷயங்களில் உங்களை மூழ்கடித்துவிடக்கூடும். அது, தேவையில்லாத குப்பையைத் தக்கவைத்துக்கொள்வதைப் போன்ற செயல்.

இதுபோன்ற நேரத்தில், ஒரு படி பின்னால் சென்று உங்களை நீங்களே ஒரு கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்: நான் தகவல்களில் மிகவும் கவனம் செலுத்துகிறேனோ? கொஞ்சம் சிந்தனை, தர்க்கம், சற்று அவசரத்தைக் கூட இதில் பயன்படுத்தலாம். அப்போது நீங்கள் பல காலி ஐஸ் க்ரீம் கோப்பைகளை விட்டுவிட்டு, உங்கள் கனவுகளை நோக்கி நடப்பீர்கள்.

உணர்வுகளை வடியுங்கள். இது கடினமான நேரம். பலர் தங்களுடைய வேலைகளை இழந்துள்ளார்கள், சிலர் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்துள்ளார்கள். அச்சத்தை, சினத்தை, துக்கத்தை நாம் எப்படி வடிப்பது?

"நாட்குறிப்பு எழுதுவதன்மூலம் வடியுங்கள்" என்கிறார்கள் உளவியலாளர்கள். எரிச்சலை அல்லது வேறு தீங்கு விளைவிக்கும் உணர்வை எப்போதும் தாங்கிக் கொண்டிருப்பது, எளிதில் உடையக்கூடிய உடலில் ஓர் ஆபத்தான வேதிப்பொருளைத் தாங்கிக்கொண்டிருப்பதைப் போன்றது என்பதையும் நாம் அறிந்துகொள்வது முக்கியம். இதை நாம் அறிந்து கொள்ளும்போது, புரிந்து கொள்ளும்போது, மாற்று நடவடிக்கை எடுப்பது மேலும் எளிதாகிறது.

நமக்குள் எங்கோ ஓர் இடத்தில், துக்கம் என்பது நாம் கடந்து வரவேண்டிய ஒரு செயல்முறை என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். அந்த நேரத்தில், குறிப்பாக, காயங்கள் புதிதாக உள்ளபோது நன்றாக இல்லாமலிருப்பது பரவாயில்லை என்று அறியவேண்டும்.

சுழற்சியை மாற்றுங்கள். ஒரு சூரிய உதயத்தைப்போல் பழகிய, இதமளிக்கிற, நம்பிக்கை உணர்வை அளிக்கிற செயல்களைச் செய்யுங்கள். சோகம் அல்லது நம்பிக்கையின்மைச் சுழற்சியை வலிமை மற்றும் நிலைத் தன்மைச் சுழற்சியாக மாற்றுங்கள். இதற்குச் சில ஆலோசனைகள்:

பழையவற்றைத் துடைத்து விடுங் கள்-கோப்புகள், புத்தகங்களை ஓரங் கட்டுங்கள், துணிகளை மடித்துவையுங்கள், பாத்திரம் தேயுங்கள், செடிகளுக்கு நீரூற்றுங்கள் உங்கள் கைகளால் வேலை செய்வது உங்களைத் தரைக்குக் கொண்டுவரும், உங்கள் காயத்தை ஆற்றும்.

ஓர் ஆறுதல் பகுதிக்குள் நுழையுங்கள்-நடத்தல் அல்லது மிதிவண்டி ஓட்டுதல் போன்ற கார்டியோவாஸ்குலார் உடற்பயிற்சி களில் சிறிது நேரம் ஈடுபடலாம், இதன்மூலம், களைத்த உடல் மற்றும் மனத்தில் புதிய உயிர் உருவாகிறது. காய்கறிகள், தானியங்கள், பருப்புகளைச் சாப்பிட்டால், உள்ளே இருக்கும் வெறுமை நிறைகிறது, நம்பிக்கை அளிக்கும் இதமான உணர்வு கிடைக்கிறது. ஓய்வும் தூக்கமும் மிகச் சிறந்த நிம்மதி அளிக்கும் பழக்கங்கள். உங்கள் நோயெதிர்ப்பாற்றலை மேம்படுத்த, நாள்தோறும் வைட்டமின் C எடுத்துக் கொள்ளுங்கள்.

இதயத்தைக் கதகதப்பாக்கும் செய்திகள், நிகழ்வுகள், விஷயங்கள் நன்றாக உள்ளன அல்லது இயல்புக்குத் திரும்புகின்றன என்பதற்கான சிறு சின்னங்களைத் தேடுங்கள். இதன் மூலம் நீங்கள் கடந்தகாலத்தை வழியனுப்பிவிட்டு, நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வரவேற்கலாம், பழைய நினைவுகளை மதிப்போடும் அன்போடும் வழியனுப்பிவிட்டு, ஒரு புதிய உலகில் வாழும் ஒரு புதிய வழியை வரவேற்கலாம்.

சிரிக்கும் பெண். ஒரு புதிய கதையைக் கேளுங்கள்: ஒரு பெண் எப்போதும் சிரித்துக்கொண்டே இருந்தார், அவரை எல்லாரும் பாராட்டினார்கள். ஒருநாள், அந்தப் பக்கமாக வந்த ஒருவர் அந்தப் பெண்ணைக் குறுகுறுப்புடன் பார்த்துக் கேட்டார், "நீங்கள் ஏன் எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?"

அந்தப் பெண் சொன்னார், "நான் திட்டமிட்டபடி எல்லா விஷயங்களும் நடக்கின்றன. ஆகவே, நான் என் வாழ்க்கையை ரசித்து அனுபவிக்கிறேன்."

சில நாட்களுக்குப்பிறகு, திடீரென்று அந்தப் பெண்ணின் சொத்துகள் அனைத்தும் திருடப் பட்டன. அப்போதும் அவர் சிரித்துக் கொண்டேதான் இருந்தார்.

இப்போது, அந்த வழியாகச் சென்ற இன்னொருவர் அந்தப் பெண்ணைக் குறுகுறுப்புடன் பார்த்துக் கேட்டார், "நீங்கள் ஏன் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கிறீர்கள்?"

அந்தப் பெண் சொன்னார், "நான் திட்டமிட்டபடி எந்த விஷயமும் நடக்கவில்லை. ஆகவே, நான் என் வாழ்க்கையை ரசித்து அனுபவிக்கிறேன்."

வாழ்க்கையை எளிமையாக வாழ்வோம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

RC விருத்தாசலம் — RID 2981

1.13 லட்சம் சதுர அடி பரப்பில் மியாவாகிக் காடுகள் ரூ.11 லட்சம் செலவில் வளர்க்கப் படுகின்றன. இந்தக் குறுங்காடு களுக்கு நீர்ப்பாசனம் செய்ய RWH குழாய்கள் அமைக்கப்படுகின்றன.

RC அமல்னெர் — RID 3030

ஆதார் என்ற சிறப்பு இல்லத்தில் உள்ள HIV தொற்று கொண்ட 25 பெண்களுக்கு இந்தச் சங்கம் புரதக் கூடுதல் பொருட்கள், பிற தேவைகளை வழங்குகிறது.

RC சேலம் சவுத் — RID 2982

இந்தச் சங்கம் ரோட்டரி மின் சங்கம் பெங்களூருடன் இணைந்து, சுமார் 100 சிறுவர்களைக் கொண்ட டான் பாஸ்கோ அன்பு இல்லத்துக்கு ரூ.2 லட்சம் மதிப்புள்ள 12 கணினிகளை வழங்கியது.

RC சாகர் சென்ட்ரல் — RID 3040

குதரி கிராமத்தில் உள்ள பால் அனாத் சேவா ஆசிரமத்தில் உள்ளோருக்கு வரையும் பொருட்கள், கதகதப்பான மேலங்கிகள் வழங்கப்பட்டன.

RC அறந்தாங்கி — RID 3000

ஓட்டுநர்களுக்குப் பார்த்தல், கேட்டல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன.

RC அல்வர் ஃபோர்ட் — RID 3053

மெஹ்தாப் சிங் என்ற மாற்றுத் திறனாளியுடைய முழங்கை இணைப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்கு இந்தச் சங்கம் பண உதவி செய்தது.

செய்திகள்

RC கந்தேவி — RID 3060

ஒரு GG திட்டத்தின் வழியாக, பொதுசுகாதரா மையங்களுக்கு, N95 முகமூடிகள், கையுறைகள், PPE பொதிகள், வழங்கப்பட்டன.

RC மொராதாபாத் பிராஸ் சிட்டி — RID 3100

நகரின் இரண்டு பள்ளிக் கூடங்களுக்கு மின்விசிறிகள் அளிக்கப் பட்டன. இவ்விழாவில் DG மனீஷ் ஷர்தா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

RC கபூர்தலா எலைட் — RID 3070

சங்கம் மாவட்ட சிறையில் உள்ள கைதிகளுக்கு மூக்கு கண்ணாடி, கண் மருந்து மற்றும் முககவசம் வழங்கியது.

RC ஹத்ரஸ் — RID 3110

பிரேம் ரகு மருத்துவ மனையில் சுமார் 35 நோயாளி களுக்குப் பல நோய்களுக்கான பரிசோதனை செய்ய சங்கம் உதவியது.

RC ரூர்கீ மிட்-டவுன் — RID 3080

இந்தச் சங்கம் மக்களுக்கு குளிரை சமாளிக்க 250 தொகுப்புக் கம்பளித் தொப்பிகள், கழுத்துத் துண்டுகளை வழங்கியது.

RC பல்ராம்பூர் — RID 3120

குளிர்கால இரவுகளில் இருந்து பாது காப்பதற்காக, போர்வைகள் இப்பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டன.

RC பர்சி — RID 3132

கிராமப்புறப் பெண்களுக்குத் தையல்பயிற்சி வழங்கப் படுகிறது. சங்கம் இவர்களுக்கு வேலை வாய்ப்பையும் உருவாக்கும்.

RC பட்கல் — RID 3170

பட்கலில் உள்ள அரசு மருத்துவ மனைக்கு முககவசங்கள் அளிக்கப் பட்டன. DG சங்க்ராம் படீல் இந்தப் பொதிகளை CMO டாக்டர் சவீதா காமத்திடம் வழங்கினார்.

RC நிசாமாபாத் — RID 3150

உலக இளம்பிள்ளை வாத நாளை முன்னிட்டு விழிப்புணர்வு பதாகை மற்றும் சுவரொட்டி களை மாவட்ட மருத்துவ அலுவலர் திறந்து வைத்தார்.

RC புத்தூர் யுவா — RID 3181

சங்கத தலைவர் ஹர்ஷ்குமார் ராய் ஆதரித்த ஒரு கழிப்பறையைக் ஒரு நலிந்த குடும்பத்துக்கு DG ரங்கநாத் பட் வழங்கினார்.

RC பல்கி ஃபோர்ட் — RID 3160

பல்கியில் சிறுவர் விளையாட்டு மைதானத்தில் இருக்கைகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் நிறுவப்பட்டன.

RC ஷிர்வா — RID 3182

இந்திரப்புரா பகுதியிலுள்ள ஓர் அங்கன்வாடி மையத்துக்கு இந்தச் சங்கம் 20 நாற்காலிகளை அளித்தது.

செய்திகள்

RC பட்டாம்பி — RID 3201

பெரிங்கன்னூரில் உள்ள ஆதரவற்ற சிறுவர்கள் இல்லத்திற்கு இச்சங்கம் ஆடைப் பொருட்களை வழங்கியது.

RC மால்டா — RID 3240

மால்டாவிலுள்ள காஞ்சன்தரில் ரோட்டரியன்கள், இன்னர் வீல் உறுப்பினர்கள், 100க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டார்கள்.

RC சிவகாசி டைமண்ட்ஸ் — RID 3212

விஸ்வநாதம் கிராமத்திலுள்ள ரோட்டரி மெட்ரிக் பள்ளி ஊழியர்களுக்குத் தையல், பிற கைவினைக் கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

RC சம்பல்பூர் வெஸ்ட் — RID 3261

சாகிபராவில் உள்ள பர்மேஸ்வரி பாய் நினைவு அறக் கட்டளையுடன் இணைந்து, போர்வைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

RC அரக்கோணம் — RID 3231

பெருமுச்சி கிராமத்திலுள்ள PHCல், அன்னையர்களுக்கான தாய்ப்பால் ஊட்டுதல் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்தப் பட்டது.

RC சால்ட் லேக் மெட்ரோபோலிட்டன் கொல்கத்தா — RID 3291

அம்ரகாச்சி மற்றும் மாலியா பகுதிகளில் உள்ள முதியோருக்கு 100க்கும் மேற்பட்ட கதகதப்பான போர்வைகள் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

பள்ளி மாறுவதன் அபாயங்கள்!

TCA ஸ்ரீனிவாசராகவன்

எனது தலைமுறையைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தினர் பலர் ஒரு விநோதமான பிரச்னையை எதிர்கொள்கின்றனர். நீங்கள் எந்த பள்ளியில் படித்தீர்கள் என்று எளிமையான ஒரு கேள்வியைக கேட்டால் அவர்களுக்கு என்ன சொல்வது என்று தெரியாது. இது எதனால் என்றால், அவரின் தந்தைக்கு பணி நிமித்தமாக அடிக்கடி ஊர் மாறிச் செல்லவேண்டியிருக்கும். என்னை எடுத்துக்கொண்டால் நான் ராய்கர், ராய்பூர், தில்லி, ஜபல்பூர், போபால் மற்றும் இறுதியாக குவாலியரில் பள்ளிக்குச் சென்று படித்தேன். இது 1955க்கும் 1967க்கும் இடைப்பட்ட காலம். இந்த 12 வருடங்களில் தில்லியில் ஒரே பள்ளியில், அதாவது சர்தார் படேல் வித்யாலயாவில் 6 வருடங்கள் படித்தேன். எனது பள்ளி வாழ்க்கையில் மகிழ்ச்சியான தருணங்கள் அவை.

ஆனால், நான் 9ம் வகுப்பை எட்டியதும் எனது தந்தை ஜபல்பூருக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டார். அதற்கு 6 மாதங்களுக்குப் பிறகு போபாலுக்கு மாற்றப்பட்டார். பின்னர் 18 மாதங்கள் கழித்து குவாலியருக்கு மாற்றப்பட்டார். அப்படியானால் நான் எந்த பள்ளியில் படித்ததாக அர்த்தம்? தில்லியில் 6 ஆண்டுகள் ஒரே பள்ளியில் படித்ததைத்தான் நான் பள்ளியில் படித்ததாக கருதுகிறேன். ஆனால், ஆறு மாதங்களுக்கு முன்பு, எனது இந்த நம்பிக்கை தகர்ந்தது. இரண்டு வருடங்கள் மட்டுமே தில்லி பள்ளியில் படிப்பை முடித்த ஒரு முட்டாள், நான் முன்னாள் மாணவன் என்று கூறிக்கொள்ள முடியாது. ஏனெனில் நான் அங்கு படித்து பட்டம் பெறவில்லை என்று கூறினான்.

அவன் சொன்னதை வைத்துப் பார்த்தால் நான் குவாலியரில் உள்ள பள்ளியின் முன்னாள் மாணவன். அங்கு நான் ஆறு மாதங்கள் மட்டுமே படித்தேன். நான் அதைப் பொருட்படுத்தவில்லை. ஏனெனில், அது ஒரு நல்ல பள்ளி. அங்கு எனக்கு சில நல்ல நண்பர்கள் உருவானார்கள். ஆனால், பள்ளி இறுதியாண்டில் 6 மாதங்கள் மட்டுமே படித்த ஒருவர் முன்னாள் மாணவர் என்ற தகுதி பெறுகிறார் என்பதும் ஒருவர் 6 வருடங்கள் ஒரு பள்ளியில் படித்து ஆனால், அங்கு பட்டம் பெறமுடியாமல், தந்தையின் பணியிட மாற்றத்தின் காரணமாக பள்ளியை விட்டு சென்ற காரணத்துக்காக முன்னாள் மாணவர் என்பது இல்லாமல் ஆகிவிடுமா? இது எவ்வளவு அபத்தமானது. இதில் எரிச்சலூட்டும் விஷயம் என்னவென்றால், அந்த நபர் எனக்கு பள்ளி மாணவர்கள் குழுவாக எடுத்துக் கொண்ட படத்தை தவறாக எனக்கு அனுப்பியிருந்தார். அவர் எனது பெயரைப் போலவே பெயர்கொண்ட ஒருவரை ஆனால், 10ம் வகுப்பில் சேர்ந்தவரை குறிப்பிட விரும்பினார். அவர் என்னிடம் படத்தில் இருக்கும் குழந்தைகளை அடையாளம் காண முடியுமா என்று கேட்டிருந்தார். நான் 3ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை அவர்களுடன் படித்ததால் என்னால் அவர்களை அடையாளம் காணமுடிந்தது. நாங்கள் மகிழ்ச்சியான நேரத்தை ஒன்றாக கழித்தோம்.

எனக்கு நன்றி தெரிவிப்பதற்கு பதிலாக அந்த முட்டாள், என்னைத் தெரியாது என்று கடிதம் எழுதினார். ஆம் உண்மையில் அவருக்கு தெரியாது. நான் அந்த பள்ளியைவிட்டு வெளியேறிய சமயத்தில் அவர் 9ம் வகுப்பில் சேர்ந்தார். அறிவியல் வகுப்பில் மூன்று ஆண்டுகள் மட்டுமே கழித்தார். அந்த புகைப்படத்தில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கலை (ஆர்ட்ஸ் பாடப்பிரிவைச் சேர்ந்தவர்கள். நான் எந்த பள்ளியின் முன்னாள் மாணவன் என்பது எனக்கு பொருட்டல்ல. ஆனால், கேள்வி மட்டும் மிஞ்சியுள்ளது. முன்னாள் மாணவர் என்பதை வரையறுப்பது எது? என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் தந்தை அரசுப் பணியில் இருந்தால் இதுபோன்ற பிரச்னைகள் எழத்தான் செய்யும். பள்ளிகள் பல்வேறு கிளைகளைத் திறந்த பிறகு இந்தப் பிரச்னை இன்னும் மோசமாகிவிட்டது. நீங்கள் பள்ளியின் எந்த கிளையில் படித்தீர்கள் என்று கேட்க ஆரம்பித்து விட்டனர். இது கிட்டத்தட்ட ஜாதி அமைப்பை போன்றதாகிவிட்டது.

கட்டணம் செலுத்தும் வசதியுள்ள பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை உறைவிடப் பள்ளிகளுக்கு அனுப்புவார்கள். இது ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும். ஆனால், குழந்தையை ஒரு புதிய ஜாதி அமைப்பில் உறுப்பினராக்கிவிடும். இந்த உறைவிடப் பள்ளிகள் கடுமையான படிநிலையைக் கொண்டிருந்தன. அந்த வகையில் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு இந்தியாவில் உள்ள பள்ளிகள் உயர்ந்த நிலையிலும் மேற்கு மற்றும் மத்திய இந்தியாவில் உள்ள பள்ளிகள் அடுத்த நிலையிலும் இருந்தன. எப்படியிருந்தாலும் நீங்கள் பள்ளியிலிருந்து வெளியேற்றப்படாவிட்டால் முன்னாள் மாணவர் பிரச்னை தீர்க்கப்படும். ஆனால், அவை அரிதாகவே இருந்தது.

உண்மையில் நான் எந்த ஒரு பள்ளியின் முன்னாள் மாணவரும் அல்ல என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில் கட்செவி அஞ்சல் (வாட்ஸ் ஆப்) பள்ளி குழுக்களின் பெருக்கத்துக்கு வழிவகுத்தது. நான் மேலே குறிப்பிட்ட நபர், அத்தகைய குழுவை உருவாக்க முயற்சிக்கிறார். பத்துக்கும் மேற்பட்டவர்கள் வாட்ஸ் ஆப்குழுவில் இருந்தால் போர்தான். அதுவும் பொது முடக்கத்திலிருந்து பிரச்னை மோசமாகிவிட்டதாகவே அஞ்சுகிறேன். இப்போது ஜூம் (மெய்நிகர் சந்திப்பு) செயலியும் சேர்ந்துகொண்டுள்ளது. அது எவ்வளவு பயங்கரமானது என்பதை கற்பனை செய்து பார்க்க முடியுமா?■

செய்தித் துளிகள்

நிதி ஆதரவுக்காகப் பெற்றோர் மீது வழக்கு தொடர்ந்த 41 வயதுக்காரர்

41 வயதான ஃபைஜ் சித்திக்கிக்கு இப்போது வேலையில் இல்லை. ஆகவே, வாழ்நாள் நிதி ஆதரவு கோரித் தன் பெற்றோர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியும் பயிற்சி பெற்ற வழக்கறிஞருமான இவர், “நான் என்னுடைய பணக்காரப் பெற்றோரை முழுமையாகச் சார்ந்துள்ளேன்” என்கிறார். இவருடைய குடும்பத்தில் நடந்த சண்டையால், பெற்றோர் இவரை ஆதரிக்க மறுத்துவிட்டார்கள்.

லண்டனில் தன்னுடைய பெற்றோருக்குச் சொந்தமான £1 மில்லியன் மதிப்புள்ள வீட்டில் இவர் வாடகை கொடுக்காமல் வசிக்கிறார், இவருடைய செலவுகளையெல்லாம் பெற்றோர் கவனித்துக்கொள்கிறார்கள்.

அந்தமானில் நீருக்கடியில் நடக்கும் திருமணங்கள்

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள ஹேவ்லாக் தீவுக் கடற்கரை, நீருக்கடியில் நடக்கும் திருமணங்களுக்காகப் புகழ் பெற்றுவருகிறது. இந்தியாவில் இந்த ஓர் இடத்தில்தான் நீங்கள் நீருக்கடியில் திருமணம் செய்து கொள்ளலாம் என்று பெருமையடித்துக்கொள்கிறார்கள் இந்த ஊர் மக்கள்.

கடல் மட்டத்திலிருந்து சில அடி கீழாகத் திருமண நிகழ்ச்சி நடைபெறுகிறது. மணமகன், மணமகளுடைய நெருங்கிய நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள். தேங்காய் ஓடுகள், பூக்கள், பனை ஓலைகளால் ஆன ஒரு மேடையும் நீருக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது.

அழகான தெரு நாய்களைத் தத்தெடுக்கலாம்

நெவார்க், நியூ ஜெர்சியைச் சேர்ந்த சர் டாரியஸ் பிரௌன் என்ற 14 வயதுச் சிறுவர், நாய்களைத் தத்தெடுக்கும் மையத்துக்குச் சென்றார். இது போன்ற சில மையங்களில் நாய்களின் கூட்டம் அதிகமாகி விட்டதால், நூற்றுக்கணக்கான நாய்கள் கருணைக் கொலை செய்யப்படுகின்றன என்று தெரிந்துகொண்டார்.

பாதுகாப்பு இல்லங்களில் உள்ள நாய்கள் தத்தெடுக்கப் படுவதற்கு உதவத் தீர்மானித்தார். அதற்காக, அவற்றுக்கு அழகான கழுத்துப்பட்டைகளை அவரே தைத்துத் தரத் தொடங்கினார். இந்தக் கழுத்துப் பட்டைகளை அமெரிக்கா முழுவதும் உள்ள விலங்குப் பாதுகாப்பு இல்லங்களுக்கு நன்கொடையாக வழங்குகிறார் இவர்.

கோவிட் போராளிகளைப் பெருமைப்படுத்துவதற்காக 4,000 கி.மீ., நடந்த சாதனையாளர்

மைசூரைச் சேர்ந்த பரத் P N (33), கோவிட் போராளிகள் முயற்சிகளை, தன்னலமற்ற சேவையைப் பெருமைப் படுத்துவதற்காக 4,000 கிமீ “மனிதத்தன்மை நடை”யை நிறைவுசெய்தார். இந்த 99 நாள் பயணத்தில், பரத் நாள்தோறும் சுமார் 45–50 கி.மீ., நடந்தார், கன்னியாகுமரியில் தொடங்கி பதினொரு மாநிலங்களைக் கடந்து ஸ்ரீநகரில் உள்ள தால் ஏரிக்குச் சென்றார். வழியெங்கும் அவர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரம் நடுதலின் முக்கியத்துவம், உடலை நன்கு உறுதியுடன் வைத்துக்கொள்வதுபற்றிய விழிப்புணர்வைப் பரப்பினார்.

ஆட்டோவுக்குள் ஒரு நடமாடும் வீடு

சென்னையைச் சேர்ந்த கட்டுமானக் கலைஞர் அருண் பிரபு NG ஓர் ஆட்டோவை நடமாடும் வீடாக மாற்றியிருக்கிறார். இது சமூக ஊடகங்களில் பரபரப்பாகப் புகழ் பெற்றுள்ளது. இருக்கும் இடத்தைச் செயல்திறனோடு பயன்படுத்துவது எப்படி என்று காண்பிக்க விரும்பிய இவருடைய வடிவமைப்பை மகிந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மகிந்திரா பாராட்டியுள்ளார். இவரிடம் ஒரு பொலேரோ பிக்அப் கிடைத்தால் இன்னும் சிறப்பான ஒரு வீட்டை வடிவமைப்பாரா என்று அறிய விரும்புகிறேன். இந்தச் செய்தியை யாரேனும் அவரிடம் கொண்டுசெல்லுங்கள் என்று எழுதியுள்ளார்.

ரூ.1 லட்சம் செலவில் கட்டப்பட்ட இந்த வீட்டில் சூரிய ஒளிப் பேனல்கள், நீர்த் தொட்டி, மின்கலன்கள், அலமாரிகள், கதவுகள், படிக்கட்டு, கழிப்பறை, ஓய்வெடுக்கும் இடம், படுக்கை அறை, பணி இடம் ஆகியவை உள்ளன, இங்கு ஒருவர் வசிக்கலாம்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணபரதீஷ்.

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.